www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

நவம்.07-13.1993 ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 24

## தெற்கில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்கள்!

## வடக்கு-கிழக்கில் யுத்தத்திற்கான ஆயத்தங்கள்!!

படங்களோடு ரிப்போர்ட்



ஒட்டிப் பிறந்த இரட்டையர்

துப்பாக்கிகளும் ஊன்றுகோல்களும் இராணுவ வாகனங்களும் முச்சக்கர வண்டிகளும்

அரசியல் அலசல்



அம்மாவோடு பேச்சே கிடையாது அநுராவின் புதிய போக்கு



முக அழகு பெற சிக்கன முறை லேடீஸ் ஸ்பெசல்

உலக ரவுண்டப்



சினி விசிட்

நெஞ்சிலிட்ட கோலம்

உண்மைக் கதை + சிறுகதைகள்

## 41 வருடங்களாக வயிற்றில் வாழும் குழந்தை

## மருத்துவ உலகில் அதிர்ச்சி

சிறுகதையோடு பாப்பா முரசு

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
தீபாவளியைக் கொண்டாடும்
வாசக நெஞ்சங்களுக்கு
வசந்தமான வாழ்த்துக்கள்.

வடக்கு-கிழக்கில்
வேட்டோசைகளுக்குக் குறைவில்லை.
அதனால்-
வெடிகளுக்கு ஆகும் செலவு மிச்சம்.
உயிர்கள் மலிவாயும்-செலவாயும்
போய்கொண்டிருப்பதே துக்கம்.

கையிலே வெடித்துத் தொலைத்து விடுமோ
என்று பயந்து
வெடிகொளுத்தும் பிள்ளையின் பின்னால்
அம்மா பதறி அலைந்தது
அந்தக்காலம்.

இப்போது
வெடிக்கும் துப்பாக்கிகளோடு
சிறுவர்களும் சிநேகமாகிவிட்டார்கள்.
மாற்றங்கள் என்பவை
காலத்தின் நியதிகள்தான்.
மனித உணர்வின் உன்னதங்களுக்கு
மேலும் செழிப்பூட்டும் மாற்றங்கள்
என்றால் மனம் திறந்து வரவேற்கலாம்.
துரதிஷ்டவசமாக- இங்கே
மாற்றங்கள் என்பவை
மக்களுக்கு மனவேதனையைக்
கொடுப்பவையாக மாறிக்கொண்டிருக்கின்றன.

அப்பாவைவிட
ஆயுதம் முக்கியம்.
மனிதாபிமானத்தை விட
மரமண்டைத் துப்பாக்கி அவசியம்.
மக்களைவிட
தோட்டாக்கள் முக்கியம்.
இப்படியொரு எண்ணப்பாடு
வெளிப்படையாக சொல்லப்படாவிட்டாலும்
செயல்பாடுகளில் வெளிப்படுகிறது.

இது ஏதோ ஒரு இயக்கம்
குறித்துமட்டுமே சொல்லும் விமர்சனமல்ல.
பொதுவாகவே
அவ்வாறான போக்கு
சகல தரப்புக்களிலும் தெரிகிறது.

அனுபவம், தகுதி, தரம்
வரையறைகள், வகுக்கப்பட்ட நடைமுறைகள்
என்பவை காணாமல் போய்விட்டன.

ஆயுதம் இருந்தால் இயக்கம்,
அறிக்கைவிட்டால் தலைவன்,
பேசத் தெரிந்தால் பிரதிநிதி!
தகுதி என்ன? கவனியாதே.
இதுதான்-இங்கே
இரகசியமான சூத்திரமோ
என்று சந்தேகம் வருகிறது.

எல்லாமே விளையாட்டாகிவிட்டது.
வேட்டோசைகளே
இங்கே விழா நடத்துகின்றன.
அதிகாரத்தில் இருப்பவர்களின்
சொந்த விருப்பு வெறுப்புக்களே
இங்கே உலா நடத்துகின்றன.

தீர்வுகள், தவறுகள் திருத்தப்படுதல்கள்
என்பவையெல்லாம்
எட்டாக் கனிகளாக இருக்கின்றன.

தீய அசுரன் ஒழிக்கப்பட்ட
திருநாளே தீபாவளி என்று சொல்லுவார்கள்.
அசுரத்தனங்கள்
இங்கே ஒழிவது எப்போது?
ஒழிக்கப்படுவது எவ்வாறு?
என்பதுதானே
இங்குள்ள மக்களின் தினசரி ஏக்கம்.

ஒரு அரக்கன் என்றால்
சமாளித்து விடலாம்.
இங்கே எத்தனை அசுரர்கள்!
எப்படிச் சமாளிப்பது?

அசுரத்தனங்களை
சங்காரம் செய்யப்போவதாக
சபதம் செய்தவர்களும்
அசுரர்களாக மாறியது
இந்தப் பூமி செய்த பாபமா?
இந்த தீராத சோகம் மீது
அமைதி என்னும்
வெளிச்சம் பாயுமா?
சோகத்தைக் கழுவுமா?
கிழக்கு வெளுக்குமா?

எல்லாமே கேள்விகள்.
கேள்விகளின் தொகை அதிகம்
விடைகள் மட்டும் காணோம்.

மீண்டும்-
25வதுவெள்ளி விழா முரசில்
வந்து கலக்கும் வரை-

அன்புடன்
ஆசிரியர்.

## அட... கமரா உலா!
## நீங்கள் ரெடியா?

உங்களிடம் கமரா இருக்கிறதா? இருந்தால் இப்போதே புறப்படுங்கள். உங்கள் சூழலில் கண்ணில்படும் வியப்பான- வித்தியாசமான காட்சிகளை கமராச் சிறைக்குள் மடக்குங்கள். பத்திரமாய் எமக்கு அனுப்புங்கள். சிறந்தவை பின் அட்டையில் 'அட.... கமரா உலா' பகுதியில் இடம்பெறும். கலர் படங்களே விரும்பப்படுகின்றன. முகவரி-

அட...கமரா உலா!
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு -5.

தினமுரசு
போன்: 820265

## கவிதைப்போட்டி இல-21

### பாராட்டுக்குரியவை

**ஏது மீதி!**
போரில்
பெற்றவர் போக,
பாரில்
பால் புட்டிதான்
மீதி!
இ. ஸ்ரீதர்
பேராதனை வளாகம்.

உயிர் குடித்த
பூகம்பத்தில்
உதிராத
மொட்டொன்று
றஹ்மத் கபூர்
அக்குறணை.

**பூகம்ப பூமி**
இது.....
நடுங்கிய பூமி
உயிர்களை விழுங்கிய
கொடுமையின் பதிப்பு
சிதைவுகளிடையே
சிக்கிய மதலையின் தவிப்பு.
ஷர்மிளா இஸ்மாயில்
கண்டி.

"அழிந்து போன
அகராதியில்
அகரத்தைத் தேடும்
பாலகன்"
தேனூர் அருள் ஆனந்.

**சதி!**
ஏன் இந்தக் கதி?
யார் செய்த சதி?
கவிதாதாசன்
இறக்கமம்.

**யார் பிழை**
பெற்றவள் விட்ட பிழையோ!
அன்றி பெரும்
போரால் வந்ததிந்த நிலையோ!!
ச. மகாலிங்கம்
வெளிமடை.

**வழிகாட்டு**
குடும்பத்தை
பறிகொடுத்தேன்!
ஆதரிக்க
யார் வருவார்?
ஆண்டவனே
வழிகாட்டு!
ஏ. அஹமது ஜுனைது
ஏறாவூர்-06.

**தாய்!**
'பங்கருக்குள்' ஒடு
இன்னொரு 'ஷெல்'
உன்னையும்
விட்டுவைக்காது.
கே. ஜெயதுரை
கொட்டகலை.

**அன்னை எங்கே?**
அருந்த அமுதம்
இருந்த போதும்
அணைத்து மகிழ
அன்னை இல்லையே!
லேகா
கொழும்பு-13.

**தீர்ப்பா?**
கல்லோடு கல்லாய்
உயிருடன் உன்னை
குப்பையில் எறிவதால்
சனத்தொகை
பிரச்சினை தீருமா...?
அருஸியா ஏ. ஹஸன்
உக்குவெல.


இனப் போர்
தந்த
வீதியோரர
விலாசமற்ற
பரிசு
கிரிஸ்டினா ராஜேஸ்வரி
பதுளை.

**ஆராய்ச்சி**
அந்த பென்னம்பெரிய பூகம்பம்
எப்படி வந்ததென்று
இந்த சின்னஞ்சிறிய பூமகன்
ஆராய்ச்சி செய்கிறானோ?
ஏ. எம். அபுல்காசிம்
மன்னார்.

**ஒத்திகை**
நாளைய குடிமகனின்
இன்றைய ஒத்திகை!
ஆர். பாலகிருஷ்ணன்
மாத்தளை.

**உறவுகள்**
சிதைந்து போன
சமாதானத்தினுள்
புதைந்து போனதோ
உன் உறவுகள்.
திருமலை முகமட்சாலி.

## கவிதைப் போட்டி இல-24



*உங்கள் உணர்வுகளில் உருவாகும் எண்ணங்களைத் தபாலட்டையில் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.11.93.*

-முகவரி-
கவிதைப் போட்டி இல:24
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு -5

விதைக்கப்பட்டவற்றில் வெற்றிமுகம்
கண்டதுவும், வியக்கப்பட்டவையும்.

### பரிசுக்குரிய கவிதை

**தர்மம் என்ன?**
ஆட்சியிலும் நீதி முறை
பாசாங்கு நித்திரையாம்.
இயற்கையிலும் நீதி நெறி
கும்பகர்ண பரம்பரையோ?
தந்தபால் தீருமுன்னே
தவிக்கவிட்ட தர்மம் என்ன?
திருமதி. க. சுசிலா
கல்லடி வேலூர்-மட்டக்களப்பு.

**"பூகம்பம்"**
பூமி அதிர்ச்சியில்
பூந்தளிர் தவிக்கிறது
பூவை எனக்குள்ளோ,
பூகம்பம் வெடிக்கிறது.
தி. கஜேந்தினி
திருகோணமலை.

**அநியாயம்**
அன்னை மடியில்
அன்பு பொழிய
ஆண்டவன் ஏனோ
விரும்பவில்லை.
செல்வி கிருபைரத்தினம்
அருட்செல்வி
கதிரவெளி.



உடைந்தது
சுவர்கள் மட்டுமல்ல
இந்த தேசமும்தான்!
கே. கோவிந்தராஜ்.
வாழைச்சேனை

**உரிமை**
மணல் வீடாவது கட்ட
எனக்குக் கொஞ்சம்
மண் தாருங்கள்...
அ. பாலன்
திருகோணமலை.

# வாசக(ர்)சாலை

வெளிப்படைத் தன்மையோடு அரசியல் கண்ணோட்டங்களை தருகிறீர்கள். நாரதர் ஒரு கோணம், ராஜதந்திரி மற்றொரு கோணம். அய்யாத்துரையாரோ தனிக்கோணம். பல்வேறு பார்வைகளுக்கு இடம் வழங்கும் சிறப்பு முரசின் தனிப்பாணி.
**என்-தங்கராஜா-மட்டக்களப்பு.**

•

அரசியல் தளத்தில் கருத்து மோதல்கள் மறைந்து வருகின்றன. மாற்றுக் கருத்துக்களை கேட்பதும், அனுமதிப்பதும் கூட அருகி வருகின்றன. முரசு மாற்றுக் கருத்துக் களை அனுமதிப்பது வரவேற்கத் தக்கதே. முரசாவது ஜனநாயகத்தை நினைவூட்டட்டும்.
**அ. சிவப்பிரகாசம்-கொழும்பு-7.**

•

சுரேஷ் வாரா வாரம் எழுதும் சின்னக் கதைகள் சிறப்பாக அமைகின்றன. அதுசரி அஸ்வதி எங்கே?
**எஸ். மனோகரி-நீர்கொழும்பு.**

•

நகர ரவுண்டப் சூப்பர். ஒற்றன் எங்காவது தர்ம அடி வாங்கப் போகிறார். பின்னர் நமக்கு செய்திகள் கிடைக்காமல் போய்விடும். ஒற்றனை கவனமாக நடக்கச் சொல்லவும்.
**பி. ரோகினி- ஹட்டன்.**

•

அன்பே... நீ வாரமொருமுறை வந்தா லென்ன. எந்நாளும் நினைவில் நிலைத்து நிற்கும். உன் சேவைகளால் எத்தனையோ நெஞ்சம் உன்னிடம் தஞ்சம். வாழ்க வளமுடன் என வாழ்த்துகிறோம்.
**ஏ. ஸி. எம் றிஸானா, ஏ. எம். ஆசிக்கா, எம். எம். சியாதா, பி. எம். நிஸ்தாரா, எம். எச். சியானா, எஸ். எச். றிஸ்னா, எஸ். எச். ஹிமாயா- பள்ளிவாசல்துறை அகதிகள் முகாம்.**

•

கவர்ந்ததென்ன மாயம்....?
யாமறிந்த "உதயதாரகை" முதல் இன்றுள்ள அனைத்து இதயதாரகை களையும் பார்க்க எம்மிதயத்தில் தினமுரசிற்குத்தான் பெரும்பரப்புள்ள இடம். அப்படிப்பட்ட அளவிற்கு முரசின் பெருமை என்னவோ? இரும்பில்லாமல் காந்தம் என்ன கவருமா? கவர்ந்த பொருட்களில் தினமுரசுதான் எங்களிடம் நன்றாக கவரப்பட்ட பொருள்.
**கே. எம். கந்தையா-வெதமுள்ள.**

•

விறு விறுப்பு என்றால் என்ன என்று தெரியாமல் இருந்தவர்களுக்காக எழுப்பப்பட்டதோ தினமுரசு வாரமலர். தேனென்றால் நாவில் மட்டும் தானே இனிக்கிறது. நீயோ அதிலும் ஒரு படிமேல் சென்று நெஞ்சமெல்லாம் இனித்து அடுத்தவாரத்தை அவசரமாய் அழைக்கிறாயே!
**செல்வி. சுல்பிகா ராஸிக்- முத்துவெல்ல மாவத்தை.**

•

ரசிகன் எழுதும் கண்ணே மதுமிதா புதுமைத் தொடர் சூப்பர். யார் ஸார் இந்த முகமூடி ரசிகன்?
**செல்வி. ஹுஸைமா தாஹிர்-புத்தளம்.**

•

சூடான பக்கச் சார்பற்ற அரசியல் விமர்சனங்கள் எங்களை மிகவும் கவர்கின்றன. அதிரடி ஐயாத்துரைக்கு ஒரு சபாஷ்! துணிவுடன் பணி தொடர வாழ்த்துகின்றோம்.
**கோவுஸ்ஸ. ராம்ஜீ கோவிஸ் டிவிசன், எல்ல.**

•

என் அன்பிற்கினிய தினமுரசே!
உனது இலக்கிய நயம் கண்டு எனது உள்ளம் அடையும் இன்பம் வருணனை வார்த்தைகளால் கூறிவிட முடியாது. வளர்க மேலும் புதுப் பொலிவுடன்.
**சீனித்தம்பி செல்வநாயகம்-கொழும்பு-15.**

•

அதரங்கள் அணைத்து உன்
புதுரகமான நாமந்தனை
உச்சரிக்கையில் நாவிற் தேன்மதுரம்
முரசம் கொட்டி விளம்பரப்படுமுனை
விரல்களாரத்தழுவி விழி மேயும் நகரும்
சிகரந் தொட்டு ஆழிவரை அதிசயங்கள்
அதிர வைக்கும் ரகசியங்கள்
திரை கடலோடி ஆய்ந்த நற்றிரவியம்
பத்திரிகையுலகில் முடிசூடா மன்னனாய்
புவியுள்ளளவுமுன் பொன் சேவை
வளரவே வாழி!
**மின்ஹா இம்டியாஸ்-கொழும்பு-9.**

•

தினமுரசு வழங்கும் மருத்துவ விந்தைகள் வியக்கவைப்பன மட்டுமல்ல, பிரயோசனமானவையும், தொடர்ந்து தரமான ஆக்கங்களை வழங்கி என்றும் சிறப்புடன் மலர வாழ்த்துக்கள்.
**திருமதி. வளர்மதி மூர்த்தி நமுனுகல.**



அன்பின் முரசே!
உன்னை மிக அண்மையில் தான் நான் சுவைத்தேன். எதை முதலில் படிப்பதென்று தெரியாமல் தவித்தேன். அம்மம்மா நீ சுமந்து வரும் அம்சங்கள் யாவும் சுப்பர். என்றும் என் உயிர் நீதான். வாழ்க என்றும் உன்பணி.
**திருமதி. நேசமலர் நாகநாதன் இரத்தோட்ட.**

•

ஜீவன்களின் ஏக்கங்கள்
இள நெஞ்சின் இதயங்களைக் குளிர வைக்கும் தினமுரசு வாரமலரே நீ.. வாரத்தில் ஒரு முறை பூப்பதைப் பார்த்து நாள் தோறும் பூக்க மாட்டீரோ என்ற ஏக்கத்தில் தவிக்கும் ஜீவன்கள்.
**இஸ்மாயில், சுபைதா, முபாஸா, ஜெரீனா, நஜிமுதீன், நிஸா, ஜெஸ்மி, ஜ.ஃபர், மொஹிடீன் புதியகாத்தான்குடி-03.**

•

எக்ஸ்ரே ரிப்போர்ட், உலக ரவுண்டப், அலசுவது ராஜதந்திரி போன்ற பகுதிகளில் நல்ல செய்தி களையும் மற்றும் உலக அதிசயங்கள் கவிதைப்போட்டி, தேன்கிண்ணம், போன்ற பகுதிகளில் உள்ளத்தை உருக்கும் கவிதைகளைம் இதைப் போன்ற இன்னோரன்ன ஆக்கங்களை வெளியிடுகின்ற தினமுரசே உனக்கு தினம் தினம் என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு தினமுரசு ஆசிரியர் அவர்களுக்கும் என் வாழ்த்துக் களோடு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். வாழ்க தினமுரசு!
**எம். ஐ. சர்தாஹ்-கந்தளாய்.**

•

முரசே!
உன் ஜொலிப்பில் லயித்துப் போனவள் நான்!
அற்புதங்களை படைத்துக் கொண்டி ருக்கிறாய் நீ.
நித்தம் நீ மலர வேண்டுமென அவாக்கொள்பவள் நான்.
மாறாக வாரமொருமுறை மலர்பவள் நீ.
இது உந்தனுக்கு சரிதானோவென, ஆராய வேண்டிய பொறுப்பு உந்தனுக்கே.
**செல்வி. சித்தி மபாஹிரா ஷாபி அவிசாவளை.**

•

தினமுரசே உன்னை பாராட்டாமல் இருக்க முடியவில்லை. பக்கம் இருப தானாலும் நாற்பது பக்கத்திற்கு சமன். அத்தனையும் தேனாய் தித்திக்கின்றன. வாழ்க உன் சேவை.
**என். நேரு-நீர்கொழும்பு.**

•

வாரத்தில் ஒரு முறை உதித்து எங்கள் வலம் வரும் தினமுரசே, உன் மேனியில் சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் சுவாரசியமாக உள்ளன. நீ வாழ்க.
**துரைராசா சாந்தி-திருமலை.**

•

என் அன்புக்குரிய தினமுரசே! வாரம்தோறும் பவனி வந்து சூடு சுவை சுவாரசியம் எனும் பல ஆக்கங்களை அள்ளித் தந்து மனதை கொள்ளைக் கொள்ளும் தினமுரசே, வாழ்க. வளர்க என வாழ்த்துக்கள்.
**திரு. பாலேந்திரன் மஞ்சு திருமலை.**

•

எனது வாழ்த்துக்களுடனும் வணக்கத் துடனும் எழுதுவது- அரசியல் செய்திகள் தரும் விதம் நன்று. மக்களுக்காக குரல் கொடுக்கும் ஆசிரியருக்கு எனது நன்றிகள். ஹலோ சார் ஒற்றனுக்கு வயதென்ன? அவருக்கு ஏனிந்த தேவையற்ற வேலை யெல்லாம். பெண்களை இவ்வளவு மோசமாக வர்ணிக்கின்றார்களே இது தேவைதானா? நியாயங்கள் மாறுமோ, என்ற குட்டிக்கதை நன்றாக இருந்தது. ஒற்றனை கண்டித்து வையுங்கள்.
**வாசகி-வாணி எந்தளை-வத்தளை.**

•

வாரமலர் தினமுரசே வாழ்வே சுமையாக இருந்த எனக்கு உன்வரவு மனமகிழ்வை ஏற்படுத்தியது. மகிழ்ச்சி யில்லா என் இதயத்தினுள் புதிய தென்ற லாய் நீ வந்து குடிபுகுந்தாய். மலர்களில் பலவகையுண்டு. என் மனம் கவர்ந்த மலர்களில் முதலிடம் மலரே தினமுரசு உனக்குத்தான். இனி நீயின்றி நானில்லை.
இனி உன் வரவை எதிர்பார்த்த வண்ணம் இருப்பேன். உன் சேவை மென்மேலும் பிரகாசிக்க வாழ்த்துகிறேன். வாழ்க வளர்க வளமுடன்.
**தினமுரசு பிரியர்- ஆறுமுகம் விஜயகுமார்-நு/பம்பரகெலை எஸ்டேட்.**

# "தமிழர் பிரச்சனையைத் தீர்க்க அரசியல் தீர்வே முடிவு" பிரிட்டிஷ் பொதுநலவாயக் காரியாலயம் கூறியுள்ளதாம்!

## சர்வதேசத் தமிழர் ஒன்றியம் தகவல்

**இலங்கையின் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழர்களை சர்வதேச ரீதியாக அங்கீகரிக்குமாறு சர்வ தேச தமிழர் ஒன்றியம் பிரிட்டிஷ் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்து கடிதம் அனுப்பியிருந்தது. அந்தக் கடிதத்திற்கு இப்போது பதில் கிடைத்திருக்கிறது.**

கடந்த யூலை மாதம் பிரிட்டனில் உள்ள சர்வதேச தமிழர் ஒன்றியம், 1983 யூலைக் கலவரத்தின் 10வது ஆண்டை நினைவு கூரும் நிகழ்ச்சி ஒன்றை நடத்தியது. கறுப்பு யூலை என்று நடத்தப்பட்ட அந்த நிகழ்ச்சியில் பிரிட்டிஷ் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்து ஒரு கடிதம் அனுப்பப்பட்டது.

இலங்கையின் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழர்களை சர்வதேச ரீதியில் அங்கீகரிக்குமாறும், தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவளிக்குமாறும் அக்கடிதத்தில் கோரப்பட்டிருந்தது.

தாம் அனுப்பிய கடிதத்திற்கு இப்போது பதில் கிடைத்திருப்பதாக சர்வதேச தமிழர் ஒன்றியம் கூறியுள்ளது.

பிரித்தானிய வெளியுறவு, பொது நலவாயக் காரியாலயம் பதில் கடிதத்தை தமக்கு அனுப்பி வைத்துள்ளதாக சர்வதேச தமிழர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"இலங்கைத் தீவின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழர் தமது சுயநிர்ணய உரிமைகளைத் தாமே தீர்மானிக்கும் அந்தஸ்து பெற்றுள்ளனர். தமிழர் பிரச்சனையின் பின்னணி பற்றியும், கடந்த பத்தாண்டு காலமாக இலங்கைத் தீவின் வடக்கு-கிழக்கு பகுதி மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள நாட்டம் கொண்டுள்ளனர். இது தொடர்பாக பிரித்தானிய அரசின் கொள்கை எப்போதுமே தெளிவாக உள்ளது.

"பிரிட்டிஷ் அரசு மாத்திரமல்ல ஏனைய ஐரோப்பிய நட்பு நாடுகளும் இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு ஒரு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் அக்கறையாகவேயுள்ளன.

"பிரித்தானிய வெளியுறவு, பொது நலவாயக் காரியாலயம் தமிழர் பிரச்சனைக்கான தீர்வொன்றைக் காணும் பேச்சுக்களை ஆரம்பிக்க உதவுவதற்கு எப்போதும் தயாராகவே இருக்கிறது.

"சர்வதேச தமிழர் ஒன்றியத்தால் பிரிட்டிஷ் பிரதமருக்கு அனுப்பிய கடிதமும் அவருக்கு வாசித்துக் காட்டப்பட்டது."

இவ்வாறு பிரிட்டிஷ் வெளியுரவு, பொதுநலவாயக் காரியாலயம் தமக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளதாக சர்வதேச தமிழர் ஒன்றியம் கூறியிருக்கிறது.

சர்வதேச தமிழர் ஒன்றியம் விடுதலைப்புலிகள் அமைப்பினரின் ஒரு அங்கம் போலவே செயல்பட்டுவருகிறது.

பதில் கடிதத்தில் பிரிட்டிஷ் பிரதமரின் கருத்து என்று எதுவும் கூறப்படவில்லை. அவருக்கு கடிதம் வாசித்துக்காட்டப்பட்டது என்பதை மட்டுமே வெளியுறவு, பொதுநலவாயக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

# "வெட்டுப் புள்ளியல்ல வேட்டுப் புள்ளி!"

## வடபகுதியில் பேரணிகள்

1992ம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் வடபகுதி மாணவர்களின் பெறுபேறுகள் குறைவாக இருந்தன.

தற்போதைய யுத்தச் சூழலும் அதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் பாலசுப்பிரமணியம், பெறுபேறுகள் குறைந்தமைக்கு அரசே காரணம் என்று குற்றம் சாட்டியுள்ளார்.

வெட்டுப்புள்ளி முறை தமிழ் மாணவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அதனை அரசு கைவிட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வெட்டுப்புள்ளி முறையைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் கடந்த 28ம் திகதி கண்டனப் பேரணி ஒன்று நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் அதில் கலந்து கொண்டனர்.

"வெட்டுப் புள்ளி தமிழரின் கல்விக்கு வேட்டுப்புள்ளி" என்று கோஷமும் எழுப்பப்பட்டது.

யூ.என்.எச்.சி.ஆர் யாழ் பிரதிநிதியிடம் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் யாழ் செயலகத்துக்கு சென்ற ஊர்வலத்தினர் யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபரிடம் மகஜர்களை சமர்ப்பித்தனர்.

ஜனாதிபதி, கல்வி, உயர்கல்வி அமைச்சர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, யாழ் அரச அதிபர் ஆகியோருக்கு தனித்தனி மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

நவம்பர் 6ம் திகதி கொழும்பு வரும் யாழ்பல்கலைக்கழக மாணவர் குழு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவோடு பேச்சு நடத்த விருக்கிறது.

வெட்டுப்புள்ளி முறையைக் கண்டித்து கிளிநொச்சியிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது. கிளிநொச்சி பிரதிக்கல்விப் பணிப்பாளர் தர்மரட்ணம் அதில் கலந்து கொண்டு அரசாங்கத்தின் முடிவைக் கண்டித்து உரையாற்றினார்.

### சந்தை மூடப்படுவதால் அசுத்தமாகும் நகரம்!

(திருகோணமலை நிருபர்)

போயா தினங்களில் திருகோணமலை பொதுச் சந்தை முற்றாகவே மூடப்பட்டுவிடும். வியாபாரிகள் பல்வேறு இடங்களிலும் தற்காலிகமாக வியாபாரம் செய்வதால் நகரம் அசுத்தமுறுகிறது.

சில வருடங்களுக்கு பொதுச் சந்தையுடன் போயாச் சந்தையும் நடத்தப்பட்டு வந்தது. எனினும் தற்போது இரண்டு சந்தைகளும் இல்லாமற் போனதால் பொது மக்களும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

சந்தை மூடப்படுவதால் வியாபாரிகள் பல்வேறு இடங்களிலும், வணக்கஸ்தலங்களுக்கு அருகிலும் தற்காலிக வியாபாரத்தைத் தொடர்வதால் சூழல் அசுத்தமடைவதுடன் போக்குவரத்துக்கு இடையூறுகளும் நேருகின்றன.

### அம்பாறையில் அகதி முகாம்கள் மூடப்படுமா?

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அகதிமுகாம்களை மூடுவது பற்றி யோசிக்கப்படுவதாக வெளியாகியுள்ள செய்தியால் அகதிகள் கவலையடைந்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் 21 அகதி முகாம்கள் இருக்கின்றன. 14,612 அகதிகள் இருக்கின்றனர்.

இந்த அகதிகளை டிசம்பர் மாத இறுதிக்குள் சொந்த இடங்களில் குடியமர்த்த முயற்சி நடக்கிறது.

தற்போதுள்ள சூழ்நிலையில் சொந்த இடங்களில் சென்று வாழ்வதற்கு பாதுகாப்பான நிலமை இல்லை என்று அகதிகள் கூறுகின்றனர்.

### பிரபாகரனின் புதிய புத்தகம்!

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனின் "என் மக்களின் விடுதலைக்காக" என்னும் நூல் ஒன்று யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் திரு.பிரபாகரனால் வெளியிடப்பட்ட முக்கியமான கருத்துக்கள், அறிக்கைகள், பேச்சுக்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக அந்த நூல் வெளியாகியுள்ளது.

பிரபாகரனின் பல்வேறு புகைப்படங்களும் அதில் வெளியிடப்பட்டுள்ளன.




### கிண்ணியா ப.நோ.கூ சங்கம் கட்டடத் திறப்பு விழாவும் மூடு விழாவும்

(கிண்ணியா நிருபர்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் கிண்ணியா பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் அமைக்கப்பட்ட புதிய கட்டடமும், கிராமிய வங்கியொன்றும் துறைமுகங்கள், கப்பற்றுறை இராஜாங்க அமைச்சர் அல்-ஹாஜ்- எம்.ஈ.எச்.மஹ்ரூப்பினால் கடந்த 26.10.1993 திகதி மிகவும் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

இவ்வைபவம், இச்சங்கத்தின் தற்காலிக தலைவரும், கிண்ணியா பிரதேச செயலாளருமான, ஜனாப்.எம்.ஏ தாஜுதீன் தலைமையில் நடைபெற்றது.

இதனையடுத்து நீதிமன்ற உத்தரவு பேரில் இச்சங்கத்தின் முன்னாள் தலைவரில் ஒருவரான ஜனாப்.ஏ.ஸீ காலிதீன் கடந்த 27.10.93 அன்று இச்சங்கத்தில் புதிய தலைமைத்துவத்தை ஏற்க வந்துள்ளார்.

தற்போது, இச்சங்கத்தின் இரு தலைவர்களுக்கும், கூட்டுறவு அதிகாரிகளுக்குமிடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக இப்புதிய கட்டடமும், கிராமிய வங்கியும், சங்கக் காரியாலயம் யாவும் 28.10.1993 முதல் திடீரென மூடப்பட்டுவிட்டன.

### நிரம்பிய குளங்கள்

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து பெய்த மழையினால் அங்குள்ள குளங்கள் நிரம்பி வழிகின்றன.

விவசாய நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ளன.

சுகாதார சீர்கேடுகள் நிலவுவதால் மழைக்காலத்தில் தொற்றுநோய்கள் மேலும் தீவிரமாகப் பரவக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

வீதிகளில் வெள்ளம் தேங்கிநிற்பதும் தொற்று நோய்கள் பரவக் காரணம் என்று யாழ் வைத்தியசாலை வட்டாரங்கள் கூறுகின்றன.

இதே வேளை கடந்த 30ம் திகதி வாந்திபேதியினால் யாழ்ப்பாணத்தில் 2 பேர் மரணமானார்கள். இதுவரை 11 பேர் வாந்திபேதிக்கு பலியாகியுள்ளதாக, யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன.

தருவது **தமிழகச் செய்திகள்** ஏழுமலை

# உறைவிட்டுக் கிளம்பியது போர்வாள்! முடிவு காணாமல் உறைக்கு திரும்பாது!!

## தடுமாறுகிறார் கலைஞர்!


**எம்.ஜி.ஆர் தி.மு.கவில் இருந்து விலகியபோது ஏற்பட்ட பிளவின் விளைவுகளில் இருந்து இன்றுவரை தி.மு.க மீளமுடியவில்லை.**

இப்போது மற்றொரு பிளவு ஏற்படும் கட்டத்திற்குள் கட்சி நுழைந்திருக்கிறது. இதுவரை தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதியை நேரடியாகத் தாக்கிப் பேசுவதை தவிர்த்து வந்த வை.கோபால்சாமி இப்போது கடும் தாக்குதல் தொடுக்க ஆரம்பித்துவிட்டார்.

தன்னை கட்சியில் இருந்து விலக்க கலைஞரே சதி செய்தார் என்று பகிரங்கக் கூட்டத்தில் வை. கோபால்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ் நாட்டில் கலைஞர் கருணாநிதி ஒரு புறமும், வை.கோ. மறுபுறமும் சுற்றுப்பயணப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வை.கோபால்சாமியின் கூட்டங்களுக்குப் பெருந்தொகையான தொண்டர்கள் திரளுகிறார்கள்.



500 கார்கள் பவனியாக பின்னால்வர வை.கோபால்சாமி செல்லும் காரின் முன்பாக கறுப்பு உடையணிந்த தொண்டர்கள் மோட்டார் சைக்கிள்களில் அணிவகுத்துச் செல்லுகின்றனர்.

கட்சி குடும்பச் சொத்தாக மாறுவதை தி.மு.க தொண்டர்கள், முக்கியமாக இளைஞர்கள் விரும்பவில்லை.

கலைஞரின் இரு மனைவிகளும் இரு மகன்களும், மருமகன் முரசொலி மாறனும் கட்சிக்குள் ஆதிக்கம் செலுத்துவது தொண்டர்கள் மத்தியில் புகைச்சலை கிளப்பியிருக்கிறது. கலைஞருக்கு அடுத்த தலைவர் வை. கோபால்சாமி என்பதுதான் தொண்டர்களின் முடிவு.

வை.கோபால்சாமி துணிச்சலானவர். வெளிப்படையாகப் பேசக்கூடியவர். ஆனாலும் கலைஞர் மீது மாறாத பாசம் கொண்டிருந்தவர்.

கலைஞர் தனக்கு சமமான தலைவர் உருவாவதை எப்போதும் விரும்பியது கிடையாது. அதனால்தான் எம்.ஜி.ஆரும் பிரிந்து சென்றார்.

இப்போது தவறு வை.கோபால்சாமி மீது அல்ல. அவர் பலமுறை கலைஞரைச் சந்தித்து தன் நிலையை வேதனையோடு தெரிவித்தார். கண்ணீர்விட்டார். கலைஞரின் கூட இருக்கும் துதிபாடிகள் கலைஞரை குழப்பி விட்டார்கள்.

கலைஞருக்கு ஒரு பெரிய பலவீனம். துதிபாடிகளை நம்பிவிடுவார். முகஸ்துதிகளுக்கு மயங்கிவிடுவார். அதனால் உண்மையான தொண்டன் யார் போலி யார் என்பது அவருக்கு தெரியாமல் போய்விடுகிறது.

அதன் விளைவு கட்டுக்கோப்புக்கு பெயர்போன கட்சி இன்று பிளவின் வாசலில் நிற்கிறது. இதுதான் வை.கோபால்சாமி ஆதரவாளர்களின் வாதம்.

இந்த வாதத்தில் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

வை.கோபால்சாமி தான் தலைவராக வேண்டும் என்று திட்டமிட்டு நடந்தவரல்ல.

குடும்பபாசமும், கலைஞரை சுற்றியுள்ள தவறான ஆலோசகர்களும் வை.கோபால்சாமியை எதிரியாக கருதவைத்து விட்டார்கள்.

அரசியலில் குடும்ப ஆதிக்கம் எந்தளவு ஆபத்தானது என்பதற்கு தி.மு.க உட்பூசலும் ஒரு சான்றாகும்.

தந்தை-மகன்-அண்ணன்-தம்பி கணவன்-மனைவி உறவுகள் கட்சிக்குள் கொண்டுவரப்பட்டால் எவ்வாறு நியாயப்படுத்தினாலும் தவறான விளைவுகளுக்கே அது வழிவகுக்கும்.

வை.கோபால்சாமிக்கு முன்பாக, அனுபவமுள்ள கலைஞர் திணறுகிறார். அவரது அற்புதமான பேச்சாற்றல் தடுமாறுகிறது.

அர்ஜுனனுக்கு வில்வித்தை கற்றுக்கொடுத்தது துரோணர்தான் என்று கலைஞர் ஒரு கூட்டத்தில் கூறியிருந்தார்.

அந்த அர்ஜுனன் போர்க்களத்தில் நின்று துரோணரைக் கண்டு பதைத்தான். கடமையைச் செய் என்று தேரோட்டி கண்ணன் புத்தி சொன்னான். எனக்கு அருகே காரோட்டி கண்ணன் இருக்கிறார். (முன்னாள் அமைச்சர் கண்ணப்பன்) என்று வை.கோபால்சாமி சூடாக பதில் சொல்கிறார்.

மோதல் சூடு பிடித்திருக்கிறது.

குடும்பமா?கட்சியா? பிரச்சனையின் மையம் அதுதான். கட்சிக்காக உண்மையாக உழைத்த தொண்டனா அல்லது கோடிகள் சுருட்டிய ஆற்காடு வீராசாமி போன்ற கலைஞரின் தனிப்பட்ட நண்பர்களா? யார் முக்கியம்?

வை.கோபால்சாமி கேட்கிறார். தொண்டர்கள் யோசிக்கிறார்கள். தொண்டர்கள் யோசிக்கத் தொடங்குவதே தலைமைக்கு ஆபத்துத்தான்.

தன்கையில் இருந்த போர்வாளான வை.கோபால்சாமியை வீசியெறிய நினைத்தது கலைஞர் செய்த மாபெரும் தவறு.

விசுவாசம் துரோகம் என்று சொல்லப்பட்டதில் வை.கோ என்ற போர்வாள் உறைவிட்டுக் கிளம்பியிருக்கிறது. முடிவு காணாமல் உறைக்குத் திரும்பாது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்


## விளம்பரப் பகுதி

SARIKA TEX

Ladies Tailoring

24 மணிநேரத்தில்

சாறி பிளவுஸ்
சல்வார் கமீஸ்

உங்கள் உடலமைப்புக்கேற்றபடி
நவீன முறையில் தைத்துக்கொள்ள

*Hewa Shopping Complex*
*No. 69/5-1/1, 1st Floor,*
*Galle Road,*
*Dehiwela South.*



### மலையாள மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட் டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
**33, Daily fair Complex, NUWARA ELIYA.**
**Dial: 052-2508 & 3093**
**Celltel. 072-26088, 078-61933**

**COLOMBO BRANCH:**
26, CHARLYMONT ROAD,
WELLAWATTA.
DIAL:01-583250. FAX: 0094-523093

*ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம்.*

**தினமுரசில் விளம்பரம் செய்யுங்கள்.**
**வியாபாரத்தைப் பெருக்குங்கள்.**
**தொடர்புகொள்க: 820265**


## மருந்துக்கு தட்டுப்பாடு நோயாளிகள் பெரும்பாடு!

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலையிலுள்ள இலவச ஆயுர்வேத வைத்திய சாலைகளில் அடிக்கடி மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது. அடிக்கடி தேவைப்படும் அத்தியாவசிய மருந்து வகைகள் மாதத்தின் முதலிரு வாரங்களிலேயே முடிந்து விடுவதாலேயே இத்தட்டுப்பாடு ஏற்படுகிறது.

இதனால் மருந்தகத்துக்கு வந்து தம்மைப் பரிசோதனை செய்வித்துக்கொண்டு வெளியில் பணம் கொடுத்து மருந்து வாங்க வேண்டிய நிலைக்கு நோயாளர்கள் தள்ளப் பட்டிருக்கிறார்கள்.

உயர்ந்து வரும் மருந்து விலைகளுக்கும் வளர்ந்து வரும் தேவைகளுக்கேற்பவும் பண ஒதுக்கீடு உயர்த்தப் படாததாலேயே இத்தகைய தட்டுப்பாடு நிலவுவதாக வட-கிழக்கு மாகாண சுதேச வைத்தியத்துறை பிரதிப்பணிப்பாளர் திரு. உமா மகேஸ்வரர் கருத்துத் தெரிவித்தார்.

## ஆபத்துக்கில்லாத அம்புலன்ஸ்

(காரைதீவு நிருபர்)

காரைதீவு பொது வைத்தியசாலையில் திருப்தியான சேவை இடம்பெறாதது குறித்து பொதுமக்கள் பரவலாக புகார் தெரிவிக்கின்றனர். இங்குள்ள அம்புலன்ஸுக்கு பதில் சாரதி இல்லாததனால், நிரந்தர சாரதி "ஜம்பம்" அடிக்கிறாராம்.

பொது மக்கள் ஆபத்துக்கென அம்புலன்ஸ் நாடினால் "சாரதி இல்லை" என பதில் வருமாம். அண்மையில் அதிரடிப்படையினரும் இதுவிடயத்தில் தலையிட்டனர்.

## திறமைக்கு களம் காணும் முயற்சி!

(இராகலை நிருபர்)

இராகலைப் பிரதேசத்தில் இருக்கின்ற மலையக கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கு, கண்டி தமிழ் ஒலிபரப்பில், தமிழ் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பான திரு.கே. மயில்வாகனம் அவர்களுடன் இராகலை மேடை - நாடக, வானொலி- தொலைக்காட்சி கலைஞர் வட்ட தலைவரும், கவிஞருமான தாரணன் இராம லிங்கம் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றார்.

பாரம்பரிய கலை வடிவங்களான, நாட்டார் பாடல்கள், பேச்சு, நடனம், கும்மி, கோலாட்டம் சுயமாக இயற்றப்பட்ட பாடல்கள், பாரம்பரிய வாத்தியக் கருவிகளை இசைத்தல் என்பனவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்படவிருப்பதுடன், ஒத்திகைக்கும், பயிற்சிக்கும், இராகலை கலைஞர் வட்ட பிரமுகர்கள் ஒழுங்குகள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

பங்குபற்ற விரும்பும் கலைஞர்கள் 'கலைமகள்' நூல் நிலையம், ஸ்டாபோட், இராகலை, ஹல்கிற-னோயா என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## அகதிகள் பலர் ஊர் செல்ல விருப்பம்! சுமார் நூறு குடும்பங்கள் பெயர் பதிவு!!

(மன்னார் நிருபர்)

சென்ற 1990ம் அண்டு வட பகுதியை விட்டும் வெளியேறி நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்து வருகின்ற, அகதிகள் சுமார் இரண்டாயிரம் பேர் வரை மீளக் குடியேறியுள்ளனர்.

மன்னார்த் தீவிலுள்ள மன்னார் நகர், தாராபுரம், எருக்கலம்பிட்டி, புதுக் குடியிருப்பு, கரிசல் போன்ற கிராமங் களிலேயே மேற்படி முஸ்லிம் அகதிகள் மீளக் குடியேறி வாழ்கின்றனர்.


இவ்வாண்டு இறுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஊர் திரும்பு வதற்காக பதிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

தாராபுரம் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 20 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பெயர்களைப் பதிந்துள்ளனர்.

அகதிகளின் மீளக்குடியேற்றத்திற் காக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.


மீளக்குடியமர்வோருக்கு வீடுகளைத் திருத்திக்கொள்ள 4 ஆயிரம் ரூபாவும், தொழில் வசதிகளுக்காக 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என தாராபுரம் கிராம சேவகர்கள் தெரிவித்துள்ளனர்.

## தூதரின் விஜயம்



அண்மையில் இலங்கை வந்த குவைத் நாட்டின் தேசிய அசெம்பிளி (பாராளுமன்ற) சபாநாயகர் அப்துல் அஸீஸ் அல் சதூன், சபாநாயகர் அல்ஹாஜ் எம்.எச்.முஹம்மதின் அழைப்பின் பேரில் ஸ்ரீலங்கா இஸ்லாமிய நிலையத்துக்கும் விஜயம் செய்தார். அங்கு அதிதிகள் ஏட்டில் குவைத் சபாநாயகர் கையெழுத்திடுவதையும், எமது சபாநாயகர் எம்.எச்.முஹம்மத், நிலையப்பணிப்பாளர் அல்ஹாஜ்.எஸ்.எம். கமாலுத்தீன், சர்வதேச வை.எம்.எம்.ஏ., திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையம் ஆகியவற்றின் தலைவர் அல்ஹாஜ் அஷ்ரப் ஹுஸைன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## முதலாம் இடம் கராட்டியில் கருப்புப் பட்டி



1993.10.04ம் திகதி நுவரெலியா Y.M.B.A. மண்டபத்தில் நடைபெற்ற மத்திய மாகாண இலங்கை பூடோகான் கராட்டி சங்கத்தினால் நடத்தப்பட்ட பரீட்சையில் எம். குழந்தைவேல் (கருப்பு பட்டி) முதலாம் இடத்தைப் பெற்றார். சங்கப் பிரதிநிதி பயிற்சியாளர் திரு கே. ராமசந்திர அவர்களால் (கருப்பட்டி5) இப்பரீட்சையை நடத்தியதுடன் மத்திய மாகாண சங்கப் பிரதிநிதியான பயிற்சியாளர் திரு குமாரதாச சிரிசேன (கருப்புப் பட்டி-2) அவர்களால் இப்பரீட்சை ஒழுங்கு செய்யப்பட்டது.

தகவல்: பயிற்சியார் திரு. குமாரதாச சிரிசேன.


**நடிகர், நடிகைகள் தேவை**

மேடை நிகழ்ச்சிகளில் நடிப்புடன் ஆடக்கூடிய ஆண்/ பெண் இருபாலாரும் அனுபவம் உள்ள/ இல்லாதவர்களும் அண்மையில் எடுக்கப்பட்ட கலர் படத்தை இணைத்து நவம்பர் 14ம் திகதிக்குமுன் கிடைக்கும்படி விண்ணப்பிக்கவும்.

SWEET SRILANKA CULTURAL ASSOCIATION
32, DEMEL STREET.
COLOMBO- 2 PHONE: 332168

*றம்புக்கண பசறை பலாங்கொடை பகுதிளுக்கு தினமுரசு வாரமலர் விற்பனை முகவர்கள் தேவை. முற்பணம் கட்டக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.*


## வித்தியாலய அவலம் விலகுமா?

மட்டக்களப்பு மாவட்டத்தில், வாழைச்சேனை கோட்டக்கல்விப் பிரிவில், செங்கலடி வலயத்தில் களுவன்கேணிக் கிராமத்தில் அமைந்து இருக்கும் (கிராமத்திலேயே ஒரே ஒரு பாடசாலையான) பாடசாலையே மட்/களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலயம் ஆகும்.

இப்பாடசாலையில் 10 வகுப்புகளில் 24 பிரிவுகளில் சுமார் 1200 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இருப்பதோ இரண்டே இரண்டு கட்டிடங்கள். ஆகவே தயவு கூர்ந்து சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளவும். (மாணவர்களின் செலவில் இரண்டு கொட்டில்கள் கட்டப்பட்டுள்ளன.)

-நலன்விரும்பிகள்-

## எம்.ரி.வி! இதைக் கொஞ்சம் கவனி!!

எமது தொலைக்காட்சி சேவையில் நான்கு ஒளிபரப்புப் பிரிவுகள் இருந்தாலும் ஒன்றிலாவது தரமான தமிழ் ஒளிபரப்புக்கள் இல்லாதது நாமறிந்த ஒன்று. இருப்பினும் ஆரம்பத்தில் எம்.ரி.வி. சேவையிலாவது தமிழ் நிகழ்ச்சிகள் இடம் பெறும் என்ற நம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வந்தது. ஆனால் இப்போது படிப்படியாக அதுவும் குறைந்து ஏதோ மாதம் ஓரிரு தடவைகள் ஒளிபரப்பாகும் தமிழ் திரைப்படங்களுடன் திருப்தியடைந்துவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ் மக்களின் வெறுப்புக்கு ஆளாகிவிட்டிருக்கிறது எம்.ரி.வி சேவை.

காரணம் அந்த சேவையில் விரைவில் ஒளிபரப்பாக இருக்கும் மகாபாரதத் தொடர் சிங்கள மொழியாக்கத்திற்கு மட்டும் உட்படுத்தப்பட்டிருப்பதே ஆகும். பெரும்பாலும் தமிழ் மக்கள் சிறியோர் முதல் பெரியோர் வரை விரும்பிப்பார்க்க காத்திருக்கும் இத்தொடரில், ஏன் சிங்கள மொழியில் மட்டும் விளக்கங்கள் தரப்படவேண்டும்? தமிழுக்கு ஏன் இந்த பாகுபாடு? பெரும்பான்மை மாணவர்களுக்கு உதவியாக இருக்கப் போகும் இத்தொடர் போதிய விளக்கம் இல்லாமையினால் அவர்களை பெரும் சிரமத்திற்குள்ளாக்கப் போகிறது. இத்தகைய தொடர்களில் தமிழ் விளக்கம் கட்டாயம் தேவை என்பது நிறுவனத்தினருக்கு புரியாததா?.

இத்தகைய முக்கியமான தொடர் நாடகங்களை மட்டுமாவது தமிழ் விளக்கத்துடன் ஒலிபரப்ப ஆவன செய்யமாட்டார்களா. காட்சியைப் பார்த்து அவர்களது மொழியை விளங்கி புரிந்துகொள்ளும் சக்தி எவருக்கும் கிடையாது.

செல்வி க.புனிதா
ஹட்டன்.

## மணலாகிறது ஒரு வீதி! ஏன் இந்தக் கதி!!

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று நகரத்தின் பிரதான வீதிகள் உட்பட பல வீதிகள் மணலால் நிரம்பியுள்ளன.

அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசலுக்கு அருகில் உள்ள பிரதான வீதி மணலால் மூடப்பட்டு வீதி இருந்த இடத்தை மறைத்து விட்டது.

வீதியில் செல்லும்போது வீதியால் செல்கின்றோமா அல்லது காட்டிலே மணல் வழியாகத்தான் செல்கின்றோமா என்ற பிரமை ஏற்படுகிறது.

அழகான, நல்ல நிலையிலுள்ள தார் வீதிகள் மணலால் மூடப்பட்டுள்ளதை கண்டும் காணாதது போல் நடந்து கொள்ளும் அதிகாரிகள் இனியாவது கண்திறப்பார்களா?

இந்த வீதிகளை தினமும் உபயோகிக்கும் நடைபாதைக்காரர்கள், சைக்கிளோட்டிகள், வாகனக் காரர்கள் படும் அவலங்களை நீக்குவதற்கு உடனடியாக வீதிகள் துப்புரவு செய்யப்படவேண்டும் என இப்பகுதி மக்கள் பலர் எமது நிருபர் மூலமாக - தினமுரசு ஊடாக கோரிக்கை விடுக்கின்றனர்.

டி.எம். நப்ஹான்.

## புகார் பெட்டி

### பள்ளிவாசலைக் கவனியுங்கள்!

கல்முனை ஆதார வைத்தியசாலையிலுள்ள பள்ளிவாசல் கடந்தகால கசப்பான சம்பவங்களின் நினைவுச் சின்னமாக தற்போதும் காட்சி தருவது உண்மையிலேயே வேதனைக்குரியதொன்றாகும்.

பல நோயாளிகள் இவ்வைத்திய சாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் அதேவேளை பல நோயாளிகள் தினசரி சிகிச்சைக்கும் வருகின்றனர்.

அதுமட்டுமன்றி நோயாளிகளைப் பார்வையிடவும் பலர் வருகின்றனர். பொதுவாக வைத்தியசாலைகளைப் பொறுத்த மட்டில் நோயாளிகளைப் பார்வையிடும் நேரங்கள் நன்பகல் 12.00மணி, மாலை 6,.மணி அளவில்தான்.

இந்த நேரங்கள் முஸ்லீம்களைப் பொறுத்தளவில் லுஹர், மஃரிப் தொழுகைக் குரிய நேரங்களாக அமைகின்றன.

எனவே இங்கு தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களும் பார்வையிட வருபவர்களும் தமது நாளாந்த வணக்கத்தை உரிய வேளையில் செய்வதற்கு முடியாதுள்ளனர்.

குறிப்பாக நீண்ட நாட்கள் இவ்வைத்திய சாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களே உரிய வேளையில் தமது மார்க்கக்கடமையை நிறைவேற்ற முடியாதவர்களாக உள்ளனர்.

எனவே இங்கு வரும் நோயாளிகள், பார்வையாளர்களின் வசதி கருதி மீண்டும் இப்பள்ளிவாசலைப் புனருத்தாரனம் செய்து தொழுகை நடாத்தக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்த, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டப்படுகின்றனர்.

எஸ்.ரி.எம். பஸ்வாக்
கல்முனை-05.

### பாலத்தின் அவல நிலை போக்குவரத்து அபாயம்?

குருநாகல்-கண்டி பிரதான பாதையின் ஒன்பதாம் மைல் கல்லில் அமையப்பெற்ற பாலம் அண்மைக்காலமாக பிரதான போக்குவரத்துக்கு அபாயகரமான நிலையினை தோற்றுவித்திருக்கிறது. அப்படியிருந்தும் இன்றுவரை சம்பந்தப்பட்டவர்களால் எதுவித தற்காலிக நடவடிக்கை கூட எடுக்கப்படாத நிலையினை அறிந்து பொதுமக்கள் மிகவும் கவலையடைந்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன் திருத்த வேலைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட இப்பாலம் பாதியில் உடைக்கப்பட்ட நிலையில் விடப்பட்டுள்ளதால் தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்களின் பிரயாணத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்குகிறது. வாகன விபத்துக்களினால் பலமுறை சேதத்துக்குள்ளான இப்பாலத்தின் இருபக்க பாதுகாப்பு அரணான இரும்பு கவசங்கள் கூட திருத்தப்படாதிருக்கிறது. தினமும் பாலத்திற்கருகாமையில் 'DANGER' என்ற அறிவித்தல் பலகை தொடர்ந்தும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது மட்டுமே பொதுமக்களின் பாதுகாப்பாக சம்பந்தப் பட்ட அதிகாரிகள் கருதுகிறார்கள். மேலும் இந்த "9ஆம் மைல்கல்" பாலத்தில் திருத்தவேலைகள் மீண்டும் ஆரம்பிக்கும் வரைக்கும் 'தடைக்கற்கள்' தற்காலிக பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இப்பாலத்தின் பரிதாப நிலையினை உணர்ந்து பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையீடு செய்தும் எதுவித பயனுமளிக்காத நிலையினை அறிந்து, இப்பாரிய குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கான உடனடி நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு "புகார் பெட்டி" மூலம் வேண்டிக்கொள்கின்றேன்.

அக்ரம் லியாவுதீன்
பறகஹதெனிய.

### தொடர் வெட்டுகள்-எப்போது நிறுத்தப்படும்?

அக்குறணையில் இப்பொழுது அண்மைக் காலமாக தொடர்ந்து மின்சார, தண்ணீர் தொலைபேசி வெட்டுகளால் ஊர் மக்கள் தமது அன்றாட காரியங்கள் எதனையும் செய்யமுடியாத அளவிற்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல நகர்ப்புறத்தில் மாத்தளை-கண்டி பிரதான வீதியில் அமைந்திருக்கும் மின்சாரக் கம்பிகள் ஒன்றோடொன்று மோதி வெடித்துச் சிதறுவதையும் அடிக்கடி காணக்கூடியதாக இருக்கின்றது.

மேற்படி விடயங்கள் சம்பந்தமாக குறிப்பிட்டவர்களுக்கு அறிவித்தல் கொடுத்தும் காரியம் நடக்கவில்லை.

இவ்வத்தியாவசிய விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் கரிசனையுடன் செயல்படுவார்கள் என்று ஊர்மக்களனைவரும் எதிர் பார்க்கிறார்கள்.

எம்.என்.எம்.அனஸ்- அக்குறணை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

திரு. அநுரா பண்டாரநாயக்கா ஆளும் கட்சியோடு சங்கமமாகிவிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் நேரம் அறிந்து வீசிய கயிறு வேலை செய்திருக்கிறது.

வெளிநாட்டில் இருந்த அநுரா அந்தக் கயிற்றைப் பற்றிப் பிடித்துக்கொண்டு பச்சைக் கொடி காட்டிவிட்டார்.

அம்மாவோடுதான் சண்டை. அப்பா புகழ் பாடப் பிள்ளை தவறுகிடையாது.

ஐக்கிய தேசியக்கட்சியும் அப்பா பண்டாரநாயக்க சேர்ந்து உருவாக்கிய கட்சிதான் என்று அநுரா சொல்லியிருப்பது அவரது ஆதரவாளர்களை ஓரளவு திருப்திப்படுத்தும்.

என்றாலும்- அரசியலில் இரண்டு பிரதான எதிர்முகாம்களாக இயங்கிவரும் கட்சிகள் ஐக்கிய தேசியக்கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும்.

ஐக்கிய தேசியக்கட்சி முயலுக்கு நாலுகால் என்று சொன்னால், இல்லை மூன்றுகால் என்று சொல்லியாக வேண்டிய அரசியல் நடத்தியவர்கள் சுதந்திரக் கட்சியினர்.

எதிரும்-புதிருமாக அரசியல் விரோதத்துடன் வளர்க்கப்பட்ட இரு கட்சிகளதும் ஆதரவாளர்கள் அநுராவின் முடிவை எவ்வாறு நோக்குவார்கள் என்பது கேள்விக்குரியது.

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த மாகாணசபைத் தேர்தலில் அங்கங்கே இழந்த வாக்கு வங்கிகளை மீண்டும் திரும்பப்பெறும் முயற்சியில் இருக்கிறது.

எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டு எதிர்வரும் தேர்தலை எதிர்கொண்டால் ஆளும்கட்சிக்கு பாதகம் ஏற்படாமல் போகாது.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் எதிர்க்கட்சிகளின் கோட்டைக்குள் பிளவுகள் ஏற்படுவதை விருப்போடு நோக்குவார்கள்.

திரு. அநுராவை கட்சியில் இணைத்துக் கொண்டதன் மூலம் சுதந்திரக்கட்சிக்கு கிடைக்கக்கூடிய வாக்குகளில் ஒரு பகுதி சிதறும் என்றும் அவர்கள் நினைக்கக்கூடும்.

அம்மாவுக்கு எதிராக தேர்தல் பிரச்சார அரங்கில் பிள்ளையை நிறுத்துவதன் மூலம் சுதந்திரக்கட்சிக்கு தலைவலியை ஏற்படுத்தலாம் என்றும் அவர்கள் கருதக்கூடும்.

ஆகவே, அநுராவை கட்சிக்குள் இணைத்துக்கொண்டதற்கு ஐ.தே.கட்சி ஆதரவாளர்களிடையே பெரியளவில் அதிருப்திகள் ஏற்படப்போவதில்லை.

ஆனால், ஐ.தே.கட்சித் தலைமை திரு. அநுராவுக்கு எவ்வாறான இடத்தை வழங்கப்போகிறது என்பதைப் பொறுத்து அக்கட்சியின் மூத்த தலைவர்கள் மத்தியில் கசப்புக்கள் ஏற்பட இடமிருக்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவாளர்கள் திரு. அநுராவின் முடிவை பெரியளவில் வரவேற்பார்கள் என்று சொல்லமுடியாது.

ஏற்கனவே அநுராவுக்கு இருந்த அனுதாபமும் அவரது புதிய முடிவால் அடிபட்டுப் போகலாம்.

திரு. அநுரா பண்டாரநாயக்கா கட்சியைவிட்டும், அரசியலை விட்டும் விலகும் முடிவை அறிவித்தபோது சுதந்திரக்கட்சிக்குள் பூகம்பம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை.

கட்சித்தலைமை ஒரு நாகரிகத்துக்குக் கூட முடிவை மறுபரிசீலனை செய்யும் படிகூட கேட்கவும் இல்லை.

'சென்றுவா மகனே சென்றுவா' என்று சந்தோசமாக அவரது முடிவை ஏற்றுக் கொண்டார்கள்.

ஆதரவாளர்களும் 'அநுரா போனால் எல்லாமே போச்சு' என்று ஆடிப் போய்விடவில்லை.

அரசாங்கப் பத்திரிகைகள் மாத்திரமே தடித்த எழுத்துக்களில் அநுராவின் விலகலை பிரபலப்படுத்திருந்தன.

எனவே, சுதந்திரக்கட்சியின் வாக்கு வங்கிகளை அநுரா கணிசமான அளவில் கவரமுடியுமா என்பது சந்தேகத்துக்கு உரிய விசயம்தான்.

யார் விலகிப் போனாலும் கட்சிக்கு என்று வாக்களிக்கும் பழக்கமுள்ள வாக்காளர்கள் இருக்கிறார்கள். அம்மையார் கட்சி மாறினால்கூட அவர்கள் கைச் சின்னத்தை தேடியே முத்திரை குத்துவார்கள்.

கட்சிப்பற்றுள்ள வாக்கு வங்கிகளை கவர்ந்து கொள்வது கஷ்டமானதேயாகும்.

தேர்தல் நடைபெறும் காலகட்டத்தில் யாருக்கு வாக்களிப்பது என்று கடைசி நேரத்தீர்மானம் எடுக்கும் வாக்காளர்களும் இருக்கிறார்கள்.

அம்மையாரின் பிரச்சாரத்தை திரு. அநுரா மூலமே பிசு பிசுக்கச் செய்வதன் மூலம் அந்த வாக்காளர்களில் ஒரு பகுதியினரை கவர முடியும்.

எப்படியிருந்த போதும் ஆளும் கட்சிக்கு நிலைமை திருப்தியளிப்பதாகவே இருக்கிறது.

திரு. அநுராவை கட்சிக்குள் உள்வாங்கி இருப்பதால் பாதகம் எதுவும் ஏற்படப் போவதில்லை. அவர் வெளியில் இருப்பதை விட உள்ளே இருப்பதால் சாதகம்தான்.

இன்னொரு விசயமும் இருக்கிறது. திரு. காமினி திசாநாயக்காவை தம்மோடு இணைத்துக்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி தலைவரும், ஜனாதிபதியுமான டி.பி. விஜேதுங்கா பெரும் முயற்சி செய்தார்.

திரு. காமினி திசாநாயக்காவின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்குள் மூன்று பிரிவுகள் இருக்கின்றன.

ஒன்று மறைந்த திரு. அத்துலத் முதலியின் விசுவாசிகள் அணி. அடுத்தது திரு.காமினியின் ஆதரவாளர்கள் அணி. மூன்றாவது முதலமைச்சர் பிரேமச்சந்திரா வின் அணி.

இந்த மூன்று பிரிவுகளிலும் பிரேமச் சந்திரா அணியினரே காமினி திசநாயக்கா வுக்கு யோசனையை ஏற்படுத்துகின்றனர்.

அதனால் திரு. காமினி திசாநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதானால் தனக்கு அமைச்சர் பதவியையும், பிரேமச் சந்திராவுக்கு முதலமைச்சர் பதவியையும் எதிர்பார்த்ததாகப் பேசப்பட்டது.

இப்போது நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் திரு. பிரேமச்சந்திரா முதலமைச்சர் ஆகிவிட்டார்.

எதிர்க்கட்சிக் கோட்டைக்குள் ஏற்பட்டுள்ள விரிசல்களால் திரு.காமினி திசாநாயக்காவை தம்மோடு இணைப்பதில் முன்னர் காட்டிய தீவிரத்தை ஆளும்கட்சி தற்போது குறைத்துக்கொண்டுள்ளது.

திரு.காமினி திசாநாயக்கா மூன்றாவது அணியொன்றை உருவாக்க முயற்சி செய்வதாகவும் ஒரு பேச்சு இருக்கிறது.

அந்த மூன்றாவது அணியில் திரு. அநுரா பண்டாரநாயக்காவையும் இணைத்துக்கொள்ளும் திட்டம் பற்றியும் பேசப்பட்டது.

திரு. அநுரா பண்டாரநாயக்காவும் இணைந்து மூன்றாவது அணி ஒன்று உருவாக்கப்பட்டால் ஆளும் கட்சிக்கு சில பாதகங்கள் ஏற்பட்டிருக்கக்கூடும்.

இப்போது மூன்றாவது அணிக்கு அநுரா செல்வது தடைப்பட்டுவிட்டது.

அதுவும் ஆளும்கட்சிக்குச் சாதகமான



அம்சம்தான்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவும் அநுராவை கவனித்துக் கொண்டுதான் இருந்தார்.

இப்போது அவர் உயிருடன் இருந்திருந்தால்கூட அநுராவைக் கட்சிக்குள் இணைக்கும் முடிவை முன்னின்று செய்திருப்பார் என்று நம்ப இடமுண்டு.

இதே சமயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் மேலும் சில முக்கிய தலைவர்களும் தொடர்ந்து ஓரம் கட்டப்பட்டே வருகின்றனர்.

அதனால் அந்தக் கட்சி புதிய உத்வேகத்தை காட்டக்கூடிய நிலைக்கு செல்லுவது சந்தேகமே.

எப்படியோ ஆளும் கட்சி அச்சம் கொள்ளக்கூடிய அளவுக்கு எதிர்க்கட்சிகள் தமது வியூகங்களை வகுக்கவில்லை.

வகுத்த வியூகங்களும், தமக்குள் பிளந்து கொண்டிருக்கின்றன.

திரு.அநுரா பண்டாரநாயக்காவின் அரசியல் எதிர்காலம் இனி ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையின் கையில்தான் இருக்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இப்போது ஓரம் கட்டப்படுகின்றவர்களையும் கவரவேண்டுமானால் அநுராவுக்கு ஒரு சிறந்த இடம் வழங்கியே தீரவேண்டும்.

ஆனால் ஒன்று, தனக்கு ஐ.தே.க முக்கியத்துவம் தராவிட்டாலும் கூட அதற்காக பேரம் நடத்தும் நிலையில் அநுரா பலமாக இல்லை.

தான் புறக்கணிக்கப்படுவதாகக் கூறி அநுரா ஐ.தே.கட்சியை விட்டு சமீப எதிர்காலத்தில் வெளியேறினால் அவரது அரசியல் எதிர்காலம் முற்றாகவே ஒளி இழக்கும். உள்ளதையும் கெடுத்த நிலைதான் தோன்றும்.

எனினும், ஐ.தே.க திரு அநுராவை கௌரவமான ஒரு இடத்தில் வைத்திருக்கவே செய்யும். ■

எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சில் சமீபகாலத்தில் ஒரு மாற்றம் தெரிகிறது.

வடக்கே உணவு அனுப்பச் சொல்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு இணைந்திருப்பதா இல்லையா என்பதற்கு கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதை ஒத்தி வைக்கும்படி கூறுகிறார்கள்.

மறுபுறம், ஆளும் கட்சி வட்டாரத்தில் உள்ள ஒரு சிலர் பழைய குருடி கதவைத் திறவடி என்ற கதையாக பேசத் தலைப்பட்டுள்ளார்கள்.

இந்த நாட்டின் இனப்பிரச்சனை விடயத்தில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி மோதல்களே நிலைமைகளைச் சிக்கலாக்கி வந்தன என்பதே வரலாறு.

ஆளும் கட்சியினர் மென்மையான போக்கில் போனால் வடக்கு-கிழக்கை புலிகளுக்கு விற்றுவிட்டார்கள் என்று எதிர்க்கட்சி வட்டாரங்களில் இருந்து குரல் எழும்பும்.

எதிர்க்கட்சிகள் மென்மையான போக்கில் பேசினால், யுத்தத்துக்கு எதிரான நிலைப்பாட்டை அவை மேற்கொள்வதாக ஆளும் கட்சித் தரப்பில் இருந்து குரல் எழும்.

இதுதான் கடந்தகால கசப்பான வரலாறு.

இப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஓரளவு நெளிவு சுழிவோடு பேசுகிறார்கள்.

ஆளும் கட்சியில் சிலர் மட்டும் பிரச்சனையைப் புரிந்துகொள்ளாமல் பேசத் தலைப்படுகிறார்கள்.

பிரதமர் ரணில் அமெரிக்காவில் பேசிய பேச்சுக்களிலும், பேட்டிகளிலும் இனப் பிரச்சனைக்கு தீர்வினை காணவேண்டும் என்ற கருத்தை மறைமுகமாக ஒப்புக் கொண்டுள்ளார்.

பிரதமர் ரணிலிடம் விவேகம் வெளிப்படுகிறது. பிரச்சனைகளை மேலும் சிக்கலாக்கிவிடக்கூடாது என்ற கவனம் தெரிகிறது.

அதனை ஆளும்கட்சியின் வேறு சில உறுப்பினர்கள் கவனத்தில் கொள்வதில்லை என்பதுதான் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. ■

வடக்கு-கிழக்கில் போருக்கான ஆயத்தங்களில் படையினர் தீவிரமாய் உள்ளனர்.

தற்போதைக்கு பேச்சுக்கள் எதுவும் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் தெரியவில்லை.

கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் உறுதியோடிருக்கிறது.

கிழக்கில் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் அங்கு முடிந்தளவு புலிகள் அமைப்பினரை ஒடுக்குவதில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

கிழக்கில் படையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் புலிகளுக்கு கணிசமான இழப்புக்களை உருவாக்கி வருகின்றன.

தேர்தல் ஒன்று நடைபெறுவது கிழக்கில் இராணுவ ரீதியான வெற்றியை மேலும் வெளிக்காட்டும் என்பதால் படையினரும் ஆர்வமாக உள்ளனர்.

தேர்தல் இடையூறுகள் இன்றி நடைபெறவேண்டும் என்பதில் படையினர் தீவிர அக்கறை காட்டுவதால், கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சோதனைகள், தேடுதல்கள், புதிய கட்டுப்பாடுகள் என்பவை அமுல் படுத்தப்படும்.

அதனால் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள மக்களின் அதிருப்திகளை சம்பாதிக்கவும் இடமிருக்கிறது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் அமைப்புக்கள் கலந்துகொள்வது சாத்தியம் என்றே தெரிகிறது.

தேர்தல் இப்போது வேண்டாம். ஆனால் தேர்தல் நடந்தால் கலந்து கொள்வோம் என்று அவை கூறுகின்றன. இது ஒரு இரட்டைத்தனமான நிலைப் பாடாகும்.

உள்ளூராட்சித் தேர்தலின் பின் கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்தப் போவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அதன்பின்னரே புலிகளோடு பேச்சு என்றும் கூறியிருக்கிறார்.

வடக்கு-கிழக்கு பிரிப்பிலே அரசு தீவிரம் காட்டுமானால் புலிகள் அதையே ஒரு பெரும் பிரச்சனையாக முன்வைப்பார்கள்.

தமது யுத்தத்திற்கான அவசியத்துக்கு நியாயம் தேடும் முக்கிய பிரச்சனையாக புலிகள் அதனைக் கையாளுவார்கள்.

சமாதான முயற்சிகள் கனவுதான் என்று புலிகள் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் அறிவித்துவிட்டனர்.

வடக்கு-கிழக்கு பிரிப்பில் அரசாங்கம் தீவிரம் காட்டுமானால் புலிகள் தமது யுத்தத்துக்கு நியாயம் தேட, அரசு வழிவகுப்பதாகவே அமையும்.

யுத்தம் நிறுத்தப்படவேண்டும். உயிர்கள் அநியாயமாக விரயமாவது தடுக்கப் படவேண்டும் என்று வடக்கு-கிழக்கில் உள்ள மக்களும் விரும்பம் கொண்டிருந்தனர்.

அதனால் புலிகளும் பேச்சுக்களுக்கு தாமும் தயார் என்று கூறிக்கொண்டிருந்தனர்.

ஆனால் இப்போது போர் அவசியமே என்ற கருத்தை வலியுறுத்தி அதற்கான தயாரிப்புக்களில் புலிகளும் ஈடுபட்டுள்ளனர்.

அதற்கு சாதகமான நிலைகளை அரசாங்கமும் ஏற்படுத்தி வருவதாகவே கருதமுடிகிறது.

சந்தர்ப்பங்களைத் தமக்கு சாதமாக்கிக் கொள்வதில் அரச தரப்பைவிட புலிகள் அமைப்பினரே திறம்பட செயல்படுகின்றனர். அரச தரப்பினர் இன்னமும் நிலைமைகளை சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்றே தெரிகிறது.

## தெற்கில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்கள்! வடக்கு-கிழக்கில் யுத்தத்திற்கான ஆயத்தங்கள்!!

> "ஐக்கிய தேசியக் கட்சியும் எனது தந்தையார் இணைந்து உருவாக்கிய கட்சிதான்"

## அதிரடி அய்யாத்துரை



கொழும்பில் ஒட்டோவில் போறதுதான் பிரச்சனை எண்டமாதிரி ஒரு பலமான அபிப்பிராயம். அதுவும் 'த' மொழி பேசினா இறக்கம் இடையிலைதான். ஒரு ஒட்டோ சாரதி புலம்பினதைக் கேட்டா பரிதாபப்படுவியள் பாருங்கோ. "ஒரு பொடியன் கூட வாறது கிடையாது. எங்கட பிழைப்பு நாறுது. ஒட்டோவைக் கண்டாலே வடக்கு-கிழக்கு சனம் மட்டுமில்லை, கொழும்பிலை நீண்டகாலம் இருக்கிற தமிழ் சனமும் ஓடுது." ஒட்டோக்காரர் பாவம்தான். அதுக்காகப் பார்த்தா ஏறும் ஆட்கள் அல்லோ இடையிலை மாட்டி அவதிப்படவேணும். அதென்ன, ஒட்டோவிலை மட்டுந்தான் இரெண்டு எழுத்துக்காரர் வருவினமோ? சத்தியமா விளங்கேலை.

"நீங்கள் படியுங்கோ, இதையும் பிடியுங்கோ" எண்டமாதிரி யாழ்ப்பாணத்திலையும் வன்னியிலையும் இரெண்டெழுத்துக்காரர் ஆள் சேர்க்கிறதா ஒரு கதை. எங்கை? பள்ளிக்கூடங்களிலைதானாம். அதைப் பிடிக்க வெளிக்கிட்டா பிள்ளைகள் எங்கை படிக்கிறது? பிறகு வெடிபுத்தானே. என்ன, நான் சொல்லுறது?

கொழும்பு விடுதிகளிலை ஒரு வியாபாரம். ஆட்களை பிடிச்சுக் கொடுத்துப்போட்டு பிறகு எடுத்து விடுறதாச் சொல்லி பேரம் நடத்துறது. இயக்கங்களிலை இருந்து விலகின சிலர்தான் பிழைப்புக்காக அந்த பிழையான ரூட்டிலை போறதாக கேள்வி. இரெண்டு எழுத்துக்காரர் எண்டு மாட்டிவிடுறது, பிறகு நாலு காசு வாங்கி தண்ணிபோடுறது. உதுவும் ஒரு பிழைப்போ. பெற்றதுகள் போடும் சாபம் சும்மா விடுமோ?

வ.கி.சபையிலை பவர் உள்ள சிலர் நல்ல வசதியா இருக்கினம். வீட்டுக் குசினி கூட பல வகையா பிரிச்சு பல வசதியள். ஒண்டுக்கு ரெண்டு வாகனம். வேலையாட்களை மட்டும் தங்கட அடிமைகள் மாதிரி நடத்துறது. முறைச்சா உடனடியா மாற்றம். அதுதான் டிரான்ஸ்பர். திருத்திக்கொள்ளுறது நல்லது. இல்லாட்டி உள்விசயங்கள் எல்லோ தெருவுக்கு வந்து நாறத்தொடங்கும். என்னங்கோ கொஞ்சம் பார்த்து நடவுங்கோ. கொத்தடிமை முறை மெத்தப் பிழை.

புனரமைப்பு இராஜாங்க அமைச்சர் யாழ்ப்பாணத்தில் சிங்கள ஆட்கள் காணி வாங்கேலாது என்று கவலைப்பட்டவர். சிங்கள ஆட்கள் மட்டுமிலைப்பாருங்கோ. இரண்டெழுத்துக்காரருக்கு பிடிக்காத தமிழரும் அங்கு காணி வைச்சிருக்க முடியாது. சொந்தக் காணியளைக் கூட தூக்கி எறிஞ்சு போட்டு ஓடி வருகினம் பாருங்கோ. நிலமை தெரியாமல் பேசக்கூடாது. நாரதரும், இராஜதந்திரியும் உந்த விசயங்களையும் எழுத வேணும்.

மட்டக்களப்பிலை இருந்து வந்த நண்பர் ஒருத்தர் என்னைப் பிடிச்ச கேட்டார் ஒரு கேள்வி. "என்ன நீர் இரண்டெழுத்துக்காரர் நடத்திற பேப்பரில் எழுதுநீர் போல கிடக்கு" அதென்னவோ தெரியாது எங்கட சனத்திர கஷ்டத்தைப் பற்றி இரெண்டெழுத்துக் காரர் மட்டும்தான் பேசுகினம் எண்டு சிலர் நினைக்கினம். அதாலை அவையே இரெண்டெழுத்தாருக்கு தங்களையறியாமல் மக்கள் பிரதிநிதிகள் எண்ட சான்றிதழைக் கொடுக்கினம்.

மூவகைக்கு மூன்றெழுத்துத்தான் பிடிக்கும். அதுதான் பாருங்கோ உண்மை - நேர்மை - தூய்மை.

யுத்தம் இருக்குதே யுத்தம். பொல்லாத அரக்கன் பாருங்கோ. அதுவும் இந்தக்காலத்திலே புதுப்புது ஆயுதங்கள் வேறை வந்திருக்குது. தூர நிண்டே துலைச்சுக்கட்டிப் போடுறான்கள். ஆனால் பாருங்கோ ஷெல் கண்டுபிடிக்கப்படாமல் வில் மட்டுமே இருந்த அந்தக்காலத்திலையும் யுத்தம் அரக்கனாய்த்தான் இருந்தது கொங்கண நாயனார் என்ற சித்தர் எழுதின பாட்டைக் கேளுங்கோ-

"மெத்தை தனிலே படுத்திருந் துநாமும்
மெல்லியரோடு சிரிக்கும் போது
யுத்தகாலன் வந்துதான் பிடித்தால் நாமும்
செத்த சவமடி வாலைப் பெண்ணே."

பாத்தியளோ, யுத்தத்திற்கு நேரம் காலமே தெரியாது விவஸ்தை கெட்டது.



# வட அயர்லாந்தில் அமைதிக்கான முயற்சிகள்!

ஐ.ஆர்.ஏ. அரசியல் நீரோட்டத்தில் இணைய விருப்பம் தெரிவித்திருக்கிறது. அதற்கு வாய்ப்புக் கிடைத்தால் வன்முறையைக் கைவிடத் தயார் என்று அறிவித்திருக்கிறது.

பிரிட்டிஷ் பிரதமர் அதனை நிரா கரித்து விட்டார். எவ்வித நிபந்தனையும் இன்றி ஐ.ஆர்.ஏ. வன்முறையைக் கைவிடவேண்டும் என்று அவர் கோபத்துடன் கூறியிருக்கிறார்.

வட அயர்லாந்தில் தற்போதுள்ள சூழ்நிலையானது அங்கு விரைவான சமரச முயற்சிகளுக்கு தடையாகவே இருக்கும்.

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் சூழ்நிலையை இயல்பாக்குவது கடினமான காரியமாகவே இருக்கும்.

தீவிரவாதிகள் அமைதிப்பேச்சுக்கள் முறிவதையே விரும்பு வார்கள் என்றுதான் பொதுவாகக் கருதப்படுகிறது.

# அரசியல் வன்முறைகள் கைவிடப்படுமா?

**பலஸ்தீன, இஸ்ரேலிய சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட சூட்டோடு மற்றொரு சமாதான முயற்சி ஆரம்பமாகியிருக்கிறது.**

**கடந்த 24 வருடங்களாக அரசியல் வன்முறைகளால் சூழப்பட்டிருந்த வட அயர்லாந்தில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.**

இதுவரை அரசியல் வன்முறை மூவாயிரம் உயிர்களைப் பலியெடுத் திருக்கிறது.

வட அயர்லாந்திலுள்ள பிரிட்டிஷ் மாகாணத்தை தெற்கேயிருக்கும் ஐரிஸ் கத்தோலிக்க குடியரசுடன் இணைத்துவிட வேண்டும் என்று அங்குள்ள சிறுபான்மை கத்தோலிக்கர்கள் கோருகின்றனர்.

பெரும்பான்மையினரான புரட்டஸ் தாந்து மதத்தினர் இம் மாகாணம் தொடர்ந்தும் பிரிட்டனின் ஒரு அங்கமாக இருக்க வேண்டும் என்று பிடிவாதமாக உள்ளனர்.

கத்தோலிக்க சிறுபான்மையினரின் உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திப் போராடிவரும் அமைப்பு ஐரிஷ் விடுதலை இராணுவம். சுருக்கமாக ஐ.ஆர்.ஏ. என்று அழைக்கப்படுகிறது.

ஐ.ஆர்.ஏ. குண்டு வெடிப்புச் சம்பவங்கள் பலவற்றை நடத்தி யிருக்கிறது. சமீபத்தில் புரட்டஸ்தாந்து மதத்தவர்கள் அதிகமாக வாழும் முக்கிய பகுதியில் ஐ.ஆர்.ஏ. குண்டு வெடிப்பை நடத்தியது. 10 பேர் பலியானார்கள்.

கோபம் கொண்ட புரட்டஸ்தாந்து தீவிரவாதிகள் 4 கத்தோலிக்கர்களை சுட்டுக்கொன்றனர்.

தொடரும் வன்முறைகள் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்க தடையாக இருக்கும் என்றே கருதப்படுகிறது.

ஆயினும் ஐரிஷ் குடியரசு அமைதிப் பேச்சுக்கான ஆறு அம்சத் திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது.

பிரிட்டிஷ் பிரதமரிடம் ஐரிஷ் குடியரசின் பிரதமர் தமது அரசின் திட்டத்தை எடுத்துக்கூறியுள்ளார்.

ஐரிஸ் அரசாங்கம் தயாரித்துள்ள திட்டத்தை புரட்டஸ்தாந்து மக்கள் சந்தேகக் கண்ணோடு நோக்குகின்றனர்.

## நிழல் நிஜமாகிறது

ஜேம்தான் நடித்த நகைச்சுவை சினிமா அமெரிக்காவில் ஆயிரத்து இருநூறு தியேட்டர்களில் ஓடிக்கொண்டிருக்கிறது. வேர்ல்ட் டிஸ்னி தயாரிப்பாளர்களின் இணை நிறுவனமான டச்ஸ்டோன் பிக்சர்ஸ் நிறுவனம் இந்தச் சினிமாவைத் தயாரித்தது.

படத்தில் ஒரு காட்சி. அவன் கால்பந்தாட்ட வீரன். நன்றாகக் குடித்திருக்கிறான். போதை ஏற்றிவிட்டவர்கள் கால்பந்தாட்ட வீரனை நடுரோட்டில் காரை வேகமாக ஓட்டி மோத வருகின்றனர். காட்சி மாறுகின்றது. கால்பந்தாட்ட வீரனின் கால்கள் கூழாகிக் கிடக்க நடுரோட்டில் பிணமாகிக் கிடக்கிறான். சாலையில் வாகனப் போக்குவரத்து ஸ்தம்பித்து நிற்கிறது. இரண்டு பக்கமும் வாகனங்கள்.

மேலே கண்டது சினிமாக் காட்சி. சினிமா வெளியான பின்னர் இதே போன்ற நிஜ சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இரண்டு பேர் நடுரோட்டிரல் கொல்லப்பட்டனர். 17 வயதான கால்பந்தாட்ட வீரன், சினிமாவில் வந்தது போல் கால்கள் மட்டும் கூழாகி ரத்த சகதியில் நடுரோட்டில் அனாதையாகக் கிடந்தான். உயிர் மட்டும் ஒட்டிக்கொண்டு இருந்தது.

இச்சம்பவங்களை அடுத்து டச்ஸ்டோன் பிக்சர்ஸ் விழித்துக் கொண்டது. எங்கள் சினிமாவைப் பார்த்து இளைஞர்கள் இப்படிச் செய்தால் அதற்கு நாங்களா பொறுப்பு என்றனர். இருந்தாலும், அந்தக் காட்சியை அகற்ற முடிவு செய்துள்ளனர். தியேட்டர்களில் ஓடிக் கொண்டிருப்பதை நிறுத்தாமல் வேறு பிரதி போட்டு மீண்டும் விநியோகிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

## உலக ரவுண்ட் அப்

# விமானத்தைக் கலக்கிய விரல்!

எனக்கு அவசரமாக வருகிறது. வழிவிடுங்கள் வெடித்து விடுவேன் என்று கூறிய பயணியை நடுவானில் ஊழியர்கள் தடுத்து முற்றுகையிட்டனர். "ஐயோ நான் பாத்ரூம் போகிறேன். விடுங்கள் இல்லை என்றால் வெடித்து விடும்" என்றவரை அவசர அவசரமாக விமானத்தை இறக்கி பொலிசில் ஒப்படைத்தனர்.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்தவர் சிரெகனக். (24) இவர் அமெரிக்காவில் உள்ள புளோரிடா மாநிலத்தில் போர்ட் லாடர்டேவில் இருந்து ஜெர்மனிக்குச் செல்ல விமானம் ஏறினார். இவர் மது குடித்திருக்கிறார்.

விமானம் கிளம்பிய சில நொடிகளில் இடுப்பு பெல்ட்டைக் கழற்றி விட்டு அவசர அவசரமாக ஜன்னல் பக்கமாக ஓடினார். அவரை விமானப் பணிப்பெண் ஒருவர் பார்த்து, "எங்கே போகிறீர்கள்?" என்றார். வந்தவருக்கோ, "அவசரம் என்னை விடுங்கள். பாத்ரூம் போக வேண்டும்" என்றார்.

பணிப்பெண்: விமானம் இன்னும் சரியான உயரத்திற்குச் செல்லவில்லை. போய் விடுங்கள்.

பயணி: இல்லையில்லை என்னை விடுங்கள். அடிவயிறு வெடித்துவிடும் (பணிப்பெண்ணுக்குச் சந்தேகம் வந்துவிட்டது.)

பணிப்பெண்: வெடித்து விடுமா?

பயணி: ஆமாம் உடனே விடுங்கள். நான் தான் சொல்கிறேனே வெடித்துவிடும் என்று.

பணிப்பெண்ணுக்கு இன்னும் சந்தேகம். இந்த ஆசாமி வெடித்து விடும் என்கிறாரே குண்டு உள்ளதோ என்று நினைத்து இன்னொரு பணிப்பெண்ணை அழைத்தார்.

"அதற்குள், ஐயோ விடுங்கள் என் நிலைமை தெரியவில்லையே, நான் வெடித்து விடுவேன்" என்று ஜன்னலோரமாக ஓடினார். இன்னொரு பணிப்பெண் வேகமாக வந்தார்.

ஜன்னலோரம் போவதைப் பார்த்து, இவர் ஜன்னல் வழியாக சிறுநீர் கழிக்கப் போகிறாரோ என்று பயந்து "நோ நோ அங்கெல்லாம் கூடாது வீட்டுக்குப் போங்கள்" என்றார். அவரிடமும் பயணி "என்னை உங்களுக்குப் புரியவில்லையே வெடித்துவிடும்" என்று சொன்னார். இதற்குள் துணை பைலட் வர, விசயத்தை அறிந்து பைலட்டிடம் ஓடினார்.

அடுத்த சில நிமிடத்தில் மீண்டும் லாடாடேவில் விமானம் இறக்கப்பட்டது. அங்கு பொலிசார் சுற்றி வளைத்தனர். "என்ன சேர் நான் பாத்ரூம் போக வேண்டும். இதற்குப் போய் விமானத்தையே இறக்கி விட்டீர்களே" என்றவரை பொலிசார் அலாக்காகத் தூக்கிச் சென்றனர்.

கடைசியில் பொலிஸ் பாதுகாப்புடன் அந்தப் பயணி பாத்ரூம் போய் திரும்பினார். பொலிசாருக்கு உண்மை தெரிந்ததும் வேறு வழியின்றி கைது செய்தனர். வரும் புதன்கிழமை விசாரணைக்கு வழக்கு வரும்வரை அவர் சிறையில் தான் இருக்க வேண்டும்.

எனினும் நீதிபதி ரோகட்டர் விசாரித்து, இது பெரும் அவமதிப்பிற்குரிய விசயம். அவரை உடனே விடுவியுங்கள் என்று உத்தரவிட்டுள்ளார். ■

# ஒரு போர்வீரனின் மறுபக்கம்!

உள்நாட்டுப் போரில் சிக்கித்தவிக்கும் சோமாலி நாட்டு மக்களுக்கு உணவு முதலான அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கச் சென்ற ஐ.நா. துருப்புகளை மொஹமட் ஃபாரா அய்டிட்டின் சகாக்கள் துப்பாக்கி முனையில் வரவேற்க ஆரம்பித்தனர். இதனைத் தொடர்ந்து அமைதிப்படையான ஐ.நா. படை ஆயுதப் போரில் ஈடுபடவேண்டிய நிலை உருவானது. அமெரிக்கப் போர் வீரர்களே ஆயுதங்களுடன் அங்கு அதிகமாகப் போரில் ஈடுபடலாயினர். தலைநகரான மொகாதிசு ரணகளமாகியது.

அமெரிக்காவிலிருந்து சோமாலியாவுக்குச் சென்று போர்முனையில் உயிர்துறந்த இளம் வீரனான ரிச்சாட் கோவாலெவ்ஸ்கி தனது போர்முனை அனுபவங்களை, பெனிசில்வேனியாவின் குருசிபிள் என்ற இடத்தில் வசிக்கும் தன் நண்பனுக்குத் தொடர்ந்து கடிதம் மூலம் எழுதினார். அவற்றின் சில கருத்துக்களை 'டைம்' சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

இருபது வயதான ரிச்சாட், அமெரிக்க றேஞ்சர் பிரிவின் 3வது நிலையின் தலைவராகக் கடமை பார்த்து; விரைவில் ஊர் திரும்பவேண்டும் என்ற அவாவுடன் இருந்தார். தனது தாய்நாட்டையோ பெற்றாரையோ நண்பர்களையோ பார்க்கமுடியாத நிலையில் ஒக்டோபர் முதல் வாரத்தில் மாண்டுபோனார்.

திரு. ரிச்சாட் எழுதிய கடிதங்களின் சுருக்கம்:

ஆகஸ்ட்.11

என் தாய்நாட்டை நான் நேசிக்கிறேன். என் நாடு எதனை ஏற்கிறதோ அதனை நானும் ஏற்று நடக்கச் சித்தமாயிருக்கிறேன். என்னுடைய நாட்டுக்காக எனது உயிரைத் தத்தம் செய்யவும் சித்தமாயுள்ளேன்.

நான் சார்ந்திருக்கும் றேஞ்சர் பிரிவின் 3வது நிலை பற்றி சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். நான் இதனை மிகவும் நேசிப்பவன் என்பதனை நீங்கள் அறிவீர்கள். போர் வீரர்களாகிய நாங்கள் போரிட்டு- ஒருவருக்கொருவர் குழப்பிய நிலையில் இருப்பினும் இதனைப் புரிந்து கொள்ளுவதற்கு இதில் ஓரங்கமாக இருந்தால் தான் முடியும். எனது 3வது றேஞ்சர் நிலைக்குத் தலைமை தாங்குவதில் எனக்கு நிரம்ப நம்பிக்கை இருக்கிறது. எங்களுடைய நிலையே திறமை வாய்ந்தது.

ஆகஸ்ட் 20:

இரவு முழுவதும் அநேகமாக விழித்தேயிருந்தேன். எங்கள் கூடாரத்தின் மூலையிலேயே படுத்திருந்தேன். படுக்கையிலிருந்து உருண்டு வான் வெளியில் மின்னும் தாரகைகளை மணிக்கணக்காகப் பார்த்துக்கொண்டிருந்தேன். ஒரு மனிதனின் வாழ்நாளில் உண்மையாகவே சிந்திக்கும் சில வேளைகள் வருவதுண்டு. அத்தகைய



சிந்தனைகளில் ஒன்று - நாமே போக வேண்டிய காலம் வந்துவிடுமோ என்பதாகும்.

செப்ரம்பர் 3:

நான் இங்கு வந்து ஒன்பது நாட்களே ஆகின்றன. இவை ஒன்பது ஆண்டுகளோ என்று எண்ணத் தோன்றுகிறது. நாட்கள் வர வர நீண்டு கொண்டு போவதாகவே தோன்றுகிறது. இன்று அதிகாலை 4.00 மணிக்கே என் பணி தொடங்கியது.

செப்ரம்பர் 9:

எதனைக் கேட்க வேண்டும், எதனைச் செய்ய வேண்டுமென்ற நிலையறியாது குழம்பிப் போயிருக்கிறேன். இன்றுள்ள என் மனநிலை இதுதான் - இந்த நரகத்திலிருந்து விடுபட்டு வீடு வரவேண்டும்.

## மரணமாவதற்கு முன் எழுதிய மடல்!!

செப்ரம்பர் 10:

கடந்த இரவு மிகப் பயங்கரமானதாக இருந்தது. நேற்று பிற்பகல் 3.30க்கு சண்டை துவங்கியது. இரவு முழுவதும் தொடர்ந்தது. எங்களில் எவருக்கும் சேதம் ஏற்படவில்லை என்பதுதான் நல்ல செய்தி. அமெரிக்கத் துருப்புகளும் ஈடுபட்டபோதும் அவர்கள் றேஞ்சர்ஸ் பிரிவைச் சேர்ந்தவர்களல்ல.

செப்ரம்பர் 19:

அதே பழைய நிலைதான். ஆனால் ஒரு மாற்றம். நான் வீடு திரும்புவதற்கான நாட்கள் குறைந்துகொண்டிருக்கின்றன.

செப்ரம்பர் 22:

ஒற்றர்களால் திரட்டப்பட்ட விபரங்கள் பற்றிய இன்றைய விளக்கங்கள் எங்களுக்கு சற்று குழப்பத்தை ஏற்படுத்துகிறது. இன்றிரவு 150 துப்பாக்கி வீரர்கள் எங்களைத் தாக்க வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னால் கை கோர்த்துக்கொண்டு வர அவர்களைக் கேடயமாக்கி பின்புறமிருந்து வேட்டுகளைத் தீர்த்துக்கொண்டே முன்னேறி வரவிருக்கின்றனராம். என்னைத் தவறாகக் கருதவேண்டாம். இதனைக் கேட்டு எனக்குப் பெருங் குழப்பமும் பயமும் ஏற்பட்டுள்ளது.

செப்ரம்பர் 24:

எனக்கு இப்பொழுது வீட்டுக் கவலை எழுந்துள்ளது. விரைவில் வீடு வர வேண்டுமென்ற ஏக்கம் என்னை வாட்ட ஆரம்பித்துவிட்டது. ஒரு நல்ல செய்தி. படையெடுத்து வருவதாகக் கூறப்பட்ட செய்தி வெறும் கட்டுக்கதையாகி விட்டது.

செப்ரம்பர் 26:

நேற்றைய தினம் எனது வாழ்நாளிலேயே இருண்ட, கவலைதரும் நாளாக இருந்தது. மூன்று அமெரிக்க வீரர்களின் சடலங்கள் அமெரிக்க தேசியக் கொடிகளால் போர்த்தப்பட்டு பெட்டிகளுள் வைக்கப்படும் போது நான் மரியாதை செலுத்தும் முகமாக கவன நிலையில் நின்றிருந்தேன். யுத்தம் மிகவும் துன்பமயமானது. எப்படியோ ஒரு வகையில் எல்லோரையும் சாகடிக்கிறது. அந்தப் பெட்டிகளுக்குள் நானும் வைக்கப்பட நேருமேயானால் எப்படியிருக்கும் என்று எண்ணிப்பார்க்காமல் என்னால் இருக்க முடியவில்லை.'

செப்ரம்பர் 27:

இயன்ற வரை நான் மிகக் கவனமாகவே இருக்கிறேன். முழுமையாக தோட்டாக்கள் நிரப்பப்பட்ட ஆயுதத்தை எந்நேரமும் நான் என்னுடன் வைத்துக்கொண்டிருக்கிறேன். எப்போதும் எங்களைச் சுற்றி வரும் இந்தச் சோமாலியர்கள் மீது- அவர்கள் அத்துமீறி நடக்க முயன்றால், என் ஆயுதத்தைப் பிரயோகிக்கத் தயங்க மாட்டேன்.

# புத்திசாலிகள் காதலிக்கலாமா?

## வித்தியாசமான ஆராய்ச்சி

'காதலுக்குக் கண்ணில்லை' என்று ஒரு முதுமொழியுண்டு. இன்று அவ்வாறு சொல்ல முடியாது. காதல் வயப்பட்டவர்கள் அடிமுட்டாளாகிவிடுகின்றனர். அதிபுத்தி சாலிகளாகக் கருதப்படுபவர், காதலுக்குட் பட்டாரானால் அவர் புத்தியை இழந்து விடுகிறார். ஜேர்மனியிலுள்ள ஆக்ஸ்பேகைச் சேர்ந்த உளவியல் நிபுணர் டாக்டர் சிக்ஃபிரைட் கந்தர் நடத்திய ஆய்வின் முடிவில் இக்கூற்றை வெளியிட்டுள்ளார்.

"சிறந்த அறிவாளிகளாக விளங்கிய பலர் காதல் வலையில் விழுந்ததும் அவர்கள் அறிவற்றவர்களையும் விட மோசமான முட்டாள்களாக மாறிவிட்டுள்ளதை அவதானித் திருக்கிறேன்." இவ்வாறு டாக்டர் கந்தர் கூறுகிறார்.

"ஒருவர் காதல் வலையில் விழுந்ததும் அவருடைய மூளையின் நரம்புகளில் ஒருவிதத் தாக்கம் ஏற்பட்டுவிடுகிறது. இதனால் இவர்களுடைய புத்திக்கூர்மை மழுங்கி விடுகிறது. இது ஒரு மோட்டார் இயந்திரத்தில் உள்ள 'பிளக்' எனப்படும் தீப்பொறிகக்கும் சாதனத்தை ஒத்தது. இந்தப் பிளக்குகள் சில சமயங்களில் தீப்பொறிகளைக் கக்காவிட்டால் இயந்திரம் இயங்குவது கடினம். இதே போலத்தான் மூளையிலுள்ள சில



மென்மையான நரம்புகள், காதல் விவகாரங்களில் புலனைச் செலுத்தும் நபரை தளர்வடையவைத்துவிடுகின்றன. இந்நிலையில் எவ்வளவு புத்திசாலியானாலும் அவர் புத்திகுறைந்து காணப்படுவார்."

100க்கு மேற்பட்ட அறிவாளிகளையும் அறிவில் குறைந்தவர்களையும் தனது ஆய்வுகளில் பயன்படுத்தி டாக்டர் கந்தர் பேற்ற முடிவுகளை வெளியிட்டுள்ளார்.

அறிவு குறைந்தவர்கள் பொதுவாக காதல் வயப்படும் போது பெரும்பாதிப்புக் குள்ளாவதில்லை. அறிவாளிகளே காதலால் தடுமாறி புத்தியில்லாதவர்களைப் போல் ஆகிவிடுகின்றனர் என்கிறார் அவர்.

பரீட்சைக்குட்படுத்தப்பட்டவர்களை ஆய்வாளர்கள் பலதரப்பட்ட சம்பவங்களை யிட்டு சிந்திக்கும்படி கேட்டுள்ளனர். இவர்களுடைய மூளை எவ்வாறு செயற்படு கிறது, எத்தகைய தாக்கத்துக்குள்ளாகிறது என்பதனைக் கணக்கிட நவீன கருவிகளை அவர்களின் தலைகளில் பொருத்தியுள்ளனர். பல்வேறு வகை சிந்தனைகளிலும் அவர்கள் எண்ணங்களை ஆய்வாளர்கள் ஈடுபடுத்தினர். சர்வசாதாரணமாக அவற்றைக் கணக்கிடும் கருவி, இவர்கள் காதல் பற்றிய சிந்தனையில் அமிழும்போது முற்றிலும் வித்தியாசமான நிலைகளை எடுத்துக்காட்டுகின்றனவாம்.

"உயர்ந்த அறிவாற்றல் உள்ளவர்களை காதல் சிந்தனையில் ஈடுபடும்படி செய்யும் போது அவர்களிடம் அறிவில் குறைந்த நிலை ஏற்படுவதை அவதானித்தோம். அதே வேளை அறிவில் குறைந்த- கல்வி அறிவற்றவர்களுடைய எண்ணங்களும் சிந்தனைகளும் வீழ்ச்சியடையாமலிருந்தன என்பதை அவதானித்தோம்" என்று டாக்டர் கந்தர் தெரிவிக்கிறார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# யுத்தத்தினால் உருவாகிவரும் ஊனமுற்ற எதிர்காலம்!

அலசுவது—இராஜதந்திரி

## துப்பாக்கிகளுடன் ஊன்று கோல்களையும், இராணுவ வாகனங்களுடன் முச்சக்கரவண்டிகளையும் வாங்கிக் குவிக்கும் நிலையில் இலங்கை அரசு!



இலங்கைப் பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரங்களில் சர்வதேசக் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருந்தார்.

அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டனிலும், தொடர்ந்து சைப்பிரஸ் நாட்டின் தலைநகரான நிக்கோஸியாவிலும் திரு. ரணில் விக்கிரமசிங்க முக்கிய உரைகளை நிகழ்த்தியிருந்தார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் பொருளாதார நிலவரங்கள் குறித்து வெளி உலகுக்கு எடுத்துரைப்பதாகவே பிரதமர் ரணிலின் உரைகள் விளங்கியிருந்தன.

திரு.ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் இன்றைய தலைமுறையின் ஒரு தலைவராகவே சர்வதேசரீதியாக நோக்கப்பட்டிருப்பார் என்பதில் ஐயமில்லை.

இன்று உலகின் பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் அவதானிக்கும்போது இளவயதினராகவே அவர்கள் இருப்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன், பிரிட்டிஷ் பிரதமர் ஜோன்மேஜர் உட்பட அண்மையில் பதவியேற்ற பாகிஸ்தான் பிரதமர் திருமதி. பெனாஸிர் பூட்டோவும் வயதில் குறைந்தவராகவே காணப்படுகின்றார். எனவே இந்த வரிசையில் இலங்கைப் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கவும் வயதில் குறைந்த ஓர் இளந்தலைவராகவே காணப்படுகின்றார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றை எடுத்து நோக்கும் போது 1948ம் ஆண்டு சுதந்திரமடைந்ததுமுதல், இலங்கை பெரும்பாலும் பிரதம மந்திரிகளினாலேயே ஆளப்பட்டு வந்துள்ளது.

1978ம் ஆண்டுவரை இலங்கையில் செல்வாக்குமிக்க, மற்றும் ஆட்சியதிகார விடயங்களில் பெருமளவு பங்களிப்பைச் செலுத்தக்கூடிய ஒரு பதவியாகவே பிரதம மந்திரிப் பதவி விளங்கிவந்தது.

ஆனால் 1978ம் ஆண்டிலேயே பிரதமர் மந்திரி பதவி வலுவிழந்ததுடன், இலங்கையில் பூரண நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு பதவியாக ஜனாதிபதிப் பதவி தோற்றம் பெற்றிருந்தது.

கடந்த 15 வருடகாலமாக இந்த ஜனாதிபதிப் பதவியே கூடுதல் அதிகாரம் கொண்டதாக விளங்குகின்றது. அத்துடன் தற்போதைய ஜனாதிபதி திரு. டிங்கிரி பண்டா விஜேதுங்க இலங்கையின் மூன்றாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் விளங்குகின்றார்.

திரு. ரணில் விக்கிரமசிங்க இலங்கையில் பதவிக்கு வந்த பிரதம மந்திரிகள் வரிசையில் பத்தாவது பிரதம மந்திரியாகக் காணப்படுகின்றார்.

இலங்கை அரசியலில் இதுவரை மூன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் தோன்றியுள்ளனர். ஆயினும் சுதந்திரமடைந்த நாள்முதல் இன்று வரை இலங்கை பெரும்பாலும் பிரதம மந்திரிகளினால் நிர்வகிக்கப்பட்டுள்ளது. இதனால் இன்றைய பிரதம மந்திரிப் பதவி ஆட்சியதிகார விடயங்களை நிர்ணயிக்கும் தன்மையைக் கொண்டிராத போதிலும், அரசியல் ரீதியாக ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பதவியாகவே காணப்படுகின்றது.

இந்த வகையில் இன்றைய இளந் தலைமுறையின் எதிர்பார்ப்புகளுக்குரிய ஒரு இளந் தலைவராகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விளங்குகின்றார்.

1978ம் ஆண்டு ஜே.ஆர் ஜயவர்த்தனா பூரண நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் தமது அணியில் பல இளம் அரசியல்வாதிகளைக் கொண்டிருந்தார். அவர்களில் திரு.காமினி திஸாநாயக்கா, மறைந்த திரு. லலித் அத்துலத்முதலி ஆகியோருடன், திரு. ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவராக இருந்தார்.

ஆனால் திரு.காமினி திஸாநாயக்கா, கொலையுண்ட அரசியலாளர் லலித் அத்துலத் முதலி ஆகியோர் திரு. ஜே.ஆர். ஜயவர்த்தனாவைத் தொடர்ந்து இலங்கையின் ஜனாதிபதியாகத் தெரிவான அமரர் ரணசிங்க பிரேமதாசாவுடன் அரசியல் ரீதியாகப் பகைமை பாராட்டியிருந்தனர்.

இதனையடுத்து அவர்களின் அரசியல் எதிர்காலம் சூன்யமடைந்திருந்தது. அத்துடன் திரு. லலித் அத்துலத் முதலியின் வாழ்க்கையும் அஸ்த்தமனத்துக்குள்ளாகியிருந்தது.

ஆனால் திரு. ரணில் விக்கிரமசிங்க மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் விசுவாசத்துக்குரியவராக விளங்கியிருந்ததுடன், அவரின் மறைவையடுத்து ஏனைய சிரேஷ்ட ஆளுங்கட்சி உறுப்பினர்களின் அபிமானத்தைப் பெற்றவராகப் பிரதம மந்திரியாகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

திரு.ரணில் விக்கிரமசிங்க பிரதம மந்திரியாகப் பதவியேற்றதைத் தொடர்ந்து பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பங்குபற்றி, இலங்கை பெருமளவு நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதில் முக்கிய பங்கு வகித்திருந்தார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் மத்தியில் திரு.ரணில் விக்கிரமசிங்க உரையாற்றிய போது, இலங்கை அதன் இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசியல் ரீதியிலான வழிவகைகளைக் கையாளும் எனக் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் பாரிஸ் பெற்றுக் கொண்ட உதவிப் பணம் எந்த வகையிலும் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படமாட்டாது எனவும் கூறியிருந்தார்.

பாரிஸிலிருந்து இலங்கை திரும்பும் வழியில் திரு. ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கும் விஜயம் செய்திருந்தார். அங்கு இந்தியத் தலைவர்களைச் சந்தித்ததோடு பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் இலங்கை அரசு இனப் பிரச்னைத் தீர்வில் கொண்டுள்ள அக்கறையை வெளியிட்டிருந்ததுடன், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு.வே.பிரபாகரன் இனப் பிரச்னைத் தீர்வு தொடர்பாக நேரடிப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற முன்வர வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் திரு. ரணில் விக்கிரமசிங்க புதுடில்லியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் திரு.வே. பிரபாகரனை பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி அழைப்பு விடுத்துப் பேசியிருந்த போதிலும், புலிகளோ அல்லது இலங்கை அரச தரப்பினரோ எந்த வகையிலும் சமரசப் பேச்சுக்களில் பங்குபற்றக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கத் தவறியவர்களாகவே விளங்கியிருந்தனர்.

அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளுக்குப் பதிலாக இராணுவ ரீதியிலான கைகலப்பிலேயே இரு சாராரும் குதித்திருந்தனர்.

இறுதியாக இடம் பெற்றிருந்த 'யாழ்தேவி ஒப்பரேஷன்' நடவடிக்கை கூட இரு தரப்பிலும் பலத்த இழப்புக்களை ஏற்படுத்திவிட்டுள்ளதுடன், யுத்தமென்பது இரு தரப்பினருக்கும் ஒத்துவராத ஒரு விடயம் என்பதனையே எடுத்துரைப்பதாகவும் அமைந்திருந்தது.

கடந்த பத்து வருடகாலமாக இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகள் பல கோடிக்கணக்கான ரூபாய்களை ஏப்பம் விட்டனவாகவே காணப்படுகின்றன.

இந்நிலையிலேயே வாஷிங்டனில் வைத்து பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்க இலங்கை இனப்பிரச்னை பற்றிப் பிரஸ்தாபித்திருந்ததுடன், அப்பிரச்னையை பேச்சுவார்த்தைகள் மூலமாகவே தீர்க்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை என்பது இலங்கை அரசியலைப் பொறுத்தவரை வாய்ப் பேச்சுக்குரிய ஒரு பதமாகவே காணப்படுகின்றது. அத்துடன் பேச்சுவார்த்தை பற்றிப் பேசுவோரும் வாய்ச்சொல்லில் மட்டுமே வீரராக இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தவிர ஏனைய தமிழ் அமைப்புக்கள் அனைத்தும் ஜனநாயக அரசியலில் ஈடுபட்டு வருகின்றன என்றும் திரு. ரணில் தமது வாஷிங்டன் பேச்சில் குறிப்பிட்டிருந்தார்.

1987ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகும் வரை பல்வேறு தமிழ்த்தீவிரவாத இயக்கங்கள் இலங்கை அரசுக்கெதிராகப் போரிட்டு வந்தன. ஆனால் இந்தியாவின் தலையீட்டையடுத்தே புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்த்தீவிரவாத இயக்கங்கள் ஜனநாயக அரசியலில் ஈடுபட முன்வந்திருந்தன.

இந்த இயக்கங்கள் ஆயுதங்களைக் கைவிட்டிருந்தனவே தவிர, இலங்கையின் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகன கோரிக்கைகளை எந்த வகையிலும் கைவிட்டிருக்கவில்லை.

ஜனநாயக ரீதியாக ஒரு தீர்வை எட்டமுடியும் என்ற நம்பிக்கையிலேயே அத்தமிழ்த்தீவிரவாத இயக்கங்கள் தம்மை முழுமையான அரசியல் கட்சிகளாக மாற்றியிருந்தன.

மேலும் இன்று அரசியல் நீரோட்டத்தில் பங்குபற்றியுள்ள பல தமிழ் அமைப்புகள்,



இந்திய அரசாங்கம் இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக நடுநிலை வகித்து வழங்கியிருந்த உறுதி மொழிகளின் பேரிலேயே தமது ஆயுதப் போராட்டத்தையும் கைவிட்டிருந்தன.

எனவே தமிழ் போராட்டக்குழுக்களை அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளில் பங்குபற்றச் செய்வதற்கு இலங்கை அரசை விட இந்திய அரசாங்கமே பெரும் பங்காற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளாத ஒரு நிலைப்பாட்டையே கொண்டிருந்தது.

இந்நிலையில் அந்த இயக்கம், இலங்கையில் இந்திய அமைதிப்படையின் பிரசன்னத்துக்கு எதிரான போக்கைக் கொண்டிருந்த மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு முன்வந்திருந்தது.

இப்பேச்சுவார்த்தைகள் ஒரு மூடு மந்திரமாகவே விளங்கியிருந்தன.

அரசும், புலிகளும் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருந்தன.

அத்துடன் புலிகளின் அரசியல் பிரிவும் கொழும்பின் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் உதயமாகியிருந்தது.

பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன; புலிகள் முழு அளவிலான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என்று முழு நாடும் எதிர்பார்த்திருந்த வேளையிலேயே திடுதிப்பென அரசுக்கும், புலிகளுக்குமிடையே போர் மூண்டதுடன் இரு சாராரும் சமாதானக் கதவுகளை- ஓங்கி அறைந்து மூடிக்கொண்டனர்.

அரசுக்கும், புலிகளுக்குமிடையே இரண்டாவது தடவையாக மோதல்கள் ஆரம்பித்து இன்று மூன்று ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

ஆயினும் மீண்டும் சமாதானக் கதவுகளைத் திறந்து பரஸ்பர புரிந்துணர்வுடன் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் சூழ்நிலைகள் கண்ணுக்கெட்டாமலேயே இருந்து வருகின்றன.

பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்க தமது வாஷிங்டன் விஜயத்தை முடித்துக் கொண்டபின்னர் சைப்பிரஸ் நாட்டின் தலைநகரான நிக்கோஸியாவுக்கு வந்திருந்தார். அங்கு அவர் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் கூட்டத் தொடரிலும் இலங்கை அரசின் பிரதிநிதியாகப் பங்குபற்றியிருந்தார்.

திரு. ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் அரசியல் நிலவரம் பற்றி நிக்கோஸியா மகாநாட்டில் மேலெழுந்தவாரியாக மட்டுமே குறிப்பிட்டிருந்தார். ஆனால் அங்கு நிகழ்த்திய உரையில் பொஸ்னியாவில் இடம் பெற்றுவரும் இனமோதல்கள் குறித்து கரிசனை தெரிவித்திருந்ததுடன், உலக சமூகம் இந்த மோதல்கள் குறித்து பாராமுகமாக இருப்பது குறித்தும் கவலை தெரிவித்திருந்தார்.

கடந்த ஓரிரு வருடகாலமாகவே பொஸ்னியாவில் இனமோதல்கள் விஸ்வரூபமெடுத்துள்ளன. ஆனால் இலங்கையில் கடந்த பத்து வருடகாலமாக இனப்பிரச்னை தொடர்பாக ஆயுதப் போராட்டம் இடம் பெற்றுவருவதுடன் ஓர் அபாயகரமான கட்டத்தை எட்டியதாகவும் அப்போராட்டம் வடிவமெடுத்துள்ளது.

பொஸ்னியப் பிரச்னைகுறித்து உலக சமூகம் மௌனமாக இருப்பது பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கவலை தெரிவித்திருந்தார்.

ஆனால் இதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஓரிரு மாதங்களுக்கு முன்னர் இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு தொடர்பாக சர்வதேச ரீதியில் உதவிக்கரம் நீட்டப்பட்ட போது, அதனை முற்று முழுதாகத் தட்டிக்கழித்திருந்தார்.

நோபல் பரிசு பெற்ற சர்வதேச முக்கியஸ்தர்கள் இலங்கையின் இனப் பிரச்னைக்கு ஐ.நா ஸ்தாபன உதவியுடன் தீர்வொன்றைக் காண்பது தொடர்பாக முன்வைத்த யோசனைகளை பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்க பூரணமாக நிராகரித்திருந்தார். கூடவே இலங்கையின் இனப்பிரச்னையை இலங்கையினாலேயே தீர்த்துக்கொள்ள முடியும் எனவும் கருத்து வெளியிட்டிருந்தார்.

எனவே இலங்கை இனப்பிரச்னையைத் தீர்த்து வைக்கும் வகையில் சர்வதேச ரீதியாக உதவிக்கரம் நீட்டப்பட்டபோது அதனைத் தட்டிக்கழித்த திரு. ரணில் விக்கிரமசிங்க, பொஸ்னியப் பிரச்னையைத் தீர்க்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டுமெனக் கூறியிருப்பது வேடிக்கையானதாகவே காணப்படுகின்றது.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும் பொதுநலவாய அமைப்புக்கு அரசியல் தீர்வில் தமக்குள்ள விருப்பத்தை வெளியிட்டு கடிதமொன்றை அனுப்பி வைத்திருப்பதுடன், அக்கடிதத்தின் இறுதியில் இலங்கை இனப்பிரச்னைக்கு சமஷ்டி அமைப்பு முறையை மையமாகக் கொண்ட தீர்வு யோசனையைப் பரிசீலிக்கத் தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

புலிகள் அரசியல்ரீதியிலான நடவடிக்கைகளில் எவ்வளவு தூரம் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்ற விடயம் கேள்விக்குரியதொன்றாகவே இருக்கின்றது. ஆயினும் சர்வதேச ரீதியில் தகுந்த அணுகுமுறைகளை உருவாக்கும் பட்சத்தில் புலிகள் பேச்சுவார்த்தைகளுக்கு வரக்கூடிய வாயப்புக்கள் சாதகமாக இருப்பதையே பொதுநலவாய அமைப்புக்கான அவர்களது கடிதம் புலப்படுத்தி நிற்கின்றது.

இலங்கை அரசு இனப்பிரச்னையை சர்வதேச சமூகத்தின் துணையுடன் தீர்த்து வைப்பதில் எதுவித அக்கறையுமற்றிருக்கின்றது.

ஆனால் வடக்கு-கிழக்கில் இடம் பெறும் யுத்தங்களுக்கு இராணுவ சாதனங்களாகவும், வெடி பொருட்களாகவும் வெளிநாட்டு உதவியைப் பெறுவதில் இலங்கை அரசு முண்டியடித்து நிற்கின்றது.

இம்மாதம் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. இவ்வரவு செலவுத்திட்டத்திலும் பெருந்தொகையான பணம் இராணுவச் செலவீனங்களுக்கே ஒதுக்கப்படவிருக்கின்றது.

இதுவரைகாலமும் ஆட்திரட்டல்களுக்கும், புதிய படைப்பிரிவுகளுக்கும், யுத்த தளபாடங்களை வாங்கவும், மற்றும் யுத்தங்களை மேற்கொள்ளவுமே கோடிக் கணக்கான ரூபாய்கள் விரயஞ் செய்யப்பட்டன.

ஆனால் கடந்த சில வருடங்களாக போரில் மரணித்து வரும் யுத்த வீரர்களின் குடும்பங்களுக்கும், ஊனமடைந்த வீரர்களின் பராமரிப்புக்கும் கூட பல கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டே வருகின்றன.

புதிதாகப் படையில் சேரும் வீரர்களுக்கு புதிய துப்பாக்கிகளை வாங்கும் அதேவேளை, காயமடைந்து அங்கவீனமான வீரர்களுக்கு ஊன்று கோல்களையும் வாங்க இலங்கை அரசு பெரும் பணத்தைச் செலவிட்டு வருகின்றது.

இராணுவ டாங்கிகள், ஜீப் வண்டிகள், விமானங்கள் கடந்த காலங்களில் பெருமளவில் வாங்கப்பட்டன. ஆனால் போரினால் கால்களை இழந்த வீரர்களுக்கு முச்சக்கர வண்டிகளையும் பெருமளவில் வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதாகவே இலங்கை அரசு தற்போது காணப்படுகின்றது.

எனவே வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் நீடித்து வரும் யுத்தம், நாட்டினைப் பீடித்துள்ள ஒரு பெரும் நோயாகவே இருந்து வருகின்றது.

பொதுநலவாய அமைப்பிடம் சமரசத் தீர்வில் தமக்கிருக்கும் விருப்பத்தை புலிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் இலங்கை அரசு இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னையைப் பேசித்தீர்ப்பதில் உண்மையிலேயே விருப்பங்கொண்டிருந்தால், புலிகளுடன் பேச்சுக்களை நடத்த முன்வர வேண்டும்.

இதுவரை காலமும் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியோர் அவர்களை நம்பத்தகாதவர்கள் என்றே கூறிவந்தனர். எனவே இன்றைய ஆட்சியாளர்கள் புலிகளின் உண்மையான நிலைப்பாட்டை அறிய முன்வரவேண்டும்.

இதன் மூலம் இரு தரப்பினரும் தமது நிலைப்பாடுகளை உலகறியச் செய்வதுடன், ஒரு நேர்த்தியான தீர்வை நோக்கியும் தம்மை வழிநடத்த முடியும்.

இன்றைய உலகில் இனரீதியிலான பாரிய பிரச்னைகள் பலவற்றுக்கு சர்வதேச சமூகத்தின் துணையுடனேயே தீர்வு காணப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் இலங்கைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கும் சர்வதேச அரங்கில் காலடி எடுத்து வைப்பது ஒரு காலத்துக்கேற்ற நடவடிக்கையாகவே அமையும் எனக் கருதலாம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முக அழகை மெருகூட்ட சிக்கனமான சில யோசனைகள்

பெரும் பணச் செலவில் அலங்கார நிலையங்களில் பெறப்படும் பலனை வீட்டிலிருந்த வண்ணமே சர்வ சாதாரணமாகச் செய்யலாம். அழகுக் கலை நிலையங்களுக்கு அதிக பணத்தைச் செலவிடாமல் மிக மலிவாகப் பெறப்படும் பொருட்களைக் கொண்டே அதிக பலனைப் பெற்றுவிடலாம்.

அழகுக் கலையில் நிபுணர்களான பலருடைய ஆலோசனைகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

**முகத்தை சுத்திகரித்தல், அழுத்தம் (மசாஜ்) கொடுத்தல் மற்றும் முகக்காப்பிடல்:**

முகத்தைச் சுத்திகரிப்பதற்காக நீங்கள் வழமையாகப் பயன்படுத்தும் களிம்பினைப் பாவிக்கலாம். உங்கள் விரல்களைப் பயன்படுத்தியே களிம்பினைத் தடவவும். சருமத்தை சுருங்கவிடாத வண்ணம் மேல் நோக்கியே களிம்பு தடவுதல் வேண்டும். பின்னர் ஈரமான பஞ்சினால் களிம்பினை நீக்கவும். ஏற்கனவே போடப்பட்டிருந்த முக அலங்காரப்பூச்சுக்கள் தடிப்பாக இருந்தால் இருதடவைகள் சுத்திகரிக்கும் களிம்பினைப் பயன்படுத்தலாம்.

சுத்தமான நீரை ஒரு குறுகிய வாயுடைய பானையிலிட்டு கொதிக்க விடுங்கள். கொதி கண்டதும் அடுப்பிலிருந்து இறக்கி இரண்டு கரண்டி தேயிலையை அதனுள் போட்டு, வெளிவரும் ஆவியினை- ஆவி முற்றாகக் குறையும்வரை முகத்தில் படும்படி பார்த்துக்கொள்ளுங்கள். ஆவிபிடிக்கும் போது தலையை ஒரு துவாயால் மூடிக் கொள்ளுங்கள். பின்னர் குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவி மெதுவாகத் துடைத்து விடுங்கள்.

இதன் பின்னர் முகக்காப்பினை இட வேண்டும்.

முகக் காப்பினை மிகச் சாதாரண முறையில் நாமே தயாரித்துக்கொள்ளலாம்.

## முகக்காப்பு

வரண்ட சருமமுடையவர்களுக்கான முறை:

இரு முட்டைகளின் மஞ்சட் கருவை ஒரு கோப்பையிலிட்டு நன்றாக அடிக்க வேண்டும். இதனுள் ஒரு மேசைக்கரண்டி தேனையும் சில துளிகள் ஒலிவ் எண்ணெயையும் இரண்டு விட்டமின் (E) மாத்திரைகளையும் விட்டு நன்றாகக் கலக்க வேண்டும். இக்கலவையை முகத்தில் நன்றாகத் தடவி விட வேண்டும். 20 நிமிடங்களின் பின்னர் வெந்நீரில் முகத்தை மெதுவாக அலம்ப வேண்டும். துடைத்த பின்னர் சற்றுத் தாமதித்து குளிர்ந்த நீரினைப் பாவித்து முகத்தை அலம்பலாம்.

மென்மையான சாதாரண சருமமுடையவர்கள் இரு வெள்ளைக் கருவை நன்றாக அடித்து அதினுள் எலுமிச்சம் பழச்சாறு சில துளிகளை விட்டு முகத்தில் தடவி 15 நிமிடத்தில் மேற்குறிப்பிட்டதைப் போல் கழுவிவிடலாம்.




அழகு நிலையங்களுக்கு அலையத் தேவையில்லை
உங்கள் முகத்தை நீங்களே
அழகுபடுத்திக் கொள்ளலாம்.

எண்ணைப் பிடிப்பான சருமமுடையவர்கள் இருமுட்டை வெள்ளைக்கருவுடன் சிறிதளவு சோடாவும் எலுமிச்சம் பழச்சாறும் அத்துடன் கொழுப்பு 'ஆடை' நீக்கிய பால்மா சிறிது சேர்த்துக்கொள்ள வேண்டும்.

## சிகைப் பராமரிப்பு

பெரும்பாலான பெண்கள் தங்கள் தலைமுடிகளுக்கு ஷாம்பு தடவுவார்கள். ஷாம்பு அல்லது சீயக்காய் பாவிப்பவர்கள் இவ்வாறு செய்வதற்கு முன்னர் முடிகளைக் கவனமாக சிக்குகளில்லாமல் சீவுதல் வேண்டும். நெற்றியிலிருந்து முடிகளைப் பின்புறமாகச் சீவுவதை விட பின்புறமிருந்து முகத்தின் பக்கமாக முதலில் சீவுதல் வேண்டும்.

ஷாம்பு தடவுவதற்கு முன்னதாக தலையை நன்கு அழுத்தி விரல்களால் (மஸாஜ்) தேய்த்துவிட வேண்டும். தலையில் விரல்களால் வளையங்கள் ஏற்படுத்துவது போல அழுத்தம் கொடுக்கப்படல் வேண்டும். ஷாம்புவைக் கழுவும் போது எப்போதும் குளிர்ந்த நீர் பாவித்தல் வேண்டும். தொடர்ந்து அரைக் கோப்பைத் தண்ணீரில் சில துளி எலுமிச்சம்சாறினை விட்டுக் கலக்கி கேசத்தில் நன்றாகத் தடவுதல் வேண்டும். இதனால் தலையின் மேல் தோலில் ஏற்படும் சிராய்ப்புகள் சீராக்கப்படுவதுடன் கேசம் பழபழப்பாகவும் இருக்கும்.

முடியலங்காரக்கலை நிபுணரான செல்வி பாக்ஸ்டர், உஷ்ணக் காற்றினை வெளியிடும் மின் கருவி மூலம் முடியினை உலர வைத்தல் அபாயகரமானது என்று கூறுகிறார். சாதாரண காற்றினை மெதுவாக வெளியிடும் கருவிகள் அவ்வளவு பாதிப்பினை ஏற்படுத்தாது என்பதனால் வேகம் குறைந்த உஷ்ணமற்ற காற்றை வெளியிடும் கருவிகளைப் பயன்படுத்துவது பாதகமில்லை என்கிறார்.

## லேடீஸ் ஸ்பெசல்

# நீங்களும் தைக்கலாம்


## சூடிதார்


சுதா-நீர்கொழும்பு
(மல்லாகம்)


*சட்டை அகலம் 22"+1"= 23"÷2= 11 1/2"+5"= 16 1/2"*
*சட்டை உயரம் 40"*
*தோள் நீளம் 16"÷2=8"*
*கழுத்து அகலம் 2 1/2"*
*பின் கழுத்து இறக்கம் 1 1/2"*
*கை நீளம் 12"*
*கை அகலம் 16"+1"=17"+2"=19"÷2= 9 1/2"*
*நுனிக் கை சுற்றளவு 12"+1"=13"÷2=6 1/2"*
*பிஜாமா:*
*அகலம் 26"+1"= 27"÷2= 13 1/2"*
*உயரம் 30"*
*நுனிக்கால் அளவு= 7"*

33"அகலமும் 40" நீளமுமான துணியை எடுத்து இரண்டாக மடித்துக் கொள்ளவும்.

A யிலிருந்து E வரை 2 1/2" உம் Aயிலிருந்து Fவரை 1 1/2" அகலமும் அளந்து பின் கழுத்து வரைந்து கொள்க. Eயிலிருந்து Hவரை 6" குறித்துக் கொள்க. Mஇலிருந்து 5 1/2"பதிவாக Jவரையும் குறித்து J,Hஉம் வளைவாக வரைந்து கொள்க. Hஇலிருந்து 1/2" பதிவாக Iவரை அளந்து E,Iஐ இணைத்து வரைந்து கொள்ளவும். Bயிலிருந்து Nவரை 15" குறித்துக் கொள்ளவும். Nஇலிருந்து 5" உள்நோக்கி Kவரைகுறித்து J,K என்பவற்றைச் சரிவாக வரையவும். அதே போல் Kயிலிருந்து Cவரையும் சரிவாக வரைந்து கொள்ளவும்.



Cயிலிருந்து Lவரை 1"ற்கு அளந்து D,Lஐ வரைந்து கொள்ளவும்.

முன்கழுத்துக்கு Fஇலிருந்து 2 1/2" பதிவாக Gவரை அளந்து படத்தில் உள்ளவாறு வெட்டிக் கொள்ளவும்.

19" அகலமும் 12" நீளமுமான துணியை எடுத்து இரண்டாக மடித்துக் கொள்ளவும்.

Aயிலிருந்து 2"ற்கு Gவரை குறித்துக் கொள்ளவும். அதை போல Bயிலிருந்தும் Eவரை 4 1/2"ற்குக் குறிக்கவும். Aயிலிருந்து 1/2"ற்கு மேல் நோக்கி G வரை எடுத்து Gயிலிருந்து Eவரை கொஞ்சம் உள் வளைவாக வெட்டிக் கொள்ளவும்.


Dயிலிருந்து 6 1/2" Fவரை அளந்து E,Fஐ வளைத்து நுனிக்கை வெட்டிக் கொள்ளவும். இந்த மாதிரி இருந்தால் மேல் கைக்கு சுருக்கி அதிகமாக இருக்கும். நீங்கள் உங்கள் விருப் பத்திற்கு ஏற்ப கூட்டிக் குறைக்கலாம்.



30" நீளமும் 27" அகலமுமான துணியை எடுத்து இரண்டாக மடித்துக் கொள்ளுங்கள் Bயிலிருந்து 1/2" அளவிற்கு Gவரை குறித்துக் கொள்ளவும். அதே போல் B யிலிருந்து 4" அளவிற்கு F வரை குறித்து D,Fஐ வளைவாக வரைந்து வெட்டவும். Dயிலிருந்து 7" அளந்து Eவரை குறித்துக் கொள்ள்வும்.

E,Fஐப் படத்தில் உள்ளது போல வளைத்து வரைந்து வெட்டிக் கொள்ளவும்.

தைக்கும் போது E,Fஐ அதனுடன் சேர்த்துள்ள துணியுடன் சேர்த்துத் தைத்துக் கொள்ளவும். அதே போல மற்றைய பகுதியையும் தைத்துக் கொள்ளவும். இனித் தைக்கப்பட்ட இரண்டு கால் பகுதிகளினதும் G,Fஐயும் விரித்து வைத்தால் வரும் $G_1$,$F_1$ பகுதிகளையும் சேர்த்துத் தைத்துக் கொள்ளவும். நுனிக்காலுக்கு 1 1/2" அகலத்திற்குத் துணியைக் கொடுத்து தைக்கவும்.




20" அகலமும் 4" நீளமுமான துணியை எடுத்துத் தைக்கப்பட்ட A,G போன்ற பகுதிகளைச் சுருக்கி வைத்துப் பொருத்திக் கொள்ளவும். மேல் இடுப்புச் சுற்றளவுக்கு 1" அகலத்தில் மடித்துத் தைத்து நாடா போடலாம். அல்லது எலாஸ்ரிக்கு வைத்தும் தைக்கலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள்
ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் தொடர்ந்து 27வது வரை (17 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

## சமைப்போம் சுவைப்போம்

தருவது - சுகந்தினி


### கேசரி

**தேவையானவை:**
ரவை - 2 கோப்பை
பால்ரின் - 1
நெய் - 300 கிராம்
முந்திரிப் பருப்பு - 50 கிராம்
திராட்சை வற்றல் - 50 கிராம்
கேசரிப் பவுடர் - 1 தே.கரண்டி

*செய்முறை:*

வாணலியை அடுப்பில் அளவான சூட்டில் வைத்து முதலில் முந்திரிப் பருப்பை (பச்சைப் பருப்பானால்) சிறிதளவு வறுத்து தனியாக எடுத்து வைக்கவும். அதே வாணலியில் நெய்யை விட்டு அதில் ரவையைச் சேர்த்துப் பொன்னிறமாக வறுக்கவும். இதில் கேசரிப் பவுடரையும் இடவும். 4 கோப்பைத் தண்ணீரை விட்டுக் கிளறவும். தண்ணீர் உறிஞ்சப்பட்டதும் பால் பேணியைத் திறந்து பாலை ரவையில் இட்டு நன்றாகக் கிளறவும். நெய்த்துளிகள் வாணலியின் ஓரங்களில் படியும் வரை கிளறவும். பின்னர் நெய்தடவிய ஒரு தட்டில் இக்கலவையை ஊற்றவும். முந்திரிப் பருப்பையும் திராட்சையையும் தூவிவிட்டு, ஆறிய பின் பரிமாறவும்.

## வீட்டுக் குறிப்புகள்



கண்ணில் போடப்படும் 'மேக்-அப்' பை கலைக்க வேண்டுமா? சிறிதளவு ஒலிவ் ஒயிலை தொட்டு கண்களில் உள்ள மேக்-அப்பை துடைத்து எடுங்கள். சுலபமாக கலைந்து விடுவதோடு, கண்களுக்கும் நல்லது. 'மேக்-அப்' போடாத நேரத்தில் கூட ஒலிவ் ஒயிலை கண்களின் மேல் பூசி விரல்களால் மெதுவாக மசாஜ் செய்து விடுங்கள். கண்கள் கவர்ச்சியாக மாறுவதை பார்ப்பீர்கள்.



குழந்தைகளுக்கு பாதணி (ஷு) வாங்க போகிறீர்களா? வாங்கும் போதே சரியான அளவுக்கு வாங்காமல், சற்று பெரிதாக வாங்குங்கள். 'இது எங்களுக்கு தெரியாதா?' என்று கேட்கிறீர்களா? சற்று பொறுங்கள். பெரிய அளவை எப்படி தேர்ந்தெடுப்பீர்கள்?

காலின் பின்பக்கம் நீளமாகக நீட்டிக் கொண்டிருப்பதை வைத்தா? அது தவறு! ஷு போட்டு, காலின் பெருவிரல் பகுதியை தொட்டுப் பார்க்க வேண்டும். அதிலிருந்து, ஷுவின் முன் பகுதியின் முனை குறைந்த பட்சம் ஒரு அங்குலம் பெரிதாக ஷு இருக்க வேண்டும். சொக்ஸ் போட்டு ஷு போடும் போது ஷு பெரியதாக இருப்பது தெரியாது. என்ன சரிதானே வாசகர்களே!



'உங்கள் வீட்டில் இட நெருக்கடி அதிகமாக உள்ளதா? ஜன்னல் உள்ள சுவர் பக்கம், ஜன்னலை ஒட்டியபடி ஒரு மரப்பலகையை பொருத்திவிடுங்கள். ரயில்களில் 'பேர்த்' அமைத்திருப் பார்களே...அந்த முறையில் பொருத்த வேண்டும். தேவையான போது நிமிர்த்திக் கொள்ளவும், தேவையில்லாத போதுமடக்கி வைத்துவிடக்கூடிய வகையில் பொருத்த வேண்டும். இந்த பலகையின் மீது சலவை செய்யலாம். பிள்ளைகள் வீட்டுப் பாடம் எழுதலாம். இன்னும் பல தேவைகளுக்கு உபயோகமாக இருக்கும்.



சாப்பிடும் மேஜை மீது சூடான பாத்திரங்களை வைத்து விட்டீர்களா? அந்த கறை மேசையின் மீது அப்படியே இருக்கிறதா? கற்பூர தைலம் (கடைகளில் கிடைக்கும்) சிறிதளவு பஞ்சில் தோய்த்து கறைபட்ட இடத்தில் அழுத்த தேய்த்து விடுங்கள். பிறகு டேர்பன்டைன் வாங்கி மேலாக பிரஷ்ஷால் பூசி விடுங்கள். கறை இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

## பெண்களுக்குத் தனியான சுரங்க ரயில் பாதை

மெக்சிக்கோ சிட்டியில் பெண்களுக்கெனத் தனியான சுரங்க ரயில்களை சேவையில் விட்டுள்ளனர்.

தனி வண்டிகளில் அவர்கள் ஆண்களின் தொந்தரவின்றிப் பயணம் செய்யலாம்.

பெண்களுக்கும் ஆண்களுக்கும் என்று தனித்தனி சுரங்க ரயில்கள் மெக்சிக்கோ சிட்டியில் மட்டும் தான் இப்போதுள்ளன. இத்தகைய முன்மாதிரியைப் பின்பற்றலாமா என்று ஏனைய மாநில நகர பிதாக்கள் யோசித்து வருகின்றனர்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# இப்படியும் ஒரு பிச்சை! ஆடிக்கொண்டே அழுகிறது கரடி!!

பார்வையற்றவர்கள் போல நடித்துக்கொண்டு பிச்சையெடுப்பவர்களைப் பார்த்திருக்கிறோம். ஊனமுற்றவர்கள் போலவும் சிலர் பாவனை செய்வதையும் கண்டிருக்கிறோம்.



துருக்கி நாட்டில் ஒரு கரடி ஊன்றுகோலுடன் தெருவில் நடக்கிறது.

அதன் மூக்கில் ஒரு இரும்புச் சங்கிலியை மூக்கணாங்கயிறு போல மாட்டிவைத்து தெருத்தெருவாக இழுத்துத் திரிகிறான் ஒருவன்.

பிச்சையெடுப்பதற்கு இப்படியொரு முறை.

இதிலே என்ன கொடுமை என்றால், அந்தக் கரடியின் காலை அடித்து முடமாக்கியிருக்கிறார்கள்.

பார்க்கும்போது ஒரு மனிதன் பொல்லூன்றி நடப்பது போலவே இருக்கிறது.

கூடியிருக்கும் மக்கள் இந்தக் காட்சியை வியப்போடு பார்ப்பார்கள்.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு அது ஒரு அபூர்வக் காட்சி. டொலர்களை வீசுவார்கள்.

தினமும் நூறு டொலர்கள் வரை கரடியாருக்கு சேர்ந்துவிடும்.

மூக்கணாங்கயிறு போல் உள்ள இரும்புச் சங்கிலியை ஒரு சுண்டுச் சுண்டி கரடி வளர்ப்பவன் இழுத்து விடுவான்.

உடனே கரடி துள்ளிப் பாய்ந்து ஆடும். உல்லாசப் பயணிகள் அதனை இரசிப்பார்கள். அந்த வாயில்லாப் பிராணியின் கண்களில் இருந்து வடியும் கண்ணீரை யாரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை.

இப்படி ஒரு கரடியல்ல. 200க்கு மேற்பட்ட கரடிகள் துருக்கி நாட்டில் துன்புறுத்தப்படுகின்றன.

கரடிகளை வருத்திப் பிழைக்கிறார்கள். பிராணிகள் வதையைக் கண்டிக்கும் சங்கங்கள் குரல் எழுப்பினாலும் யாரும் அதைக் காதில் போட்டுக் கொள்வதில்லை.

*மனித வதை பற்றியே அக்கறைப் படாத. காலம் இது.*

*கரடி வதை பற்றி யார் அலட்டிக் கொள்ளப் போகிறார்கள்?*




# ஒட்டிய தலையோடு 43 வருட வாழ்க்கை! பிறந்ததும் அப்படி! இறந்ததும் அப்படி!!

ஜாவொன், யாவெற்றி-

இந்த இருவரும் ஒட்டிப் பிறந்தவர்கள். இரட்டையர்கள்.

உடல்கள் மட்டும் தனித்தனியே இருந்தன. தலைகள் மட்டும் பிரிய மறுத்துவிட்டன.

இருதயமும், மூளையும் இரு உடல்களுக்கும் வெவ்வேறாக இருந்த போதும் இரத்த ஓட்டம் மட்டும் இருவருடைய அங்கங்களுக்கும் ஒன்றாகவே இருந்தது.

அதனால் அவர்களின் ஒட்டியிருந்த தலைகளை வெட்டிப் பிரிக்கவில்லை.

ஒட்டிய தலையோடு ஒன்றாகவே உறங்கி, ஒன்றாகவே உண்டு, ஒன்றாகவே படித்து அவர்கள் வாழ்ந்த காலம் 43 வருடங்கள்.

43 வருடங்களிலும் அவர்கள் ஒருமுறைகூட தங்கள் பிறப்பிலே குறை ஏற்பட்டுவிட்டதே என்று வருந்தியதே இல்லையாம்.

அதுமட்டுமல்ல தம்மோடு கூட இருப்பவர்களையும் சிரிக்கவைத்து மகிழ்வார்களாம்.

ஒருநாள் திடீரென்று ஏற்பட்ட இருதயக் கோளாறு இருவரையும் பலிகொண்டுவிட்டது.

இவர்களது மரணச் செய்தி கேட்டு நண்பர்கள் பதறினார்கள். ஊர் மக்கள் கண்ணீர் மழை பொழிந்தனர்.

இறுதிச் சடங்கில் ஊரே திரண்டு வந்து அஞ்சலி செய்தது.

இருவரும் தம் கைகளைக் கோர்த்த படியே உயிர்துறந்தனர்.

சாவிலும் பிரியாத அந்த இரட்டையரை இடுகாடுவரை சுமந்து சென்றவர்களின் கண்ணீர் இறுதி ஊர்வலம் கடந்த பாதையை நனைத்தது.



இறந்துபோன இரட்டையர்களை கண்ணீரோடு சுமக்கிறார்கள்.



# சாத்தானின் மண்டை ஓடு களவாடப்பட்டதா? சர்ச்சைகள் நடக்கின்றன. மண்டை ஓடு எங்கே?

மண்டை ஓடுகளை வைத்து பல கதைகள் இருக்கின்றன.

பேய், பிசாசு, பில்லி, சூனியம் என்று பல விசயங்கள் மண்டை ஓடுகளைப் பார்க்கும் போது நினைவில் எழுகின்றன.

இப்போது ஹங்கேரி நாட்டில் ஒரு மண்டை ஓடு பற்றியே எங்கும் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

ஹங்கேரிய புதைபொருள் ஆராய்ச்சியாளர் டாக்டர் எர்வின் வெரஸ் நியூ மெக்சிக்கோவில் இருக்கும் சங்றி டி கிறிஸ்ரோ மலையடிவாரத்தில் தனது குழுவினருடன் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்.

அப்போதுதான் அந்த மண்டை ஓடு கண்டெடுக்கப்பட்டது.

கடந்த ஜூன்மாதம் 13ம் திகதி அந்த மண்டை ஓடு கண்டெடுக்கப்பட்டது. உடனே ஹங்கேரிப் பத்திரிகைகளில் மண்டை ஓட்டின் படம் பெரிதாகப் பிரசுரிக்கப்பட்டது.

இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் மண்டை ஓட்டை துருவித் துருவி ஆராய்ந்தார்கள்.

சாதாரண மனித மண்டை ஓட்டை ஒத்திருந்த போதும் அதற்கு நெற்றியின் மேலே இரு கொம்புகள் காணப்பட்டன.

அது 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மண்டை ஓடாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்தனர்.

மெக்சிக்கோவில் உள்ள ஆய்வு கூடத்தில் அந்த மண்டை ஓடு பத்திரமாக வைக்கப்பட்டிருந்தது.

மூன்று பேர் ஆயுதங்களோடு காவல் இருந்தனர்.

திடீரென்று ஒருநாள் ஆயுதபாணிகளாக வந்த நாலுபேர் காவலர்களை மடக்கினார்கள்.

மண்டை ஓட்டை களவாடிக் கொண்டு மறைந்துவிட்டார்கள்.

இதனையடுத்து பலத்த சர்ச்சைகளும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

தீய காரியங்களுக்கு மண்டை ஓட்டைப் பயன்படுத்த நினைத்த ஒரு கூட்டமே அதனைக் களவாடியிருப்பதாக சிலர் அஞ்சுகின்றனர்.

அது சாத்தானின் மண்டை ஓடு என்று ஆராய்ச்சியாளர் டாக்டர் எர்வின் கூறுகிறார்.

சாத்தானின் மண்டை ஓடு என்பதை நம்பமுடியாது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் வாழ்ந்த விசித்திர பிராணி ஒன்றின் மண்டை ஓடாக இருக்கக்கூடும் என்பது வேறு சிலரது வாதம்.

டாக்டர் எர்வின் ஒரு உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் மனிதர்களைப் போன்ற உடலமைப்புடன் சாத்தான்களும் பூமியில் உலாவின என்பதற்கான சான்றுகள் உள்ளன. ஆகவே இதுவும் சாத்தானுடைய மண்டை ஓடாக இருக்கலாம் என்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆகவே இதனை எவர் கவர்ந்து சென்றாலும் நாம் துவங்கியுள்ள ஆய்வுகள் முடிவுறும் வரையாவது இதனை எம்மிடம் கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்" என்று டாக்டர் எர்வின் வெரஸ் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு இதுவரை பலன் கிட்டவில்லை.

தன்னுடைய ஆராய்ச்சி முடிவுற்றால் கடந்த கால வரலாறு மாற்றி எழுதப்படவேண்டிய நிலை ஏற்படலாம் என்று அவர் கருதுகிறார்.

அபரிமிதமான சக்தியைப் பெறலாம் என்ற நம்பிக்கை கொண்ட கூட்டமே இதனைக் களவாடிச் சென்றிருக்கக் கூடும் என்று பொலிசார் நம்புகின்றனர்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## காதோடு சொல்லுகிறோம்

[illegible]

## மினி சினி

* பிரபல முன்னணி நடிகர்கள் பின்னணி பாடி வருவது தற்போது தமிழ்த் திரையுலகில் அதிகரித்துள்ளது. இந்த வரிசையில் கடைசியாகச் சேர்ந்திருப்பவர் நாசர். இவர் கதாநாயகனாக நடிக்கும் மகளிர் மட்டும் படத்தில் எஸ். ஜானகியுடன் இணைந்து ஒரு பாடலைப் பாடியுள்ளார்.
* ரஜினி நடிக்கவிருக்கும் வீரா திரைப்படத்தில் கதாநாயகிகளாக மீனா, ரோஜா ஆகிய இருவரும் நடிக்கவுள்ளனர். இப்படம் சித்திரைப் புத்தாண்டில் வெளிவரவுள்ளது. அதற்கு முன்னர் செல்வப்பிள்ளை, ஏழைத்தோழன் ஆகிய இரு மொழிமாற்றுப்படங்கள் வெளியாகும்.
* பிரபு- குஷ்பு திருமணச் செய்தி தமிழகப் பத்திரிகைகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. இதன் காரணமாக இருவரும் இனிமேல் இணைந்து நடிக்க மாட்டார்கள் எனத் தெரியவருகிறது. பாலசந்தரின் [illegible] படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக நடிக்கவிருந்த குஷ்புவிற்குப் பதிலாக தற்போது ஹிந்தித் திரையுலகின் முன்னணி தமிழ் நடிகையான மீனாட்சி சேஷாத்ரி நடிக்கவுள்ளார். மீனாட்சி ஏற்கனவே என் ரத்தத்தின் ரத்தமே படத்தில் பாக்கியராஜிற்கு ஜோடியாக நடித்துள்ளார்.
* அர்ஜுன் நடித்த ஜென்டில்மேன் பெருவெற்றி பெற்றதைத் தொடர்ந்து அவர் நடித்த வேற்று மொழிப்படங்கள் தமிழுக்கு மொழிமாற்றப்படுகின்றன. தற்போது தெலுங்கில் அர்ஜுன் பானுப்பிரியா ஜோடியாக நடித்த படம் ஒன்று நீதியின் குரல் என்ற பெயரில் தமிழுக்கு வருகிறது.
* [illegible] சேதுபதி ஐ.பி.எஸ் படத்தில் நடித்து வரும் விஜயகாந்த், அடுத்து சத்தியஜோதி பிலிம்ஸ் தயாரிக்கும் படமொன்றில் நடிக்கவுள்ளார். ஹீரா கதாநாயகியாக நடிக்கவுள்ள இப்படத்திற்கு [illegible] ராஜ் என்று பெயரிடப்பட்டுள்ளது.
* [illegible] ஹொலிவூட் படமொன்றில் நடிக்க வேண்டும் என்ற ஆசை பிறந்துள்ளது. இதற்காக ஆங்கிலப் படங்களை வீடியோவில் பார்த்து ஆங்கில நடிகர்கள் எப்படி எப்படி வசனம் பேசுகிறார்கள் என்பதை உன்னிப்பாக கவனித்து வருகிறார்.
* அண்மையில் நடைபெற்ற நடிகர் திலகத்தின் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் முழுவதையும் படமாக்கினார் சரிகா ஹாசன். சரிகா தயாரிக்கும் 'சிவாஜி' என்ற விவரணப் படத்தில் சேர்ப்பதற்காகவே இந்நிகழ்ச்சி படமாக்கப்பட்டது.
* புதிய முகம் படத்திற்குப் பின்னர் பாசமலர்கள் என்னும் படத்தைத் தயாரிக்கிறார் சுரேஷ்மேனன். இப்படத்தில் கதாநாயகியாக நடிப்பதற்கு பலரை அணுகினார். ஆனால் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. இறுதியில் ரேவதியையே கதாநாயகியாக்கி விட்டார். கதாநாயகனாக அரவிந்த் ஸ்வாமி நடிக்கிறார்.
* அடுத்த வருட ஆரம்பத்தில் குடும்பத்துடன் வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார் ஆனந்தராஜ்.
* கவுண்டமணி, செந்தில் இருவரையும் தொலைக்காட்சி விளம்பரப் படமொன்றில் நடிக்க அழைத்தபோது இருவரும் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.



முகப்பில் சிரிப்பது கவுதமி

வைஷ்ணவி

## ஸ்ரீதேவியை நான்...? சிரிக்கிறார் சாமி!

அரவிந்த் ஸ்வாமி வேண்டாம் என்று சொன்னாலும் திரையுலகம் அவரை விடாமல் துரத்தியது. நடிக்கவா-வா என்று அழைத்தது. இப்போது அரவிந்த் ஸ்வாமி நடித்துக்கொண்டிருக்கும் படம் பாசமலர்கள். ரேவதிதான் ஜோடி. ரேவதியின் கணவர்தான் தயாரிப்பாளர். ரகுவரன் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். தைப்பொங்கல் திருநாள் அன்று பாசமலர்கள் திரையில் மலரும். அரவிந்த் ஸ்வாமியை ஸ்ரீதேவி திருமணம் செய்யப்போவதாக வெளியான செய்தியைக் கேட்டு சிரிக்கிறார் அரவிந்த் ஸ்வாமி.



**தெளிவு** "எனக்காக எந்த ரோலும் உருவாகுதுன்னு என்னாலயே சொல்ல முடியாது! பட ஒரு விஷயம். அந்த ரோலை என்னாலே திருப்திகரமாகச் 'செய்ய முடியும்'னு நம்பிக்கை வந்துதானே என்னை டைரக்டர் கூப்பிடறார்." -குஷ்பு

## ரகுமான் இசையில் ரஜனி

கமல்ஹாசனைப் பொறுத்தவரை இளையராஜா இசையமைப்பதையே பெரிதும் விரும்புகிறார். ரஜனி அப்படியல்ல. அண்ணாமலை படத்தில் தேவாதான் இசை. என்றாலும் இளையராஜா மீது ரஜனிக்கு மதிப்பு இருக்கிறது. அவரைச் 'சாமி' என்றுதான் அழைப்பார்.

ஏ.ஆர். ரகுமான் விரைவில் ரஜனி படம் ஒன்றுக்கு இசையமைக்கப் போவதாகப் பேசப்படுகிறது. அது குருந் மோன் தயாரிக்கும் படமாக இருக்[illegible]

## எல்லாமே

—தன்[illegible]


ராசா என்று ஒரு சொல்லு [illegible] நடிக்கும் தயாரிப்பாளருமான ர[illegible] 'ராசாவே உன்னை நம்பி' [illegible] என்று அவர் தயாரித்த படங்[illegible] வித்தியாசமான பெயர். என்றா[illegible] மீண்டும் ராஜ்கிரண் கதை [illegible] பெயரில் 'ராசா' உண்டு. 'எல்லாமே [illegible] ராஜ்கிரணுக்கு ஜோடி யார் என[illegible] உண்டு. தமிழுக்கு புதுமுகமாய் [illegible]

## மொட்ட ராஜ்


[illegible]



சி னி



போலீஸ் அட்டாக் படத்தில்- அருண்பாண்டியன்



www.padippakam.com

## ...ன் ராசாதான்

...ான் ஜோடி— — — —

...தின் பெருக்குள வந்துவிட்டால ராசிதான ...ரேன் அப்படித்தான் நினைக்கிறார். ...ளப் பெத்த ராசா' 'என் ராசாவின் மனசிலே' ...படு வெற்றி 'அரண்மனைக்கிளி' வட்டும் அதுவும் வெள்ளிவிழாக் காணுகிறது. ...ம் எழுதி இயக்கி நடிக்கப் போகும் படத்தின் ...ன் ராசாதான்' அதுதான் படத்தின் பெயர். ...கன் ருது வேதான் இன்னொரு கதாநாயகியும ...றோர்கள். இசை வழக்கம் போல இளையராஜா.

## நடக்குமா அது?

கன்யாவுக்கு ஒரு ஆசையாம். நாட்டியப் பேரொளி பத்மினி நடித்த வேடங்களில் நடிக்க வேண்டுமாம். நடக்கக்கூடிய காரியமா அது?

## சஞ்சய் புகழுகிறார்

வள்ளி படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நடித்த சஞ்சய் நடனத்தில் தேர்ச்சி பெற்றவர்.

சேதுபதி ஐ.பி.எஸ் படத்தில் முக்கியமான வேடம் ஒன்றில் நடித்துவரும் சஞ்சய் ரஜினியை ஆகா ஓகோ வென்று புகழ்ந்து தள்ளுகிறார்.

முதலில் வில்லன் வேடம் என்று தயங்கினாராம். பின்னர் ரஜினிதான் ஊக்கம் கொடுத்து நடிக்க வைத்தாராம்.

## கவர்ச்சி இறக்குமதி

சரத்குமார் நடித்துவரும் படம் கட்டபொம்மன். கட்டபொம்மன் படத்தில் கவர்ச்சி காட்ட இறக்குமதி செய்யப்பட்டுள்ள நடிகை பூனம்தாஸ்குப்தா. உள்ளூர் நடிகைகளுக்கு பதில் வெளியூர் கவர்ச்சி என்றால் எடுபடும் என்று நினைக்கிறார்கள்.

## கூச்சம்

"ரசிகர் மன்றமா? எனக்கா? ஐயோ வேண்டாம். வேண்டாம்! அதிலே எனக்கு விருப்பமும் இல்லே... நேரமும் இல்லே! ப்ளீஸ்... எனக்கே நான் நடித்த பழைய காட்சிகளைப் பார்த்தா வெட்கமும் கூச்சமுமா இருக்கு!" -ரேவதி-



## மோதவரும் படங்கள்!

தீபாவளி நெருங்கி வருகிறது. புதிய திரைப்படங்களும் போட்டிபோட்டு மோதுவதற்கு தயாராகிவருகின்றன.

விஜயகாந், சத்யராஜ், பிரபு, சரத்குமார், கார்த்திக், பாக்கியராஜ், பிரசாந் ஆகியோரின் படங்கள் போட்டியில் முன்னணியில் குதிக்கப்போகின்றன.

கமல், ரஜினி படங்கள் இம்முறை போட்டியில் இல்லை. ஆனால் தனது சொந்த தயாரிப்பான 'மகளிர் மட்டும்' படத்தில் கமல் கௌரவ வேடத்தில் நடிக்கிறார்.

தீபாவளிப் போட்டியில் குதிக்கவுள்ள படங்களின் எண்ணிக்கை 13.

1. அமைதிப்படை (சத்யராஜ்)
2. திருடா, திருடா (பிரசாந்) 3. உழவன் (பிரபு)
4. சின்னஜமீன் (கார்த்திக்)
5. வீட்ல விசேஷங்க(பாக்கியராஜ்)
6. கண்மணி (பிரசாந்)
7. கிழக்கு சீமையிலே (இயக்கம் பாரதிராஜா)
8. கிளி பேச்சு கேட்கவா (மம்முட்டி-கனகா)
9. புருஷ லட்சணம் (ஜெயராமன்-குஷ்பு)
10. மகளிர் மட்டும் (நாசர்)
11. கட்டபொம்மன் (சரத்குமார்)
12. தாட்பூட் தஞ்சாவூர் (எஸ்.வி.சேகர்)
13. எங்கமுதலாளி (விஜயகாந்த்)

சபாஷ் சரியான போட்டி.

## நடனமா- நடிப்பா?

உங்களுக்கு எதில் புகழ் பெற விருப்பம் நடிப்பிலா-நடனத்திலா?

இந்தக் கேள்வியை பிரபு தேவாவிடம் கேட்டால், அவர் சொல்லும் பதில் இது: "நடன மாஸ்டராக புகழ் பெறுவதே எனது விருப்பம்"

அவர் விரும்புகிறாரோ இல்லையோ படத்தயாரிப்பாளர்கள் அவரை நடிக்க வைப்பதில் ஒரே பிடியாய் இருக்கிறார்கள்.

## கறுப்பு-வெள்ளை - சினிமா விமர்சனம்

படத்தின் தலைப்புதான் அப்படி. படம் வண்ணக்கலர்தான்.

ரகுமானுக்கு சட்டத்தரணி வேசம். மறுமலர்ச்சிக்காக பாடுபடும் பாத்திரம். கன்யாவுக்கு.

தனது வாதத்திறமையால் கொலையாளிகளைக் காப்பாற்றும் நாசர். அவரது மகன் ரகுமான்.

தந்தையை எதிர்த்து மகன் நடத்தும் கேஸ் தடுக்கிறார்.

கௌரவம் பட சிவாஜி போல நாசருக்கு மேக் அப் போட்டுப் பார்த்திருக்கிறார்கள். உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாக முடியாது. என்றாலும் நாசர் நிறைவு தருகிறார்.

கன்யா அழகு காட்டுகிறார். நாசரின் தந்தையாக வரும் திலகன் அழுத்தமான நடிப்பால் கவருகிறார்.

ஒளிப்பதிவு நன்று. அறிமுகமாகியுள்ள செந்தில்குமாரைப் பாராட்டலாம்.

இசை- தேவா.

இயக்கம் மனோபாலா.

ஆரம்பத்தில் பலத்த எதிர்பார்ப்பை உருவாக்கிவிட்டு பின்னர் தொய்வை ஏற்படுத்திவிட்டார் இயக்குநர். என்றாலும் பார்க்கலாம்.



கன்யா

## ஹொலிவூட் நியூஸ்

ஹொலிவூட்டிலும் பிறமொழிப் படங்களை வாங்கி புதிய படமாகத் தயாரிக்கும் வேலை நடக்கிறது.

பிரெஞ்சு மொழியில் வந்த திரைப்படத்தை 'சிங்கிள் வைற்வீமேல்' (தனியான வெள்ளைப் பெண்) என்ற பெயரில் தயாரித்தனர்.

29 வயது நாயகி பிரிஜெட்பொன்டா தான் கிடைப்பிலிருந்தார். அதனை அப்படியே தமிழில் 'ருத்ரா' என்ற பெயரில் தயாரித்தனர்.

கௌதமி நடித்தபோதும் படம் சரியாக ஓடவில்லை. படத்தில் துப்பாக்கியோடு நிற்கும் பிரிஜெ 'பொயின்ற் ஒவ் நோ றிட்டேர்ன்' என்னும் படத்திலும் நடித்துள்ளார்.

ஆரம்பத்தில் பெரும் வசதி உள்ள போதும் பிரிஜெ சினிமாவில் நடிக்கவே பிரியப்படுகிறார்.





## தேவியின் கனவு எளிமையான கணவர்!

ஸ்ரீதேவி இந்தித் திரையுலக ரசிகர்களின் கனவுக் கன்னியாக இருக்கலாம். ஆனால் அவருக்கும் கனவுகள் இருக்கின்றன.

சீன உணவு வகைகளை அம்மாவுடன் சேர்ந்து விரும்பிச் சாப்பிட நிறைய ஆசை.

தனக்கு வரப்போகும் கணவர் எளிமையானவராக இருக்க வேண்டும் என்று இன்னொரு ஆசையும் உண்டு.

"ரவிக்கைக்கு பின்னால்..." என்ற ஒரு மாதிரியான பாட்டோடு மாதுரி தீட்சித் பிரபலமாகிவிட்டதால் ஸ்ரீதேவிக்கு பலத்த போட்டி ஏற்பட்டுவிட்டது. இப்போது 'சந்திரமுகி,' 'லாட்லா' ஆகிய படங்களில் நடித்து வருகிறார். அவை இரண்டும் வெற்றிப் படங்களாக அமையும் என்று எதிர்பார்க்கிறார்.

முப்பது வயதை வெற்றிகரமாகக் கடந்து கொண்டிருக்கும் ஸ்ரீதேவிக்கு திருமணத்தின் பின்னரும் நடித்துக் கொண்டிருக்கவே ஆசை. ஆனால் இப்போதைய நோக்கம் எல்லாம் ஒன்றே ஒன்றுதான். தனது முதலாம் இடத்தை விடாமல் பிடித்துக்கொள்வது.

## நம்பிக்கை -ராமராஜன்-

[illegible]



## நாயகி ரெடி— —நாயகன் எங்கே?

சதா பிலிம் சர்க்யூட் என்னும் பட நிறுவனம் தயாரிக்கும் புதிய படத்தின் பெயர் 'தேசிய கீதம்'. கதாநாயகியாக சிவரஞ்சனி நடிக்கப் போகிறார். ராதாரவி, விஜயகுமார், ஜனகராஜ், செந்தில், சில்க் சுமிதா, விசித்ரா மற்றும் பலர் என்று ஒரு பட்டாளமே இருக்கிறது. ஆனால் கதாநாயகன் மட்டும் இன்னும் யார் என்று தெரியவில்லை.

வெண்ணிலவில் தாரிகையைத் தொடுத்தெடுத்து படைத்தவன் வடித்துத் தந்தானோ இந்த ஓவியத் தாரிகையை?



அமைதிப்படையில் சத்யராஜ்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## பாப்பா முரசு சிறுகதை

# அறிவே அழகு

சுகன்யா பார்ப்பதற்குக் கொழு, கொழுவென்று கொள்ளை அழகுடன் இருப்பாள். தினமும் விதவிதமாகத் தன்னை அலங்கரித்துக் கொள்வது சுகன்யாவுக்கு மிகவும் பிடிக்கும். அவளுடைய அம்மாவிற்குத் தன் மகள் அழகாக இருப்பதில் ஏகப்பட்ட பெருமிதம். மகள் கேட்பதை எல்லாம் வாங்கிக் கொடுத்துச் செல்லமாக வளர்த்தாள். சுகன்யாவின் அப்பாவிற்கு மகளை அளவுக்கு அதிகமான செல்லத்துடன் வளர்ப்பது பிடிக்கவில்லை.

அலங்காரம் செய்து கொண்டு தன்னை அழகு பார்ப்பதில் சுகன்யாவுக்கு இருந்த அக்கறை படிப்பில் இல்லாமல் போய்விட்டது. இதனால் அவள் அப்பா மிகவும் வருத்தப்பட்டார்.

"சுகன்யா, நீ உன்னை அலங்காரம் செய்து கொள்வதில் தப்பே இல்லை. அழகாகத் தோன்ற வேண்டும் என்பதில் உனக்கு இருக்கும் ஆர்வத்தில் சிறிதளவு கூடப் படிப்பில் இல்லையே. எதிர் காலத்தில் அழகு உனக்குச் சோறு போடாது. அறிவும் இருக்க வேண்டும். அப்போதுதான் மற்றவர்கள் உன்னை மதிப்பார்கள்," என்று ஒரு முறை சுகன்யாவின் அப்பா சகன்யாவுக்கு அறிவுரை கூறினார்.

அதைக் கேட்ட சுக்ன்யாவின் முகம் வாடிப் போய்விட்டது. ஓடிப் போய் அம்மாவின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். நடந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த சுகன்யாவின் அம்மாவுக்குக் கோபம் வந்துவிட்டது. நேராக அவ்ள் அப்பாவிடம் போனாள்.

"சின்னக்குழந்ததையை ஏன் இப்படிக் கடிந்து கொள்கிறீர்கள்? அவள் என்ன தப்பு செய்துவிட்டாள்?" என்று மகளுக்குப் பரிந்து கொண்டு கேட்டாள் அம்மா.

"நீதான் செல்லம் குடுத்து அவளைக் குட்டிச் சுவராக்கிக் கொண்டிருக்கிறாய். உன் மகள் ஏழாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பிற்குச் செல்வதற்கு என்ன பாடு பட்டிருக்கிறாள் தெரியுமா? எந்தப் பாடத்திலையும் நாப்பது மாக்ஸைத் தாண்டவில்லை. வெளியில சொல்லுவதற்கே வெட்கமா இருக்கிறது," என்று சுகன்யாவின் அப்பா வருத்தப்பட்டார்.

"என்னங்க பெரிய படிப்பு? அவளுக்கு இருக்கும் அழகுக்கு ராஜா மாதிரிப் புருசன் கிடைப்பான். வீட்டில் சும்மா இருக்கிறாள் படிக்கட்டுமே என்று பள்ளிக்கு அனுப்புகிறோம். இனிமேல் என் மகளை இப்படி எல்லாம் திட்டாதீங்க, அப்புறம் எனக்குக் கோவம் வரும்," என்று அப்பாவை அடக்கி விட்டாள் அம்மா. தனக்காக அம்மா பரிந்து பேசியதைக் கேட்டு உற்சாகம் அடைந்தாள் சுகன்யா. அம்மா சொன்ன மாதிரி தன்னைக் கல்யாணம் செய்து கொள்ள ஆயிரம் பேர் முன்வருவார்கள் என்று கண்ணாடி முன் நின்று தன் அழகை ரசித்தாள்.

எட்டாவது வகுப்பில் முதல் நாளன்று சென்று அமர்ந்தாள் சுகன்யா. புதிதாக ஒரு ரீச்சர் வந்திருந்தார். மாணவர்களை ஒவ்வொருவரிடமும் அவர்கள் பெயரையும் மற்ற விபரங்களையும் சொல்லும்படி கேட்டார் ஆசிரியர். அதற்குப் பின் பேச ஆரம்பித்தார்.

"மாணவர்களே! விடுமுறை கழிந்து இன்று தான் முதன் முதலில் பள்ளிக்கு வந்திருக்கிறீர்கள். இப்போதே பாடத்தை ஆரம்பித்து உங்களைப் போரடிக்க விரும்பவில்லை. கொஞ்சம் மாறுதலுக்காக ஒன்று செய்யப் போகிறேன். உங்களுடைய பொது அறிவைப் பரிசோதிக்கப் போகிறேன். நான் கேட்கும் கேள்விக்கு உங்களில் யார் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம் என்ன, எல்லாரும் ரெடிதானே?" என ஆசிரியர் கேட்க மாணவர்களும் உற்சாகமாகச் சம்மதித்தனர்.

"இந்தியாவின் முதல் பிரதம மந்திரி யார்?"

"ஜவஹர்லால் நேரு"

இந்தப்பதிலைக் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் சொன்னாள் கலா என்ற மாணவி.

"உலகின் முதற் பெண் பிரதமர் யார்?"

"திருமதி. சிறிமாவோ பண்டார நாயக்கா" இந்தப் பதிலையும் கலாதான் சொன்னாள்.

"கலா நீயே எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லிவிடுவாய் போலிருக்கிறதே, மற்றவர்கள் சொல்வதற்கும் சந்தர்ப்பம் கொடு. அவர்களுக்குத் தெரியவில்லை என்றால் நீ விடையைச் சொல்லலாம். கலாவின் ஆர்வத்தை மெச்சினார் ஆசிரியர்.

வரிசையாக ஆசிரியர் கேள்விகளைக் கேட்டுக் கொண்டு போக, சில மாணவர்கள் பதில் கூறினர். பலர் தவறாக விடை சொன்னாலும், ஆர்வத்துடன் பங்கு கொண்டனர். சுகன்யா எதற்கும் வாய் திறக்கவில்லை. ஆசிரியர் அதைக் கவனித்துவிட்டார்.

"சுகன்யா இதுவரை நீ எந்தக் கேள்விக்கும் தவறாகக் கூட விடை சொல்லவில்லை. ஏன்?" என்று ஆசிரியர் கேட்டார். சுகன்யா பேசாமல் எழுந்து நின்றாள்.

"சரி சுகன்யா, உனக்குப் பொருத்தமான கேள்வி ஒன்றைக் கேட்கிறேன். நீ அழகாக இருக்கிறாய். கடந்த வருடம் உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அழகி எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்று தெரியுமா?" என்று சிரித்துக்கொண்டே ஆசிரியர் கேட்டவுடன் பதில் தெரியாமல் தலையைக் கவிழ்த்துகொண்டாள் சுகன்யா.

"கலா உனக்குத் தெரியுமா?"

"தெரியும் மிஸ். ரஷ்யாவைச் சேர்ந்தவர்."

"சபாஷ் கலா நிறைய விசயங்கள் தெரிந்து வைத்திருக்கிறாய். மேலும், மேலும் உன் பொது அறிவை வளர்த்துக் கொள். பிற்காலத்தில் உனக்குப் பயன்படும். சுகன்யா அழகாகப் பொம்மை மாதிரி இருந்தால், அழகிப் போட்டியில்கூடக் கலந்து கொள்ள முடியாது. அந்தப் போட்டியில் ஒரு பகுதியாக உன் பொது அறிவைச் சோதிப்பார்கள் தெரியுமா?" என்று நகைச்சுவையுடன் சுகன்யாவைக் கண்டித்தார் ஆசிரியர்.

ஆசிரியர் சொன்ன செய்தி சுகன்யாவுக்குப் புதிதாக இருந்தது. கலாவைப் போல நிறைய விசயங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அவளுக்கு முதன் முதலாக ஏற்பட்டது. கலா தன் அறிவால் ஆசிரியரையும், மற்றவர்களையும் கவர்ந்தது போல் தன் அழகால் மற்றவர்களையோ, ஆசிரியரையோ கவர முடியவில்லை என்பதை உணர்ந்து கொண்டாள் சுகன்யா. அன்று முதல் அவள் படிப்பிலும் ஆர்வம் காட்டத் தொடங்கினாள்.



## பாப்பா முரசு

### இலங்கையின் பிரதான இடங்கள்

1. இயற்கை துறைமுகம்- திருகோணமலை.
2. அழகான நீர்வீழ்ச்சி- டியலுமா.
3. இரத்தினகற்கள்- இரத்தினபுரி.
4. கடற்கோட்டை- ஊர்க்காவற்துறை.
5. காகித ஆலை- வாழைச்சேனை.
6. கால்நடைப் பண்ணை- பொகவந்தலாவை.
7. புற்றுநோய் வைத்தியசாலை- மஹரகம
8. மனநோய் வைத்தியசாலை- அங்கொடை.
9. தலதா மாளிகை- கண்டி.
10. பெரிய நீர்வீழ்ச்சி- பம்பரகந்த.
11. ஏழு வெந்நீர்க் கிணறுகள்- கிண்ணியா.
12. வெள்ளரசு மரம்- அனுராதபுரம்.
13. சீனி- கந்தளாய்
14. குகை ஓவியம்- தம்புள்ள
15. பாராளுமன்றம்- ஸ்ரீஜயவர்த்தனபுர.

எம்.வசந்தராணி
பதுளை.

### பத்து வரை தெரியுமா?

ஒன்று- யாருக்கும் தலை ஒன்று
இரண்டு- முகத்தில் கண் இரண்டு
மூன்று- முக்காலி கால் மூன்று
நான்கு- நாயின் கால் நான்கு
ஐந்து- ஒரு கை விரல் ஐந்து
ஆறு- ஈயின் கால் ஆறு
ஏழு- வாரத்தில் நாள் ஏழு
எட்டு- சிலந்தியின் கால் எட்டு
ஒன்பது- தானிய வகை ஒன்பது
பத்து- இரு கால் விரல் பத்து.

ஏ.குசைன்தீன்
மூதூர்-02.

### உலக தரிசன நிறுவனம் (World Vision)

- உலக தரிசன நிறுவனம் ஆரம்பம்: 1947ம் ஆண்டு
- அதை ஆரம்பித்தவர்: டாக்டர் பாம் பியர்ஸ் என்ற அமெரிக்கர்.
- இவர் முதன் முதலில் உதவி செய்த சிறுமி: வைட் ஜேட் என்ற சிறுமி.
- இந்நிறுவனம் முதலில்- 5 அமெரிக்க டொலர் தொகையுடன் ஆரம்பமாகியது.
- தற்பொழுது உலகத்தரிசன நிறுவன கண்காணிப்பில் வளரும் பிள்ளைகளின் எண்ணிக்கை: சுமார் 12 இலட்சம் சிறுவர் சிறுமியர்.
- இவற்றில் இந்தியாவில் மட்டும்: 89,000 குழந்தைகள் வளர்கின்றனர்.

கந்தப்பெருமாள் நிமலதாசன்
மட்/மங்காடு ச.வி

### கோழி உனக்குத் தெரியுமா?



*கோழி கோழி ஓடி வா*
*குஞ்சைக் கூட்டி ஓடி வா*
*செட்டையின் உள்ளே அடைக்கின்றாய்*
*சேமமாய் இருக்கச் செய்கின்றாய்*
*சிறுவர் எங்களைக் காட்பதற்கு*
*சிறிய இயேசு வருகின்றார்*
*சீராய் ஆடிப் பாடிடுவோம்.*
*சின்ன இயேசுவை வாழ்த்திடுவோம்.*
*கோழி உனக்குத் தெரியுமா*
*குஞ்சைக் கூட்டி ஓடிவா.*

ரி.ஆன்.அஞ்சனா
கல்முனை.

### விடுகதைகளும் விடைகளும்

1. இரவும், பகலும் ஓய்வு இல்லை. அவன் உறங்கினால் எழுப்ப ஆளில்லை. அவன் யார்?
2. உள்ளே இருந்தால் ஓடித்திரியும். வெளியில் வந்தால் உடனே முடியும். அது எது?
3. வெள்ளைக் குதிரைக்குப் பச்சைவால். அது என்ன?
4. பல் உடைந்தால் பல் வளராது. அது என்ன?
5. வெள்ளைத் திடலில் கருப்புமணி. அது என்ன?
6. வெயில் நேரத்தில் உடம்பில் தோன்றுவான். அவன் யார்?
7. வெள்ளைப் புறாவும் மஞ்சள் புறாவும் ஒரே வீட்டக்குள். அது என்ன?
8. வருவதும் போவதும் தெரியாது, வரும் போதுசுகம் தருவான். அவன் யார்?
9. எட்டிப் பார்த்ததுமே புலம்பத் தொடங்கிவிடுவான். அவன் யார்?
10. பாடாத பாட்டெல்லாம் பாட வந்தான். கல்லான நெஞ்சையே கலங்க வைத்தான். அவன் யார்?

விடைகள்
1. இருதயம்
2. மீன்
3. வெள்ளை முள்ளங்கி
4. சீப்பு
5. கண்கள்
6. வேர்க்குரு
7. முட்டை
8. தென்றல்
9. நாக்கு
10. கொசு

சிவசங்கர சர்மா
கொழும்பு-04.

### பிரபல நூல்களும் எழுத்தாளர்களும்

1. பெரிய புராணம்- சேக்கிழார்
2. சீறாப் புராணம்- உமறுப்புலவர்
3. திருவாசகம்- மாணிக்கவாசகர்
4. திருப்புகழ்- அருணகிரிநாதர்
5. சிலப்பதிகாரம்- இளங்கோ அடிகள்
6. இராமாயணம்- வால்மீகி
7. மகாபாரதம்- வில்லிபுத்தூரர்
8. மகாவம்சம்- மகாநம
9. சத்திய சோதனை- மகாத்மா காந்தி
10. பாஞ்சாலி சபதம்- சுப்ரமணிய பாரதியார்

கனபதி சுதா-கந்தப்பளை.

### சிந்தனை முத்துக்கள்

- உறுதியுள்ள மனிதனுக்கு கவலைகள் ஏற்படுவதில்லை. விவேகமுள்ள மனிதனுக்கு குழப்பங்கள் உண்டாவதில்லை. தைரியமுள்ள மனிதனுக்கு அச்சம் உண்டாவதில்லை.
- வெற்றி என்பது ஒருவனின் குறிக்கோள்களையும், அதை நிறைவேற்றுவதில் எதிர்ப்புக்கு அஞ்சாமல் அவன் கொண்டு செயற்படும் ஊக்கத்தையும் வைத்தே அமைகின்றது.

றிஸானா அன்வர்-தெலியாகொண்ணை.

1. வண்ண நிறத்தழகி. வாடாத உடையழகி. மாறாத சுவை தருவாள். அவள் யார்?
2. ஒற்றைக் கண் வட்டமுகம். விழி திறந்தால் ஒளி வெள்ளம் பாயும். அது என்ள?
3. நீந்தத் தெரியாதவன். நீருக்குள் குதிக்கிறான். அவன் யார்?
4. வீதியில் நிற்கும் மரம். பகலில் பூக்காது. இரவில் பூக்கும். அந்த மரம் என்ன?
5. கோடையில் ஆடிவரும். வாடையில் முடங்கி விடும். அது என்ன?
6. முத்தமிழைக் கேட்டும் மூடாத கதவுகள். அது என்ன?
7. மழைநீர் நிரம்பாத குளம். மக்கள் வெட்டாத குளம். அது என்ன?
8. வட்ட வட்டமாய் இருக்கும். வண்ணம் பல காட்டும். வஞ்சியர் கையில் கொஞ்சி விளையாடும். அது என்ன?
9. ஏறு ஏறு சங்கிலி. இறங்கு இறங்கு சங்கிலி. எட்டாத கொப்பெல்லாம் தொட்டுவா சங்கிலி. அது என்ன?

விடைகள்
1. வாழைப்பழம்
2. டோர்ச்லைட்
3. வாளி
4. மின்சாரக் கம்பம்
5. மின்விசிறி
6. காது
7. இளநீர்
8. வளையல்
9. அணில்


ஜே. ஏ மஞ்சுளா-மட்டக்களப்பு.

1. அம்மா பச்சை. அப்பா வெள்ளை. பிள்ளை கறுப்பு
2. ஊருக்கெல்லாம் ஒரே விளக்கு.
3. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம்.
4. தாய் தள்ளப்பட்டு தரையிலே கிடக்கிறாள். மகள் மகாராணி மகிமையாய் இருக்கிறாள்.
5. முகத்திலே மூக்கில்லாமல், கையிலே மூக்குடையவன்.
6. உயரக் கிளையில் உரல் கட்டித் தொங்குவது.
7. வெளிச்சத்திலே பிறந்ததை இருட்டிலே பார்க்கின்றோம்.
8. காட்டிலே பச்சை. கடையிலே கறுப்பு. வீட்டிலே சிவப்பு.

விடைகள்
1. அன்னமுன்னாப்பழம்
2. சூரியன்
3. உள்ளங்கை
4. முத்துச் சிப்பியும் முத்தும்
5. யானை
6. பலாப்பழம்
7. சினிமாப்படம்
8. விறகு

எ.எப். றமீஸ்
அல்ஹம்றா மகாவித்தியாலயம்-தோப்பூர்-03.

### சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



*மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபால்ட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.11.1933.*

வர்ணம் தீட்டும் போட்டி இல: 14
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு -05.

### வர்ணம் தீட்டும் போட்டி இல.11

பரிசுக்குரியவர்: எஸ்.எம். சைபீத்
இசுப்பத்தான மகாவித்தியாலயம்,
கொழும்பு -5.

பாராட்டுக்குரியவர்கள்:
செல்வி. க.சுரேந்தினி
நாமகள் வித்தியாலயம்-கல்குடா.
மயூர தர்ஷினி
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி -கொழும்பு-4.
செல்வன். ஜொனி மத்தியு
புனித சூசையப்பர் கல்லூரி-திருகோணமலை.
செல்வி. டர்ஷிகா சிவதாஸ்
நீர்/ விஜயரத்தினம் மகாவித்தியாலயம்-நீர்கொழும்பு.
பரமானந்தன் சங்கீதா
இந்துகல்லூரி-மாத்தளை.
சரன்யா திருச்செல்வம்-பண்டாரவளை.
செல்வி சிவராசா சுபானுஜா
களுவாஞ்சிக்குடி.
செல்வி. றினோஸா மௌசியா
தி/முஸ்லிம் மகா வித்தியாலயம்-திருகோணமலை.
கி.மு. அப்துல் பரீட்
முனைச் சேனை-04-கிண்ணியா.
எஸ். ஸ்ரீஹரி
சிவன் கோவில்-இரத்தினபுரி.

## இதுவும் ஒருவகைச் சுரண்டல்!

நாள் கூலிச் சம்பளத்தில்
நாகமுத்து விதானையாரின்
பாழ் வீட்டைப் பழுதுபார்த்து
பூசி, மினுக்கிவைக்க
ஆள்பார்த்துத் திரிந்த வேளை
அடியேன்நான் அகப்பட்டேன்.
"நாளைக்கே வந்து வீட்டு
வேலைகளைச் செய்யுமென்றார்!

எட்டுநாளில் முடியும் வேலை!
என்றாலும் இழுத்திழுத்து
பத்துநாளைப் போக்கிவிட்டால்
பணத்தை நன்றாய்க் கறந்திடலாம்!
முத்தல் விதானையாரின்
முகமுடைக்கத்துணிவில்லை!
இப்படித்தான் விதானையார்க்கு
ஏதாச்சும் செய்ய வேண்டும்!

இந்த நினைவுடன் நான்
என்சாமான் சட்டுகளை
ஒன்றாக 'பேக்'கில் வைத்து
உசாராகத்தான் நடந்தேன்.
அங்கே அப் பாழ் வீட்டில்
அவர் மனைவி, பிள்ளைகளும்
என்னையே பார்த்து நின்று
இழித்தார்கள்; எனைமறந்தேன்.

சும்மா சொல்லக்கூடாது;
சுப்பர்தான் அவர் மக்கள்!
இம்மண்ணில் அவரெழில்போல்
எங்கும் நான் கண்டதில்லை!
கண்மூடி விழிப்பதற்குள்
கடகடத்து வேலையெல்லாம்
என்னென்று நான் முடித்தேன்?
எனக்கே பேர் ஆச்சரியம்!

பத்து நாள் திட்டம் போட்டு
போனநான் மூன்றே நாளில்
அத்தனை சுவரும் பூசி
அழகுபடுத்திவிட்டேன்.
முத்தல் விதானையார் தன்
மூத்தவள், இளையவளின்
சொத்தைகளைப் பார்க்கவிட்டு
சுரண்டிவிட்டார் என்னுழைப்பை!

-கவிஞர் செ.குணரத்தினம்-

## விலங்கினை உடைத்து.....

யுத்தங்கள்
இங்கே-
சத்தங்கள் போட
இரத்தங்கள்
கொதித்து
சட்டென்று சீறும்.

•

வான் பெயர்ந்து
சிதறி
புவிமீது அழுது
வீண் கொலைகள் புரியும்;
சில உயிர்கள்
பிரியும்.

•

இனவாதப் புயலில்
இனசனங்கள் அழியும்,
மொழிவாதத் தீயில்
உரிமைகள் கருகும்.

•

சுதந்திரத்தின்
கரங்கள்
கடிவாளமிட்டு
கறைபடிந்து கிடக்கும்

•

நாட்டில்
கொலை ஞானம்
உதிக்க
உயிரான தேசம்
பிணமாகிக் கிடக்கும்.
அப்போது
சவஞானம்
எனக்குள்
சரித்திரம் எழுதும்
சமாதானம் கூட
கையொப்பம் போடும்.

ஒட்டமாவடி-அறபாத்.

## தேன் கிண்ணம்


### எமனுக்கும் வேலையில்லை!

"சித்திரகுப்த்தா....
என்
எருமைக் கடாவையும்,
இந்த
அரியாசனத்தையும்
சிவபிரானிடம் ஒப்படைத்துவிடு.

• •

"யோசிக்கின்றாயா....?
பூலோகத்தில்தான்
மானிடரை பூண்டோடு
ஒழிக்க
எயிட்ஸ் வந்துவிட்டதே!"

முத்துக்குமார் ரமேஷ்
கொழும்பு-15.





## தீபாவளிக் கவிதை

### தமிழ் முதுகு

விடியலின் கனவுகளை
கரைத்துக்கொண்டு
காணமற் போன
'தீபாவளி'கள்
கடந்தவைதானா?

மனிதத்தை
வியாபாரமாக்கிவிட்ட
தேசத்தில்
விடியல்கள்...
விலைபோகாத
விளாம்பழங்களே!

அரக்கத் தனங்களை
அழிக்கப் புகுந்த கிருஷ்ணர்களும்
அசுரர்களுக்கே
அடிமைப் பட்டு விட்டார்கள்.

இனிவரும் சந்ததியாவது
உத்தமர்களாக ஜனனிக்க
இத்தீபாவளியிலாவது
கொள்கைப் பிரகடனம்
செய்து கொள்வோம்.

எங்கள் முதுகுகள்
வினாக்குறிகளல்ல!
விழிப்புக்குறிகள்!!

மாவை-வரோதயன்.

## வறுமை வரலாறு!

கொஞ்சம்
காது கொடுங்கள்
இது எங்கள்
ஜீவித வரலாறு!
வெறுமையான வயிறுகள்
சொல்லும்
வறுமைக்கதைகள்
வழியா வழியாய்
'தொடரும்'
என்ற முடிவோடு
வளர்கின்றன!

எழுத்துகள் அறியாத
எங்கள் இளைஞர்கள்
இன்னும்
தெருக்களில் விளையாடுகிறார்கள்.
ஏறிப்போகவேண்டிய
எதிர்கால தூரம்
தெரியாமல்!

நாங்கள்
குளித்த பின்னும்கூட
குளத்துக்குள்ளேயே
நிற்கிறோம்

அவிழ்த்த
இடைத்துணி
காயும் வரை!

நாள்தோறும்
சோற்றைப் பற்றியே
சிந்திப்பதால்
ஏற்றம் பெறுவதை
நினைக்க
எங்களுக்கு நேரமில்லை!

உண்ணாமல்
உறக்கம் மறந்து
உட்கார்ந்திருந்த
நாட்கள் எத்தனையோ!

அந்தரமாய்ப் போன
எங்கள் ஜீவியத்துக்கு
ஆள்வோரின்
ஆதரவுகளும்
எம்மை
அணுகியதில்லை!

பூமியில்
வந்ததனாலே
வாழ்கிறோம்
வறுமைச் சிறைக்குள்
ஆயுள் கைதிகளாய்!

எங்கள்
வரலாறுகளும்
சரித்திரம் தேடுகிறது
வசந்தப் பொறிக்குள்
வாழ்க்கை
விழும்
நாள் நோக்கி!

கே.கனகராஜா.

## "புது உலகம் சமைப்போம்!"

"அழிவுகளை அழிப்போம் என்று கவி படிப்போம்
ஆயுதங்கள் கழிப்போம் என்று கவி படிப்போம்
இனவாதம் ஒழிப்போம் என்று கவி படிப்போம்
சுவிரக்கம் செழித்துவர புது உலகம்
சமைப்போம்!
உயிர்ப்பலி களைவோம் என்று கவி படிப்போம்
ஊனமற்று தெளிவோம் என்று கவி படிப்போம்
எதிர்ப்பின்றி விளைவோம் என்று கவி படிப்போம்
ஏடுகள் புதிதாய் நுழைத்து புது உலகம்
சமைப்போம்!
ஐக்கியம் காப்போம் என்று கவி படிப்போம்
ஒற்றுமை மீட்போம் என்று கவி படிப்போம்
ஓரினமாய் வாழ்வோம் என்று கவி படிப்போம்
ஔவை போற்றிய தமிழ் ஓங்க புது உலகம்
சமைப்போம்!"

சாந்தினி சந்திரன்.





## சோகம்!

மனக்கடலில்
கானல் கொதிப்பினால்
உண்டான பிரளயம்!
ஏமாற்ற விழுதுகளினால்
மரத்துப் போன
பாலைவனம்!
இதயத்தரையில் விரிக்கப்பட்டு
நெருப்பினால்
நெய்யப்பட்ட கறுப்புத்துணி!

ஷஹிர்ஷா தாஸிம்
தர்கா நகர்.

## காதல்!

பருவ
விசிறியின்
வீச்சினால்
வெளியேறும்
"காற்று"

• •

விழி வலையில்
பிடிபடும்
"மீன்"

• •

இதயத்தின்
அடையாளச்
சின்னம்!!

• •

அவள் மீது
நான்
எறிந்த
பந்து

• •

ஆலங்குளத்தூர் ரோஷான் ஏ.ஜிப்ரி.

## அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

### நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



இலக்கம்-15
சுப்பர் ஸ்டார் சந்திப்பு

காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-...............................................
படத்தின் இயக்குநர் பெயர்:-...............................................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-...............................................
இப்படம் வெளியான ஆண்டு:-...............................................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.

## இங்கே இரண்டு கொடு

சேத்தூர் பகீரதி-மட்டுநகர்

நிமிடக் கதை



அலுவலகத்துக்குச் செல்வதற்கு ராஜா தயாராகிக் கொண்டிருந்தான். எல்லா வேலைகளையும் முடித்து விட்டு அலுவலகம் செல்வதற்கு தன்னையே பார்த்துக்கொண்டிருக்கும் சுதாவைப்பார்த்து ராஜா அழகாக, ஆனால் நிறைய அசடு வழியச் சிரித்தான். "போகலாமா ராஜா" சுதா கேட்க, ராஜா சுதாவைநெருங்கி அமர்ந்து சுதாவின் தோளில் கை போட்டவாறு "சுதாக்கண்ணு ஒண்ணுதாடா" என்று கெஞ்சினான். சுதா முகம் சுளிப்பதைக்கண்டராஜா பொய்யாக "ஒண்ணா ரெண்டா கொடு" என ஓர் பாடலைப்பாடியவாறு சுதாவின் கரங்களைப் பற்றி "ப்ளீஸ் ஒண்ணுதாம்மா" மீண்டும் ராஜா கெஞ்சினான்.

இல்லையென சுதா தலையசைக்க ராஜா மீண்டும் கெஞ்சினான். ராஜாவைக் கேபாபத்துடன் பார்த்த சுதா "ஒரு நாளைக்கு ஒண்ணுதான். ராத்திரி அப்படியும், இப்படியுமா ரெண்டு தந்துட்டேன்... இன்னிக்கு..." சுதா முடிப்பதற்குள் "சுதா நீ தராட்டா இன்னிக்கு ஓஃப்பீசுல வேலையே ஒடாதம்மா உனக்குத் தெரியாம நான் ஒண்ணும் செய்யுறதில்லையே. கருணை காட்டுடா. சுதாக் கண்ணா. வரும்போது அல்வா வாங்கிக்கொண்டு வர்றேன்" கெஞ்சும் ராஜாவைப் பரிதாபமாகப் பார்த்த சுதா எதையோ எடுத்து ராஜாவிடம் நீட்டியபடி "ராஜா உன்னோட ஹாட் வீக்கா இருக்கு ஒரு நாளைக்கு ஒரு சிகரெட்டுக்கு மேல பிடிக்க வேண்டாம்னு டாக்டர் என்கிட்ட உன்னை கவனிச்சுக்கொள்ளச் சொன்னா கேட்கிறாயில்லையே" என்று ராஜாவின் நண்பன் சுதாகர் சிகரெட்டை நீட்டினான். வாங்கிக்கொண்ட ராஜா "சுதாக்கண்ணா ரொம்ப தாங்ஸ். இனி ராத்திரி ஒண்ணு தந்தா போதும்" என்று புன்னகைக்க, சுதாகரும் சிரித்தான்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(07.11.93 முதல் 13.11.93 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| துலாம் | - சூரியன், புதன், வியாழன், வெள்ளி |
| விருட்சிகம் | - இராகு, செவ்வாய் |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |

கர்க்கடகம், சிம்மம், கன்னி இராசிகளில் சந்திரன் சஞ்சாரம் செய்வார்.

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணக்கஷ்டம், யோசனை மிகுதி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | அந்நியரால் தொல்லை, அளவுக்கு மிஞ்சிய செலவு. | காலை 11 மணி |
| செவ்வாய்- | பணவரவு, மனக்கவலை நீக்கம். | காலை 10 மணி |
| புதன்- | எடுத்த கருமம் வெற்றி, மனமகிழ்ச்சி. | காலை 11 மணி |
| வியாழன்- | பணத்தட்டுப்பாடு, உறவினரால் தொல்லை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், பொருள் நஷ்டம். | பி.ப 4 மணி |
| சனி- | ஆடம்பரச் செலவு, குடும்பத்தில் பிணக்கு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனஅமைதி குன்றும், பொருள் நட்டம். | பி.ப 3 மணி |
| திங்கள்- | பணத்தட்டுப்பாடு, செய்தொழில் மேன்மை. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | தனலாபம், இடப்பெயர்வு. | பி.ப 2 மணி |
| புதன்- | பெரியோர் சகவாசம், மனமகிழ்ச்சி. | பி.ப 4 மணி |
| வியாழன்- | காரிய சித்தி, கௌரவப் பேறு. | காலை 8 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், புதிய தொழில் சித்தி. | காலை 9 மணி |
| சனி- | அந்நியரால் தொல்லை, மனச்சஞ்சலம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்- 6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் பிரயாசம், புதிய திட்டங்கள் வெற்றி. | பி.ப 1 மணி |
| திங்கள்- | பணவரவு, காரியசித்தி. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்ச்சி, பெரியோர் நட்பு. | காலை 9 மணி |
| புதன்- | பண்கஷ்டம், அந்நியர் உதவி.உதவி. | காலை 10 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயம், வீண் மனஸ்தாபம். | காலை 11 மணி |
| வெள்ளி- | தேகசுகம் பாதிப்பு, வைத்தியச் செலவு. | பி.ப 2 மணி |
| சனி- | கடன் பயம், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, சுகபோகம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | மனக்குறை நீங்கும், பிள்ளைகளால் மகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | எடுத்த கருமம் வெற்றி, தருமச் சிந்தை. | காலை 9 மணி |
| புதன்- | மனமகிழ்வு, வீண் சஞ்சலம். | காலை 11 மணி |
| வியாழன்- | மனத்தைரியம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, தொழில் மேன்மை. | காலை 11 மணி |
| சனி- | நடைக்கஷ்டம், கருமங்களில் வெற்றி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 8

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், குடும்ப சுகம். | காலை 11 மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்ச்சி, வீண் செலவு. | காலை 10 மணி |
| புதன்- | வெளியிடப் பிரயாணம், மகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| வியாழன்- | எடுத்த காரியம் வெற்றி, புகழ். | காலை 9 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, திடீர் அதிஷ்டம். | காலை 10 மணி |
| சனி- | உறவினர் தொல்லை, துயர் அதிகம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, பொருள் பேறு. | காலை 9 மணி |
| திங்கள- | துயர் நீங்கும், எண்ணிய கருமம் வெற்றி. | காலை 11 மணி |
| செவ்வாய்- | மனப்பயம் நீங்கும், பொருள் பேறு. | பி.ப 3 மணி |
| புதன்- | வெளியிடப் பயணம், கருமங்களில் தடை. | காலை 10 மணி |
| வியாழன்- | நிலைப்பிரிவு, வீண் வாக்குவாதம். | பி.ப 4 மணி |
| வெள்ளி- | பெரியோர் சகவாசம், உயர்வு. | காலை 9 மணி |
| சனி- | திடீர் விபத்து, சஞ்சலம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்- 2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்தோர் நட்பு, கௌரவம். | பி.ப 3 மணி |
| திங்கள்- | மறைமுக நோய், வீண் சஞ்சலம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | துயர் அதிகம், செலவு மிகுதி. | பி.ப 3 மணி |
| புதன்- | செய் தொழில் விருத்தி, முன்னேற்றம். | காலை 8 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, பூமியால் லாபம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | எண்ணிய கருமம் தடை, வெளியிடப் பயணம். | பி.ப 3 மணி |
| சனி- | தெய்வ அனுகூலம், காரிய சித்தி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் - 6

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப 3 மணி |
| திங்கள்- | கௌரவம், செல்வப் பேறு. | காலை 11 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| புதன்- | புதிய முயற்சி, வீண் சிரமம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, தொழில் கேடு. | பி.ப 4 மணி |
| வெள்ளி- | மறைமுக எதிர்ப்பு, கவலை. | காலை 8 மணி |
| சனி- | பொருள் பேறு, புதிய அனுகூலம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிட வாழ்க்கை, சுகபோகம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், மனமகிழ்ச்சி. | காலை 11 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், பெரியோர் சகவாசம். | பி.ப 4 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, மனச்சுமை நீங்கும். | காலை 10 மணி |
| வியாழன்- | வீண் செலவு, பணக் கஷ்டம். | பி.ப 3 மணி |
| வெள்ளி- | எண்ணங்களில் வெற்றி, சுகபோகம். | பி.ப 4 மணி |
| சனி- | மறைமுக எதிர்ப்பு, பயமிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் - 1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தேகசுகம் பாதிக்கும், செலவு மிகுதி. | பி.ப 4 மணி |
| திங்கள்- | காரிய சித்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| புதன்- | தனலாபம், வரவுக்கு ஏற்ற செலவு. | காலை 10 மணி |
| வியாழன்- | உயர்ச்சி, பெரியோர் சகவாசம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | தூர இடப் பயணம், கஷ்டநிலை. | காலை 8 மணி |
| சனி- | மனத்துயர் நீங்கும், பணத்தட்டுப்பாடு மறையும். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 9

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியத்தடை, மனச்சஞ்சலம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | வீண் சகவாசம், கௌரவம் குறைவு. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பிரயாணம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| புதன்- | தனவிருத்தி, வரவுக்கு மிஞ்சிய செலவு. | காலை 9 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, கருமங்களில் வெற்றி. | காலை 9 மணி |
| சனி- | துயர் நீங்கும், புதிய வாழ்வு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், பிள்ளைகளால் மகிழ்ச்சி. | காலை 8 மணி |
| திங்கள்- | வீண் பிரயாசம், வெளியிடப் பிரயாணம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, புதிய முயற்சி. | பி.ப 3 மணி |
| புதன்- | பணவரவு, காரிய சுகம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், அதிகார சித்தி. | காலை 10 மணி |
| வெள்ளி- | அந்நியர் சகவாசம், வெளியிட வாழ்க்கை. | காலை 11 மணி |
| சனி- | எடுத்த கருமத்தில் வெற்றி, பணவரவு. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 5

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ விந்தைகள்

## 41 வருடங்கள் வயிற்றில் வாழும் குழந்தை!



மருத்துவ உலகமே மூக்கின் மேல் விரலை வைக்கிறது.

62 வயதான கைம்பெண் தனது வயிற்றில் கடந்த 41 வருடங்களாகக் குழந்தையைச் சுமக்கிறாள்.

இதனைக் கண்டறிந்த மருத்துவர்கள் அதிசயிக்கின்றனர். மருத்துவ வரலாற்றில் இத்தகைய விந்தை இதுவரை நடைபெறவில்லை என்று வியக்கின்றனர்.

மேற்கு வேர்ஜீனியா மாநிலம், வீலிங் நகரைச் சேர்ந்த இரேனி மக்கர்தி 1949ல் திருமணம் செய்துகொண்டார். அப்போது அவருக்கு 18 வயது. மூன்று வருடங்களின் பின்னர் கர்ப்பமானார். ஆனால் அவருடைய வயிற்றில் வளர்ந்த குழந்தை வெளிவரவில்லை. இவருக்கு பிரசவ வேதனை ஏற்பட்டதனை இன்றும் நினைவில் வைத்திருக்கிறார்.

சத்திர சிகிச்சை மூலம் தான் குழந்தையைப் பிரசவிக்க வேண்டும் என்று மருத்துவர்கள் அப்போது கூறிய யோசனையை இரேனி ஏற்க மறுத்துவிட்டார்.

"அப்போது நான் மிகவும் பலயீனமாகவிருந்தேன். அத்துடன் பல காரணங்களுக்காக உணர்ச்சிவசப்பட்டு உளவியல் ரீதியாகவும் தாக்கத்துக்குள்ளாகியிருந்தேன். அந்த நிலையில் நான் சத்திர சிகிச்சை செய்து கொண்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடும் என்று பயந்தேன்." என்கிறார் இரேனி. இவருடைய கணவர் 9 வருடங்களுக்கு முன்னர்தான் காலமானார்.

இரேனியின் வயிற்றில் கருப்பையுள் இக்குழந்தை தரிக்காமல் கருப்பையின் வெளிப்புறத்தே குழந்தை வளர ஆரம்பித்துள்ளது. இவ்வாறான முறையில் குழந்தை தரிக்குமானால் அக்குழந்தை உயிருடன் பிறக்கவியலாது என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். இரேனியின் வயிற்றுக்கரு இன்று கல்லாகிப் போய் ஒட்டிக் கொண்டிருக்கிறது. இதனால் இரேனிக்கு வேதனை எதுவும் ஏற்படுவதே இல்லையாம்.

அண்மையில் இரேனிக்கு வயிற்றில் ஏதோ உபாதை ஏற்பட்டிருந்தது. மருத்துவர்கள் 'எஸ்ரே' எடுத்துப் பரிசீலித்தபோது கல்லாகிவிட்ட பெண் சிசு ஒன்று கருப்பையின் வெளியே ஒட்டிக்கொண்டிருந்ததைக் கண்டு திகைப்படைந்தனர். அதனை வெளியே எடுத்துவிட மருத்துவர்கள் ஆலோசனை கூறியதை இரேனி ஏற்றுக்கொள்ளவில்லை. எட்டு அங்குல நீளமான அக்கருவினை அப்படியே இருந்த இடத்தில் தன் ஆயுள்காலம் வரை வைத்திருக்க அவர் முடிவெடுத்து விட்டார். "அது என்னுள்ளே இருக்கும் வரை அதனால் எனக்கு எதுவித நட்டமும் இல்லை" என்கிறார் இரேனி.

"இரேனியின் தற்போதைய உபாதைக்கான காரணத்தை ஆராய்ந்தோம். ஆனால் பிறக்காமல் அவருடைய வயிற்றில் ஒட்டிக்கல்லாகிவிட்ட அந்தக் கருவினால் அவருக்கு வயிற்றில் உபாதை ஏற்பட்டுள்ளதாகக் கொள்ள முடியவில்லை" என்று இரேனியைப் பரிசோதனை செய்த மருத்துவர்கள் கூறிவிட்டனர்.

## மருத்துவ உலக வரலாற்றில் விந்தை!!

### பல நோய்களை அண்டவிடாமல் காக்கும் 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட உணவு முறை

## எந்த நோயும் எட்டிப் பார்ப்பதில்லை! கெட்டியான ஆயுள்-புஷ்டியான தேகம்!!



கிரேக்க நாட்டு ஆதி வாசிகளிடம் இருந்து வரும் உணவு முறைகள்- மூட்டு வாதம், புற்று நோய், இருதய நோய்கள், குடற்புண் போன்ற எந்த வித நோயையும் அணுக விடாமல் தடுக்கவல்லன என்று கண்டுள்ளனர். இவர்களிட முள்ள உணவு முறை களைப் பின்பற்றினால் சகலரும் நோய் பிணியின்றி வாழலாம் என்று பிரான்ஸ் நாட்டு நிபுணர் டாக்டர் கில்பேட் பெர்ரின் தெரிவித்துள்ளார்.

கிரேக்க நாட்டுக்குச் சொந்தமான கிரேட் என்ற தீவில் இன்றும் ஆதிவாசிகள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களிடம் எத்தகைய நோய்களும் தலைகாட்டுவதில்லை. கிரேக்க நாட்டு அரசாங்கம் இத்தீவில் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகளில் மருத்துவ மனைகளைக் கட்டவும் மருத்துவ அதிகாரிகளை நியமிக்கவும் ஏற்பாடுகள் செய்தனர். கல்வி கேள்விகளில் ஓரளவு முன்னேற்றம் கண்டுவரும் இம்மக்களிடம் மேற்கு நாட்டு மக்களிடம் காணப்படும் எந்த விதமான . நோய்களும் தலைகாட்டுவதில்லை என்று டாக்டர் கில்பேட் கூறுகிறார்.

சராசரி அமெரிக்க மக்களை விட இவர்களுடைய ஆயுள் 10 ஆண்டுகள் அதிகம் என்றும் காணப்பட்டுள்ளது.

இம்மக்கள் தங்கள் உணவில் அதிகம் தீட்டப்படாத கோதுமை மாவில் தயாரிக்கப்படும் ரொட்டி, பாற்கட்டி, பருப்புவகைகள், காய்கறிகள் ஆகியவற்றையே அன்றாடம் சேர்த்துக்கொள்ளுகின்றனர். வாரத்தில் ஒரு தடவை மட்டுமே கோழி அல்லது மீன் உண்கின்றனர். ஆனால் மாட்டிறைச்சியை இவர்கள் புசிப்பதே இல்லை என்று டாக்டர் கில்பேட் கூறுகிறார். ஒலிவ் எண்ணெயை அதிகம் பயன்படுத்துகின்றனர். இதன் மூலமே இவர்களுக்குத் தேவையான மூன்றில் ஒரு பங்கு கலோரிகளைப் பெறுகின்றனர்.

கடுகு முளைக்கீரை அல்லது காய்கறிகளை ஒலிவ் எண்ணையில் குழைத்து உண்ணுகின்றனர். வாதுமைப்பருப்பு போன்றவற்றையும் உணவில் சேர்த்துக் கொள்ளுகின்றனர். மதுபானம் அதிகமாகப் பாவிப்பதில்லை. எனினும் வைன் அளவோடு பருகுகின்றனர்.

"இவர்களுடைய மதிய உணவே பிரதான உணவாகும். இதில் காய்கறிகளைக் கொண்ட குழம்பு சில சமயங்களில் முட்டைகளைக் கொண்டிருக்கும். இரவு உணவிலும் ஏராளமான காய்கறிகளை சிறிதளவு சோற்றுடன் கலந்து கிளறி உண்பார்கள். அல்லது கோதுமை ரொட்டி, பாற்கட்டியும் ஒரு கிளாஸ் வைனும் இரவு உணவில் சேர்த்துக் கொள்ளப்படும்." இவ்வாறு டாக்டர் கில்பேட் கூறுகிறார்.

இந்தக் கிரேக்க ஆதிக் குடிகளின் உணவு முறைகளை அடிப்படையாகக் கொண்டு இக்காலத்துக்கேற்றவாறு உணவு முறைப்பட்டியல் ஒன்று உணவியல் நிபுணர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் காணப்படும் முறை:

**காலை உணவு:**

வேக வைத்த முழுத்தானிய உணவு, தவிடு நீக்காதவையாக இருக்க வேண்டும்.

அத்துடன் ஓட்ஸ் எனப்படும் கொள்ளு வகையும் சேர்க்கப்படலாம். ஆப்பிள் ஒன்று,ஆடை நீக்கிய பால் தேனீர் அல்லது கஃப்பின் நீங்கிய காப்பியும் பருகலாம்.

அல்லது ஒரு முட்டை, மார்ஜரின் கோதுமை ரொட்டி, தோடம்பழம் ஒன்று மற்றும் தேனீர் அல்லது காப்பி எடுக்கலாம்.

**மதிய உணவு:**


கீரை வகை, வெள்ளரி, தக்காளிப்பழம், வெங்காயம், ஒலிவ் (ஒருவகை அத்திப்பழம்) ஆகியவற்றுடன் ஒலிவ் எண்ணையும் வின்னாரியும் சேர்த்து தயாரிக்கப்பட்ட சலட் உண்ணலாம். கோழி இறைச்சியை உட்பொதிந்த கோதுமை ரொட்டி சான்விச், வேக வைத்த காய்கறிகள், கோதுமை ரொட்டி ஆகியவற்றை உணவில் சேர்த்துக்கொள்ளலாம். கோவா, வெண்டிக்காய், காரட், அவரை, தக்காளி, வெங்காயம், ஆகிய காய்கறிகளுடன் கீரைவகைகளையும் சேர்த்துக்கொள்ளலாம். இவற்றுடன் கொழுப்பு நீக்கிய பாற்கட்டி, (சீஸ்) ஒலிவ் எண்ணை, பூண்டு ஆகியவையும் சேர்க்கலாம். பழங்கள் சேர்ப்பதுடன் ஒரு கிளாஸ் வைன் பருகலாம்.

அல்லது வேகவைத்த மீன், இத்துடன் வெங்காயம், தக்காளி, மிளகுத்தூள், ஆகியவற்றையும் ஒலிவ் எண்ணையையும் சேர்த்துக் கொள்ளலாம். கோதுமை ரொட்டி, பழங்கள், பாற்கட்டி ஆகியவற்றுடன் ஒரு கிளாஸ் வைன் அருந்தலாம்.

பருப்புவகை அல்லது போஞ்சி சூப்பும் தேனீர் அல்லது காப்பி ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். அல்லது கொழுப்புக் குறைந்த பாற்கட்டி (சீஸ்) கோதுமை ரொட்டி, தக்காளிப்பழம், பழங்கள், கொழுப்பற்ற பால் ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

**இரவு உணவு:**

உருளைக்கிழங்குடன் நீராவியில்




### கள்ளச் சந்தையில் மனித உறுப்புக்கள்! இலாபம் குவிக்கும் வியாபாரம்!!

மனித உறுப்புகளை மாற்றும் சிகிச்சைகள் மலிந்து வரும் இந்தக்காலத்தில் உறுப்புகளுக்கான விலைகள் பன்மடங்கு அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. மாற்று உறுப்புகளை மிக மலிவாகக் கொள்வனவு செய்யும் மருத்துவமனைகள் அவற்றைப் பெறும் நோயாளிகளிடமிருந்து 10 மடங்குக்கும் அதிகமான பணத்தை வசூலித்துக் கொள்ளை இலாபமடிக்கின்றன.

அமெரிக்காவில் மருத்துவத்துறைச் சங்கங்கள் வெளியிடும் பருவகால ஏட்டில் இத்தகவல்கள் இடம் பெற்றுள்ளன. 1988ஆம் ஆண்டில் மனித உறுப்புகளுக்கு விதிக்கப்பட்ட விலைப்பட்டியலையே இந்த சஞ்சிகை வெளியிட்டுள்ளது. இன்று இதனை விட 10 மடங்காவது அதிகப்பணம் வசூலிக்கப்படுகிறது என்றும் தெரிகிறது.

அன்றைய நிலையில், சிறு நீரகம் ஒன்றின் விலை $ 12, 290; இருதயம்: $ 12,578; ஈரல்: $ 16,281; கணயம்: $ 15,400 என்ற கணக்கு இருந்தது. இன்று இதனைப் பத்தால் பெருக்கினால் இன்றைய விலையினை அறிந்து கொள்ளலாம்.

பொதுவாக நல்லுள்ளம் படைத்தவர்கள் தங்கள் உறுப்புக்களை இலவசமாகவே அளிக்கின்றனர். இவற்றைக் காசாக்கி பெரும் பொருளினை திட்டமிட்டே நோயாளிகளிடம் வசூலிக்கின்றனர் இதயமில்லாதவர்கள்.

இந்தக் கணக்கில், மாற்று உறுப்பு சத்திர சிகிச்சைக்கான பணமோ, மருந்துகளுக்கான செலவோ சேர்க்கப்படவில்லை.

கடந்த வருடம் மட்டும் அமெரிக்காவில் மொத்தம் 16,475 மாற்று உறுப்பு சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான மருத்துவச் செலவு மட்டும் ஒன்றரை இலட்சம் கோடி அமெரிக்க டொலராகும் என்று மருத்துவ சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில் காப்புறுதி நிறுவனங்களோ அல்லது மருத்துவப் பரிசோதனை நிலையங்களோ இத்தகைய சிகிச்சைக்கான செலவு இத்தகையதுதான் என்பதை நிர்ணயிக்கவில்லை என்று மினசோட்டா மாநிலத்திலுள்ள ரோச்செஸ்ட்டர் மாயோ மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் றோஜர் இவான்ஸ் கூறுகிறார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

புதுமைத் தொடர்

அத்தியாயம்—19



"ரம்யா! எங்கோ கேள்விப்பட்ட பெயராகத்தான் இருக்கிறது. எங்கே கேள்விப்பட்டேன் என்று யோசிக்க வேண்டும். நான் பிரேமா."

"குட் நேம்"

குலாம்ஷா சொல்ல பிரேமா சலங்கை ஒலிபோல் மெல்லச் சிரித்தாள்.

"நேரம் குட். ஆனால் உங்கள் நேம் குட் அல்ல மிஸ்டர் குலாம்ஷா."

சொல்லியபடியே எதிர்பட்ட சந்தில் காரைத் திருப்பினாள்.

பாதை தவறிக் கார் திரும்பியதால் குலாம்ஷா பதட்டமானார். விபரீதம் ஏதோ இருக்கிறது.

"ஏன் காரைத் திருப்பினாய்?"

"என் கார். எங்கு வேண்டுமானாலும் திருப்புவேன்."

சிரித்தபடி சொன்னாள். குரலில் அலட்சியம் வழிந்தது.

"யார் நீ?"

ஷா நினைத்தார்.

பிரேமா சிரித்தாள். இப்போது சிரிப்பில் சலங்கை ஒலி இல்லை. வித்தியாசமாய் உணர்ந்து குலாம்ஷா பிரேமாவை கூர்ந்து நோக்கினார்.

பிரேமா பேசினாள். வார்த்தைகளில் தேன் தடவல் இல்லை. அது பெண்குரலும் இல்லை.

ஆண்குரல்!

குலாம்ஷா அதிர்ந்தார். ரம்யா அதிர்ந்தாள்.

பிரேமா அவர்களின் அதிர்வு முகங்களில் அறிந்து–

சுத்தமான ஆண் குரலில் சிரித்தா(ள்)ன்.

"ஏமாந்து விட்டீர்கள் கிரைம் புலியே.



"வலிக்கிறதா நீட்?"

"இல்லை, இனிக்கிறது."

பொய் சொல்லி கிறக்கமாய் சிரித்து அவன் தலையைக் கோதினாள். பின் இன்பராஜின் மேல் உதட்டை தன் இதழ்களால் மூடி மயக்கம் விதைத்தாள்.

அறைக்கதவு தட்டப்பட்டது.

-டொக்-டொக்.

இன்பராஜ் துள்ளி எழுந்து ஜீன்சுக்குள் புகுந்து, அவசரமாய் சட்டை மாட்டினான்.

நீட்டா பதட்டமாய் பரபரப்பாய்

மதுமிதாவின் கட்டிலில் கிடந்த கடிதம் எடுத்துப் படித்தார் டி.ஐ.ஜி டென்சில்.

"டியர் டி.ஐ.ஜி.

ஹோட்டல் ராம்கியில் நடந்த கொலை. அதற்கும் எனக்கும் என்ன தொடர்பு? கொலையான திவாகருக்கும் எனக்கும் என்ன உறவு? எப்படியோ மோப்பம் பிடித்து என்னை தேடி வந்துவிட்டீர்கள். எல்லாவற்றுக்கும் காரணம் அந்தப் போட்டோக்கள். எனினும் டி.ஐ.ஜி. திவாகர் கொலைக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. எனினும் தேவையான விபரங்கள் சொல்ல முடியும். அதற்கு முன் எனக்கு தேவையான ஒன்று எனக்கு அவசியம். அதைத் தேடி எடுத்தபின் உங்களுக்கு உதவுவேன். தேடலில் தோற்றால் உதவ முடியாமைக்கு முன் கூட்டியே என் வருத்தங்கள்.

பி.கு. என் தந்தையார்

# கண்ணே மதுமிதா

கார் தெருவில் வழுக்குவது போல விரைந்து கொண்டிருந்தது.

குலாம்ஷாவும்- ரம்யாவும் பின்சீற்றில் இருந்தார்கள். குலாம்ஷா இடைக்கிடையே பின்னால் தலை திருப்பி யாராவது பின் தொடர்கிறார்களோ என்று பார்த்துக் கொண்டார்.

லாவகமாய் காரைச் செலுத்திக் கொண்டிருந்தவள் சுரிதார் போட்டிருந்தாள். சுரிதார் கொஞ்சம் இறுக்கமாக இருக்க வேண்டும். மேனி எழிலின் ஏற்ற, இறக்கங்களை அடையாளம் காட்டிக் கொண்டிருந்தது.

குலாம்ஷா கேட்டார்,

"எங்களுக்கு தகுந்த நேரத்தில் உதவும் உங்கள் பெயரை அறியலாமா?"

சின்னதாய் ஒரு புன்னகை அவள் இதழ்களில் மலர்ந்தது. ஒரு பூ விரிவது போல அவள் அழகான இதழ்கள் விரிந்து தேன் தடவிய வார்த்தைகள் வந்தன.

"அதற்கு முன் உங்களை நான் தெரிந்து கொள்ளவேண்டாமா?"

"நான் குலாம்ஷா. கிரைம் இன்ஸ்பெக்டர்"

"தெரியும். அதை உங்கள் அடையாள அட்டையே சொல்லிவிட்டது. உங்கள் கூட இருக்கும்...."

"ரம்யா."

"பொலிசா?"

"இல்லை. பொலிஸ் துறைக்கு வேண்டப்பட்டவள்."

கேட்டபடியே குலாம்ஷா மடியில் கிடந்த ஏ.கே.47 ஐ கையில் எடுக்க, ரம்யா தன் இடுப்பில் இருந்து கத்தி உருவினாள்.

திடீரென்று பிரேக் அடித்து கார் இயக்கம் நிறுத்தியது.

பிரேமா பின் புறமாய் திரும்பி அலட்சியம் கலந்த பார்வை வீசினாள்.

"ரம்யா இப்போது புத்திக்கு வேலை கொடுக்க வேண்டிய நேரம். கத்தி உதவாது. மிஸ்டர் ஷா ஏ.கே47ஐ வெளியே வீசிவிடுவது நல்லது. ஏன் எனில் அது தேவையற்ற சுமை. மடிக்கு சுமை தேவை என்றால் ரம்யாவை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்."

ரம்யா கத்தியை உயர்த்தினாள். பிரேமா சிரித்தாள்.

இடது கரம் உயர்த்திக் காட்டினாள். கரத்தில் ரீவியை தூரத்தில் நின்று இயக்கப் பயன்படுத்தும் றிமோட் கொண்ட்ரோல் போன்ற சிறிய கருவி இருந்தது.

சின்னதாய், கரத்தில் இருந்த றிமோட் கொண்ட்ரோலை பார்த்தபடி பிரேமா பேசினாள்.

"இதில் ஒரு பட்டனை அமுக்கினால் போதும். காரோடு கைலாயம் போய் விடுவோம். நான்-நீ-குலாம்ஷா மூவரும் சாவூருக்குப் போக விரும்பினால் அடுத்த நொடியே அங்கிருக்கலாம். விரும்பினால் வீசு. கத்தியை வீசு."

ரம்யா தயங்கினாள். பிரேமா வெடி குண்டை உடலில் கட்டியிருக்கலாம் என்று

## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: மா. விவேக்
வயது: 22
முகவரி: 'அருளகம்'
தேவாலய வீதி, களுதாவளை-3
களுவாஞ்சிக்குடி.
பொழுதுபோக்கு: சினிமா பார்த்தல், கவிதை எழுதுதல்.



பெயர்: கே. மீனலோஜனி
வயது: 21
முகவரி: பெர்ணாந்து மாவத்தை,
இகலை, கொட்டறாமுல்லை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.



பெயர்: ஏ.எச்.எம். பைரூஸ்
வயது: 27
முகவரி: HILTON HOTEL
P.0.BOX -1333
AL-AIN. U.A.E.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சினிமா, நண்பர்களுடன் அரட்டையடித்தல்.



பெயர்: எச்.எச்.எம். இப்றாஹீம்
முகவரி: இல.7/20, யூ.சி.ரி.
போல்ஸ் வீதி, புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல்.

பெயர்: ஏ.எம்.எம். ஜாபீர்
முகவரி: 66/1, கோவில் வீதி,
கல்முனை-03
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம். சிவகுமார்
வயது: 20
முகவரி: இல.120, ஒல்கொட் மாவத்தை,
காலி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, சிறுகதைகள் எழுதுதல்.

பெயர்: ஏ.என். பாத்திமா மிசிறியா
வயது: 16
முகவரி: 34, கழுகமுவ, கெலிஓயா.
பொழுதுபோக்கு: ரீ.வி. பார்த்தல், வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.

பெயர்: தர்ஷினி நாகராஜா
வயது: 22
முகவரி: கோவில் வீதி
பாலையூற்று
திருகோணமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நண்பர்களுடன் பேசுவது, கிரிக்கெட் பார்த்தல்.

பெண்ணாக நான் நடித்ததை சத்தியமாய் நம்பி சாவின் வாசலுக்குள் வந்து தலையைக் கொடுத்து விட்டீர்கள்."

"யார் நீ?"

"சாவதற்கு முன் உங்கள் இறுதி ஆசை. மறுக்கலாமா? நன்றாய் பாருங்கள்."

ரம்யாவிடம் அசைவு தெரிய அவன் சுட்டுவிரல் நீண்டது.

"வேண்டாம் ரம்யா. உன் விளையாட்டு எனக்குத் தெரியும். என் விளையாட்டும் உனக்குத் தெரியும்."

ரம்யாவுக்கு அவன் குரல் பரிச்சயமானதாகப்பட்டது.

அப்படியானால்.....

அப்படியானால்.....இவன்....-

ரம்யா திடுக்கிடலோடு அவனைப் பார்த்தாள்.

குலாம்ஷா முதலில் அவன் யார் என்பதை அறிந்து விடும் ஆர்வத்தில் இருந்தார்.

அவன் கரம் உயர்ந்து தலையில் கிடந்த பெண் முடிமேல் இருந்த போலி முடியை விலக்கியது.

போலி முடி விலக ரம்யாவுக்கு 50 வீதம் அவன் யார் என்று புரிந்தது.

இப்போது கண் புருவங்களில் ஒட்டியிருந்த மேக்அப்பை உரித்து விலக்கினான்.

ரம்யா தன்னையும் அறியாமல் 'ஆ......' என்று வாய்பிளந்து அதிர்ச்சிக்குரல் எழுப்பினாள்.

"நீ.....நீ......?"

"நான்தான். நானேதான்."

அரக்கன் போலச் சிரித்தான்.

"என்ன குலாம்ஷா உங்களுக்கும் வியப்பாக இருக்கிறதா? என்னை நீங்கள் எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள். இல்லையா மிஸ்டர் ஷா?"

கர்வமான குரலில் கேட்டான். கேட்டபடியே காரை ஸ்டாட் செய்தான்.

"தப்பிக்கொள்ளலாம், வித்தை காட்டலாம் என்று இருவரில் எவர் முயன்றாலும் என் விரல் றிமோட் கொண்ட்ரோலின் பட்டனை அழுத்தும். என் உடலில் அழகான மார்புகள் போல மயக்கமூட்டும் இரு குண்டுகளும் டமால் ஆகும். பிறகென்ன சத்தியமாய் சாவுதான்."

கார் உறுமிப் புறப்பட்டது. குலாம்ஷா ரம்யாவைப் பார்த்து கண்சிமிட்டினார்.

ரம்யா புரிந்து கொண்டாள்.

■

நீட்டா இன்பராஜை தன் உடலில் தாங்கிக்கொண்டிருந்தாள். இருவரையும் கட்டில் தாங்கிக்கொண்டிருந்தது.

நீட்டாவின் ஆடைத்தடையற்ற மேனியில் இன்பராஜின் உதடுகள் ஊர்வலம் நடத்திக் கொண்டிருந்தன.

நீட்டா யோசித்துக்கொண்டிருந்தாள். இன்பராஜின் உயிரை எப்படி வாங்கலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தாள்.

இன்பராஜ் நீட்டாவின் மேனியில் மேலும் எப்படியெல்லாம் தந்தி மீட்டலாம் என்று தீவிரமாய் முயன்று கொண்டிருந்தான்.

வேண்டுமென்றே நீட்டா இன்பமாய் முனு முனுப்புக் காட்டினாள். செல்லமாய், கிறக்கமாய் சிணுங்கி இன்பராஜின் ஆசையைத் தூண்டினாள்.

இன்பராஜின் பிஸ்டல் கட்டிலின் ஓரத்தில் கைவிடப்பட்டுக் கிடந்தது. பிஸ்டலின் மீது நீட்டாவின் பார்வை விழுந்தது.

நீட்டாவின் மார்பில் உதடு புரட்டி, தலை உயர்த்தி நகர்ந்து அவள் இதழ்களை ஆவேசமாய் கடித்தான் இன்பராஜ்.

நீட்டாவுக்கு வலித்தது. மனங்கள் ஒன்றாமல் உடல்கள் கலத்தலில் சுகம் இருக்காது. மனம் கலந்து தம்மை மறந்து உடல்கள் இணைகையில் ஆணின் பலம் பெண்ணுக்கு வேதனை கொடுக்காது. மேலும் பலம் பிரயோகித்தலை விரும்பும்.

இப்போது நீட்டா இன்பராஜின் பலவீனத்தை பயன்படுத்தவே நினைத்தாள். ஆகவே படுக்கையைப் பகிர்ந்துகொள்வதில் மனம் ஒருமுகமாக மறுத்தது.

கட்டிலில் பரவிக்கிடந்த ஆடைகள் அணிந்து சேலைக்குள் தன் உடம்பைத் திணித்தாள்.

கதவு மீண்டும் தட்டப்பட்டது. நீட்டா சரியென்று தலையசைக்க இன்பராஜ் சென்று கதவு திறந்தான்.

மறு நொடியே அதிர்ந்து பின் வாங்கினான்.

பின்வாங்கிய இன்பராஜின் மார்பில் கைவைத்து மேலும் உள்ளே தள்ளிவிட்டு, திரும்பி அறைக்கதவை தாழிட்டாள் மதுமிதா.

வைத்திலிங்கத்திற்கு இக்கடிதம் தெரியாமல் இருப்பது நல்லது. அவரை நீங்கள் கண்காணிப்பதும் நல்லது."

தங்களில் விருப்பமும்
விசுவாசமும் உள்ள
மதுமிதா.வை

கடிதத்தைப் படித்து மடித்து காற்சட்டைப் பொக்கற்றுக்குள் அனுப்பிவிட்டு டென்சில் திரும்ப,

"என்ன டி.ஐ.ஜி, மதுமிதா எங்கே?"



மதுமிதா- வைத்திலிங்கத்தின் அன்பு மகள் மதுமிதா.

மதுமிதாவின் கரத்தில் பிஸ்டல் இருந்தது. பிஸ்ரலின் விசையில் மதுமிதாவின் விரல் தொட்டபடி இருந்தது.

இன்பராஜை அலட்சியம் செய்து நீட்டாவைப் பார்த்து மதுமிதா உறுதியான குரலில் கேள்வி வீசினாள்.

"எங்கே அந்தப் போட்டோக்கள்?"

எதிர்பாராத அதிர்ச்சியில் உறைந்து போய், சாவு வரும் என்ற பயத்தில், தன் கனவுக் கோட்டைகள் ஒரு நொடியில் உடைந்து போகப் போகிறதே என்ற கவலையில் நீட்டாவுக்கு நா எழ மறுத்தது. உதடுகள் ஒத்துழையாமை இயக்கம் நடத்தின.

"என்ன நீட்டா. சாவது என்று முடிவே செய்துவிட்டாயா? இந்த உடல் இருந்தால் இன்னும் எத்தனை பேருக்கு விருந்து படைக்கலாம். அதனால் வசதியாக நீ வாழலாம். அநியாயமாக சாவது புத்திசாலித்தனமல்ல, என் பிரிய நீட்டாவே. சொல்லு நீட்டா சுட்டுவிடவா? உனக்கு சம்மதமா?" சொல்லு.

மதுமிதா கேலியாகப் பேசினாள். கேலி குரலில் இருந்தாலும் நிச்சயம் சுடுவாள் என்பது கண்களில் தெரிந்த உறுதியில் புரிந்தது.

"சொல்கிறேன் சுடாதே"

என்றாள் நீட்டா.

நீட்டா சொல்லப் போவதைக் கேட்க மதுமிதா கவனமானபோது இன்பராஜ் பூனைபோல மதுமிதாவை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தான்.

■

வைத்திலிங்கத்தின் குரலில் அவசரம் இருந்தது.

அதே சமயம் வெளியே இன்ஸ்பெக்டர் அரவிந்த் கரத்தில் இருந்தது வைத்திலிங்கத்தின் பொக்கற்றில் இருந்து நழுவிய கடிதம்.

அந்தக் கடிதத்தில் இருந்த வாசகம் நான்கு வரிகளில் இப்படி சொல்லிக் கொண்டிருந்தது.

"டியர்!வைத்தி
மதுமிதாவுக்கு
நீயார் என்பது
85 வீதம் தெரிந்துவிட்டது.!!

இன்ஸ்பெக்டர் அரவிந்த் குழப்பமாய் அந்த வரிகளைமீண்டும் மீண்டும் படித்துப் பார்த்தார்.

சந்தேக ரேகைகள் மனதில் விரிந்தன.

டி.ஐ.ஜி டென்சிலிடம் கடித விசயம் சொல்ல விரைந்தார் இன்ஸ்பெக்டர் அரவிந்த்.

மதுமிதாவை காணவில்லை என்பதால் பதட்டமான வைத்தி நிறைய வியர்த்துப் போனார். வியர்வை துடைக்க கைக்குட்டை எடுத்த போதுதான்,

துண்டுக் காகிதத்தின் நினைவு வந்தது. பொக்கற்றுக்குள் அவசரமாய் துழாவினார்.

'இல்லை'

"என்ன தேடுகிறீர்கள் மிஸ்டர் வைத்திலிங்கம்."

கேட்டபடியே இன்ஸ்பெக்டர் அரவிந்த் உள்ளே வந்துகொண்டிருந்தார்.

(இன்னும் வரும்)




அடுத்த முரசோடு
இலவச இணைப்பு!
பிரதிக்கு முந்துங்கள்
ரசிகன் வழங்கும்
"கொல்லாமல் சாகாதே"
(குறுநாவல்)
காதல் – திரில் – கலந்த புதுமை நாவல்
இது முரசின் வெள்ளிவிழா வார போனஸ்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



பெயர்கள் மட்டும் கற்பனை!

# நெஞ்சில் இட்ட கோலம்

-முகில் வண்ணன்-

கௌரி-

காண்பவர் காதல் கொள்ளும் அழகியவள். காண்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கன்னியவள். கவிஞன் கண்டால் கிறங்கிப் போவான்- கவிதை ஊற்றெடுத்துப் பாயும். அழகுக்கு இலக்கணத்தை அவளைப் படைத்த பிரம்மனும் அவளிடம் இருந்தே அறிந்திருப்பான்.

இப்படிப்பட்ட பெண்ணுக்கு வயதும் பதினாறைக் கடந்து கொண்டிருந்தது என்றால் கேட்கவா வேண்டும். எழில் கொஞ்சும் அழகி அவள் என்பது மட்டுமல்ல- வயதில் இளமையும் மட்டுமல்ல- அறிவிலும் சிறந்து விளங்கினாள். படிப்பில் திறமை அவள் ஆசிரியர்களையே திணறடித்து வைத்துக்கொண்டிருந்த வேளை, அவள் அழகு அவளது சக மாணவர்களை மட்டுமின்றி உயர் வகுப்பு மாணவர்களையும் கிளர்ந்து எழ வைத்தது என்றால் மிகையில்லை.

பையன்களைக் கேட்கவா வேண்டும். முன்னும் பின்னும் அவளைச் சுற்றியே வந்தனர். ஊன் உறக்கம் இன்றி அலைந்தனர் என்றாலும் பொருந்தும் . யாழ் நகரில் அவள் ஒரு முடிசூடா அழகு ராணியாகத் திகழ அவளது பரிவாரங்களாக முன்னும் பின்னும் பையன்கள். ஆனால் அவள் இவர்கள் எவரையும் சட்டை செய்ததாகவே தெரியவில்லை. தான் உண்டு தன் படிப்பு உண்டு என்றிருந்தாள்.

, அவள் அந்த அழகைப் பெற்றது அவள் செய்த பாவமா?

அலைந்து திரிந்து அவளது கடைக்கண் பார்வையும் கிடைக்காததில் ஏமாந்தனர். ஏமாற்றம் விரக்தியாக மாறியது. தீவிரவாதிகள் தோன்றுவது இப்படியோ?-

'பணத்திமிர் அவளுக்கு' என்றனர்.

'அழகால் வந்த ஆணவம்' என்றனர்.

'அடக்கிக் காட்டுகிறேன் பார்' என்றனர்.

'அடையாமல் விடுவதில்லை' என்றனர்.

ஆனால் இவை எதுவும் இல்லை என்றால் எவர் நம்புவர். அவளோ நேசித்ததெல்லாம் தாய் தந்தையரை, தாய்நாட்டை, தன் படிப்பை, இவற்றில் மோனத் தவம் இருந்த அவளைக் கலைக்க எவராலும் முடியவில்லை, ஏமாற்றமே!

முடிவு அவள் முகத்துக்கு அசிட் வீசுவது என்று ஒருவன் முடிவெடுத்துச் செயற்படுத்தியும் விட்டான்.

துடிதுடித்துப் போன பெற்றோர் அமெரிக்காவில் இருந்து பறந்து வந்தனர். எண்பத்தி மூன்று கலவரங்களுக்குப் பின்னர் கொழும்பில் இருந்த தொழில் நிலையங்களை விற்றுவிட்டு அமெரிக்கா செல்வதென்று எல்லோரும் தீர்மானித்தனர். ஆனால் கௌரி அகதியாக யாழ் வந்து இருந்தாலும் "நீங்கள் எல்லோரும் செல்லுங்கள் நான் எனது தாய்நாட்டை விட்டு வரமாட்டேன். வாழ்ந்தாலும், தாழ்ந்தாலும் மடிந்தாலும் இங்கேதான் இருப்பேன்" என்று மறுத்துவிட்டாள்.

இப்போது "தாய்நாடு தாய்நாடு என்று செத்தாயே இப்போது உனது தாய் நாட்டவர் செய்திருப்பதைப் பார்த்தாயா?" என்று அழுது புலம்பினர் தாய் தந்தையர்.

அவசர சிகிச்சைக்குப் பின்னர், அவளையும் மருத்துவத்துக்காக அமெரிக்கா கொண்டு சென்றனர். ஆனால் மருத்துவம் அவளிடம் தோற்றுவிட்டது. அசிட்பட்டு நரம்புகள் செத்துவிட்டன. என்றும் எதுவும் செய்ய முடியாத நிலை. மீண்டும் தான் தாய்நாட்டுக்கே செல்ல வேண்டும் என்று அடம் பிடித்து மீண்டும் இலங்கைக்கே வந்து சேர்ந்தாள் கௌரி.

எங்கே தன் வாழ்வை இழந்தாளோ அங்கேயே அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற பிடிவாதமோ என்னவோ?

மீண்டும் இலங்கை வந்து குருடர் செவிடர் பாடசாலையில் சேர்ந்து படிப்பைத் தொடர்ந்தாள். சோர்ந்து இருக்கவில்லை. தொடர்ந்த படிப்பிலும் திறமையாகச் சித்தியெய்தி பல்கலைக்கழகம் புகுந்தாள். அங்கே அவளுக்காக காத்திருந்தான் சங்கர்.

சங்கர்.

பல்கலைக்கழகத்துக்கு எடுபட்டு புது மாணவனாகச் சேர்ந்து இருந்தான். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீட மாணவன் அவன்.

புது மாணவர்களைப் பழைய மாணவர்கள் 'ராக்கிங்' செய்வது வழக்கம்தானே. சங்கரும் அதற்கு ஆளாக்கப்பட்டான். அவனது பொறுமை எல்லையைக் கடந்து கொண்டிருந்தது. அப்போதும் அவர்கள் அவனை விட்டபாடில்லை. எவர் முரண்டு பிடிக்கிறார்களோ அவர்களை மேலும் மேலும் கஷ்டப்படுத்துவதில் இன்பங்காண்பவர்கள் தானே இளைஞர்கள். அவனால் அடக்கிக்கொள்ள முடியவில்லை.

அப்போது அவர்கள் அவளைச் செய்யச் சொன்னது...அவனை எல்லை கடக்க வைத்தது. பழைய மாணவன் ஒருவனை அடித்து விட்டான்.

அன்று இரவு சங்கருக்கும் அசிட் வீச்சு இடம்பெற்றது. இரு கண்களையும் அவன் இழக்கிறான். அதே வருடம் ஒரு சிங்களப் பெண்ணும் ராக்கிங் இம்சை பொறுக்காது மாடியில் இருந்து விழுந்து இறக்கிறாள். பல்கலைக்கழகமோ அல்லோல கல்லோலப்படுகின்றது.

சங்கர் வைத்தியத்துக்குப் பின்னர் கண்களை இழந்து விடுகின்றான். அவனுக்கும் பார்வைமீண்டும் கிடைக்காது என்ற நிலை. மீண்டும் படிப்பைத் தொடர வேண்டும் என்ற ஆர்வம். அவனும் குருடர் செவிடர் பாடசாலையில் சேர்ந்து படிக்க ஆரம்பிக்கின்றான். இரண்டு வருடங்கள் பின் தங்கிய நிலையில் மீண்டும் பல்கலைக்கழகம் வருகின்றான். விஞ்ஞான பீட மாணவன் இப்போது கலைப்பீட மாணவனாக மீண்டும் பல்கலைக்கழகம் வந்துவிட்டான்.

இப்போது அவனை எல்லோரும் பரிதாபத்துடன் பார்க்கின்றனர். அவனோ



யாரையும் பார்க்க முடியாத நிலையில் தன்படிப்பைத் தொடர்கிறான். இப்போது பல்கலைக்கழகம் வருகிறாள் கௌரி.

கௌரி-சங்கர்.

இறைவன் போட்ட முடிச்சு. எங்கோ? எப்போ? எப்படி? என்று எவருக்கும் விளங்கவில்லை. எவரும் அறிந்திருக்கவும் இல்லை. இருவரையும் கண்ணைக் கட்டி காட்டில்-இல்லை பல்கலைக்கழகத்தில் சேர்த்து வைக்கிறான் இறைவன்.

ஆரம்பத்தில் மற்ற மாணவர்கள் இருவர் நிலையையும் ஒப்பு நோக்கி ஒன்று சேர்க்கின்றனர். பேச்சுத்துணைக்கு- படிப்பு பற்றிக் கலந்துரையாட என்று தொடர்கின்றது அவர்கள் தொடர்பு.

சக மாணவர்கள் தன் மீது காட்டும் பரிவை வெறுத்து ஒதுக்கி தைரியமாகப் படிப்பில் கவனம் செலுத்தினாள் கௌரி. ஆனால் சங்கரின் அறிமுகத்தின் பின்னர் தன்னைப் போல் ஒருவன்- வாழ்க்கையை பாழாக்கி விட்டதாக நொந்து கொண்ட அவனைத் தேற்றுவதில் ஆர்வம் காட்டுகின்றாள்.

மாணவர்கள் எப்போதும் துடிப்புள்ளவர்களே. அவர்களைக் கட்டிப் போட யாரால் முடியும்? துள்ளித் திரியும் பருவம் அல்லவா? நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் நிறைந்த உள்ளங்கள்.

மாணவிகளுக்குக் கால் கட்டாக கௌரியும் மாணவர்களுக்கு இடைஞ்சலாக சங்கரும் அமைந்ததில் அவர்களுக்கு ஊமை மனவருத்தம் இருக்கத்தான் செய்தது.

மாணவர்களும் மாணவிகளும் ஒன்று கூடும் நேரத்தில் ஒருநாள் அந்த யோசனை அவர்களுக்கு ஏற்பட்டது. இருவரையும் ஒன்று சேர்த்துவிட்டால் நமக்குச் சுதந்திரம் கிடைக்கும் என்பது தான் அது.

கூடிக் கதைத்துக் கொண்டிருக்கும் போது, பெண்கள் கௌரியை விட்டு நழுவவும், ஆண்கள் சங்கரை விட்டும் பிரியவும் ஆரம்பித்தனர்.

ஆரம்பத்தில் சக மாணவர்களுடன்தான் சந்திப்பு நிகழ்ந்தது. இருவரும் இரண்டு கண்களையும் விபத்தினால் இழந்தவர்கள். படிப்பில் இருந்த ஆர்வத்தால் பல்கலைக் கழகம் வரை வந்து விட்டவர்கள்.

கௌரியோ எதையும் தாங்கிக்கொண்டு எளிதில் சாதித்துவிடும் திறமை படைத்தவள். நடந்த விபத்தையே மறந்து வாழ்க்கையை அமைத்துக்கொண்டவள். இன்னும் இந்தப் பூமியில் தனக்கு வாழ்க்கை உண்டு என்று உணர்ந்து செயற்படுபவள். ஏற்கனவே பார்த்த உலகத்தை இதயக் கண்ணில் பதித்துக்கொண்டு பார்ப்பவள்.

சங்கரால் எதையும் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தனக்கு இந்த விபத்து ஏற்படாவிட்டால் தன் வாழ்க்கை எப்படி எப்படி எல்லாமோ அமைந்து இருக்கும் என்று ஏங்குபவன். ஏமாற்றம் அவனை வாட்டியது. என்ன செய்வது என்று அறியாமலே படிப்பைத் தொடர்ந்தான்.

இருவரும் தங்களுக்குள் அறிமுகமாகிக் கொண்டதும் ஒருவருக்கொருவர் உற்ற துணையாகிக் கொண்டனர். மற்ற மாணவர்கள் எதிர்பார்த்தது சரியாகிவிட்டது. அவர்களுக்கு விடுதலை கிடைத்தது.

கௌரி, சங்கருக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தினாள். இருவரும் தோட்டத்தில் சந்திக்கும் போது திடமான- ஆதரவான வார்த்தைப் பரிமாற்றங்கள் அவனைப் புத்துணர்ச்சி பெற வைத்தது.

மாணவ மாணவிகள் கௌரியைப் பல வழிகளில் பரீட்சித்துப் பார்த்தனர். அவளுக்குக் கண்களில் வெளிப்பார்வை இல்லையே தவிர அவளது இதயக் கண்கள் திறந்தே இருந்தன.

இன்று 'இன்ன நிற பச்சை' கவுணை அணிந்து வரச் சொன்னால் அதை யாருடைய உதவியும் இன்றி, உடுப்புப் பெட்டியில் இருந்து தேர்ந்து எடுக்கும் திறமை இருந்தது.

மேசையில் இருக்கும் பொருட்களை 'இதை எடுத்துவா' என்று சொன்னால் தட்டுத் தடுமாறாமல் எடுத்து வரும் திறமை அவளுக்கு இருந்தது. கேட்டால் "ஏற்கனவே இட்ட கோலம் நெஞ்சத்தில் இருக்கிறது" என்பாள்.

மாணவர்கள் அவளை வெருட்டி உருட்டிப் பார்த்து இருக்கிறார்கள். ஒரு முறை பழகிய மாணவனானால் அவனது பெயரை உடனே சொல்லும் திறமை அவளுக்கு இருந்தது. ஏமாறியது மாணவர்களே!

அவளுக்கு கண் இல்லையே தவிர பார்வை இருக்கிறது என்பதை உணர்ந்தார்கள்.

கௌரியும் சங்கரும் தங்கள் உள்ள அழகை ஒருவருக்கொருவர் காட்டினர். அதிலே இருவரும் புகுந்து கொண்டனர்.

தங்களை விட வேறு ஒருவரை- கண்ணுள்ளவரை மணந்து தாங்கள் இம்சைக்கும் மனவருத்தத்துக்கும் ஆளாகுவதை விட ஒருவரையொருவர் புரிந்து கொண்ட ஒரே மாதிரியான இருவர் ஒருமித்து வாழ்வது சிறந்தது என்று முடிவு செய்தனர்.

காதலுக்கு கண்ணில்லை என்று தான் சொல்வார்கள். கண் இருக்கத் தேவை இல்லை என்று நிரூபித்தனர் இருவரும். கண்ணுள்ள ஒருவரை மாறி மாறி மணம் முடித்தால் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கும் ஒருவர் கண் மூலம் மற்றவர் இந்த உலகைக் காண முடியும் என்று அபிப்பிராயப்பட்டனர் சிலர்.

கௌரி இதை ஏற்றுக் கொள்ளவில்லை. 'எப்போதோ ஒருநாள் தாம் மற்றவருக்குப் பாரமாக இருப்பதாகவே உணர்வார்கள். ஆகவே அதைவிட நாங்களே ஒருவருக்கொருவர் உதவியாக ஒத்தாசையாக இருப்பதற்குத் தீர்மானித்துக்கொண்டோம்' என்பாள்.

பல்கலைக்கழக வாழ்க்கை ஒரு முடிவுக்கு வந்தது. பரீட்சையுடன் அனைவரும் பிரிந்தனர். ஆனால் கௌரியும் சங்கரும் தனி வீடெடுத்து இருந்தனர். பரீட்சை முடிவு வெளிவரும்வரை இருவரும் காத்து இருந்தனர்.

கௌரி தன் முடிவைப் பெற்றோருக்கு அறிவித்தாள். அமெரிக்காவில் இருக்கும் அவர்களால் எதுவும் சொல்ல முடியவில்லை. அமெரிக்க வைத்தியத்தால் அவளுக்குக் கண் பார்வை வரவில்லை என்றால், வேறு என்ன செய்யமுடியும்? தங்கள் மகள் தவறான முடிவை எடுக்க மாட்டாள் என்பது அவர்களுக்குத் தெரியும்.

கௌரி 1ம் பிரிவில் திறமைச் சித்தி பெற்றிருந்தாள். சங்கரும் சித்தியடைந்து இருந்தான்.

பரீட்சை முடிவு வெளிவந்ததும், நண்பர்களுக்கு தங்கள் திருமண முடிவை அறிவித்தனர் இருவரும். ஆசிரியர்கள் முன் நின்று திருமணத்தை முடித்து வைத்தனர்.

தங்கள் மகள் எப்படியும் தங்களுடன் வந்து சேர வேண்டும் என்று அவர்கள் வேண்டிக் கொண்டது எதுவும் பலிக்கவில்லை. ஆனால் இறைவன் நினைத்தது நடந்துதானே ஆகவேண்டும்.

ஆசிரியர் ஒருவர் ஒருநாள் வந்து ஒரு வேலைக்கு விண்ணப்பத்தில் ஒப்பம் பெற்றுச் சென்றார். அவரது சிபாரிசும் இவளது திறமையும் அவளுக்கு பார்வையற்றோர் பாடசாலையில் பேராசிரியையாகப் பதவி கிடைத்தது.

ஆனால் அது கிடைத்ததோ அமெரிக்காவில் என்பதுதான் அதிர்ச்சிக்குரியது. இப்போது அவளால் தட்டிக் கழிக்க முடியவில்லை.

'தாய்நாட்டுக்காக சேவை செய்ய வேண்டும் என்று இருந்தேன். போராட்டம் எல்லாவற்றையுமே திசை திருப்பிவிட்டது. போராட்டங்களும் திசை திரும்பி விட்ட நிலையில் என் எண்ணம் எங்கே ஈடேறப் போகிறது? இறைவன் என்ன நினைத்து இருக்கிறானோ அதுவே நடந்தேறும் என்பது மட்டும் நிச்சயம்?" என்றாள் கௌரி.

"கண்களை இழந்து விட்ட நிலையில் உன்னால் என்ன செய்ய முடியும்?"-

"கண்கள் இழந்ததைப் பற்றித்தான் நீங்கள் எப்போதுமே கவலைப்படுகிறீர்கள். எனக்கு அந்த எண்ணமே இல்லை." அது நிறைவேறாமல் போய்விட்டது.

எல்லோரும் விக்கித்து நின்றனர்.

அந்த நாளும் வந்தது. அவர்கள் அமெரிக்காவுக்குப் பறந்து போயினர். அனைவரும் அவர்களை கண்ணீர் மல்க வழியனுப்பி வைத்தனர்.

பெற்றோர் அவர்களை வரவேற்ற போதும், பிரிந்து தனிக் குடித்தனத்தில் கணவனும் மனைவியும், வேலை செய்து கொண்டு களிப்பாகக் குடும்பம் நடத்துகிறார்கள்.

நாமும் அவர்களை வாழ்த்துவோம். இலங்கை நாடும், அதன் வளர்ச்சியும் என்றும் அவள் நெஞ்சிலிட்ட கோலமாக நிலைத்து நிற்கும். ●

சின்னக் கதை

# விஜி! நீ ரொம்ப மோசம்...

-எம். சுரேஷ்-

## இப்போது மீண்டும் மீண்டும் அவனோடு பேசவேண்டும் போல்...

விஜி சிரித்தாள். வழமையானதுதான். இருப்பினும் இன்று அந்தச் சிரிப்புக்குள் என்றுமில்லாதவாறு கேலியும் கிண்டலும் நிறைந்திருந்தன. சிவசங்கரன் நிமிர்ந்தும் பார்க்கவில்லை. ஏற்கனவே பல தடவை அவள் சிரிப்பதைப் பார்த்துப் பயந்திருக்கிறான்.

குயிலின் நிறமும், மயிலின் குரலுமாக அவள் சிரிப்பது கிட்டத்தட்ட ஒரு குதிரை சிரிப்பதைப்போலவே தோன்றும். அவ்வப்போது பத்திரிகைகளுக்கு கவிதை எழுதிவரும் சிவசங்கரனுக்கு அவளை... குறிப்பாக அவள் சிரிப்பை அறவே பிடிக்கவில்லை.

கார்மேகம் அருகில் வந்தது. பகலில் ஓர் இரவு... "நீங்க கடைசியா எழுதின தாயின் பாடல்"ங்கிற கவிதை ரொம்ப அருமை. ஆனா அந்தத் தலைப்பை 'ஆத்தா படிச்ச பாட்டு'ன்னு வைத்திருந்தால் இன்னும் நல்லா இருந்திருக்கும்" நெளிந்தபடியே கூறினாள். நல்ல வேளை சிரிக்கவில்லை!

'சும்மா போடி. நீயும் ஒன்னோட விமர்சனமும்' மனதுக்குள் நினைத்தவன், வெளியில் "ஹி...ஹி..ரொம்ப நன்றி" சிரமப்பட்டு செயற்கையாய் சிரித்து நன்றி சொன்னான். அதற்குமேல் என்னதான் சொல்வது? ஆனால் அவள் போவதாக இல்லை.

"என்ன?" கேட்டான்.

"ஒரு கவிதை சொல்லுங்களேன்"

"எதைப்பற்றி?"

"ஏன்? என்னைப் பற்றியே சொல்லுங்களேன்" மீண்டும் சிரித்தாள். சகிக்க முடியவில்லை.

'அடியே!
உன்னை மிக
அழகானவள் என்றுதான்
நினைத்திருந்தேன்.
அன்று நீ
என்னருகில் வந்து
சிரிக்கும் வரை!'

மனதில் விழுந்து கவிதை வாய் வரைக்கும் துள்ளிப்பாய சிரமப்பட்டு அடக்கிக்கொண்டான். சொல்லவில்லை.

"சொல்லுங்களேன்."

"ம்...... பௌர்ணமிக்கு மதிப்பிருக்கும், உன் முகத்தைக் காணாதவரை" பொய் சொன்னான். கற்பனைதானே கவிதை! ஒரே நேரத்தில் பல டியூப் லைட்கள். "பக்பக்" கென்று கண்ணடித்த பிரமை! ஒரு கணம் அமாவாசைக்குள் பௌர்ணமி தோன்றி மறைந்தது! சந்தோஷத்தில் அவள் சிரித்தாள். பயத்தில் இவன் அழுதான். (மனதிற்குள்ளேதான்!) அதன் பின் வெகுநேரம் அவள் இவனின் கவிதையைப் புகழ்ந்து தள்ளியதை சிவசங்கரன் கவனிக்கவில்லை.



இப்படிப் பல வருடங்கள் தாறுமாறாகப் புகழ்ந்தும் அவன் மனதில் இடம்பிடிக்க முடியாமல் போய் புறக்கணிக்கப்பட்டவள், இன்று கேலியாகச் சிரித்ததும் இவனுக்குள் ஒரு ஆச்சரியம். "ஏன்" என்றொரு கேள்வி. நிமிர்ந்து பார்த்தான்.

"கவிதை எழுதத் தெரியாவிட்டால் சும்மா இருக்கவேண்டியதுதானே...... நீங்க எழுதின 'முனியம்மாவின் உதய கீதம்'ங்கிற கவிதையை வாசிச்சேன்.....ச்சே! கவிதையா அது? தூக்கம்வராம கிறுக்கிறதெல்லாம் கவிதையாகிடுமா?" அவள் கேட்க, சிவசங்கரன் துள்ளி எழுந்தான்.

"ஏன்? அதில என்ன பிழை கண்டு பிடிச்சீங்க?"

"என்னங்க புரியாம பேசுறீங்க, மாதர் சஞ்சிகைக்கு ஆட்டுக்குட்டியைப் பத்தி எழுதுறீங்களே.... மொட்டைத் தலைக்கு "ஷெம்போ" போடச் சொல்றவங்களை என்னென்று சொல்வது?"...இவனுக்கு கன்னத்தில் அடிவாங்கியதைப் போன்ற ஓர் உணர்வு. முதல் தடவையாக உணர்ச்சிவசப்பட்டான்.

"விஜி! நீ ரொம்ப மோசம்" கத்தினான். அவள் கொஞ்சமும் பதட்டப்படவில்லை.

"கத்தி என்னங்க பிரயோசனம்? எழுதுறவன் எழுத்தாளன். கிறுக்கிறவன் கிறுக்கன்!" சொல்லிவிட்டுப் போய் விட்டாள். இவனுக்குள் விபரிக்க முடியாத ஒரு வேகம். இத்தனை காலமும் விஜியை பார்க்கக்கூட விரும்பாத சிவசங்கரன் இப்போது மீண்டும் மீண்டும் அவளோடு தர்க்கிக்க விரும்பினான். பேசத் துடித்தான்.... அவள் புகழும்போது வெறுத்தவன், சூடாக விமர்சிக்கும் போது விரும்புகிறான், இது என்ன என்கிறீர்களா? அதுதான் ஒரு கலைஞனின் பலவீனம்!!

(கற்பனை மட்டும்)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# இருட்டு என்பது கருப்பல்ல!

மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்



மாலை மங்கிக்கொண்டிருந்தது.

வானப் பெண்ணில் சூரியன் ருதுவாகிப் போயிருக்க..

அந்தக் குக்கிராமத்தில் முழுமையாக இருள் சூழாத சூழ்நிலையில்..துர் நாற்றத்துக்கு மத்தியில் தீப்பெட்டியாய் அடுக்கப்பட்டிருக்கும் குடிசைகளின் கியூவரிசையின் கடைசிக் குடிசையில் இருந்து தீனமாய் வெளிப்பட்ட அந்த வேதனைக்குரல் காற்றோடு தவழ்ந்து சர்வ அசரீரியாய்க் கேட்கிறது.

"அம்மா..அம்மாாாா...."

நிர்மலா வேதனையின் உச்சகட்டத்தில் இருந்தாள்.

அகில உலக வேதனைகள் அனைத்தையும் சுருட்டி ஒட்டுமொத்தமாக விழுங்கி விடக்கூடிய பிரசவ வேதனையில் நிர்மலா அப்படியே துவண்டுபோய்க் கொண்டிருந்தாள்.

நிர்மலாவுக்கு தனது இருபத்தி நான்காவது வயதில் இது தலைப்பிரசவம்!

இடுப்பு, முதுகு என கர்ப்பகப் பகுதி பூராவும் வலி மின்னலாய்த் தெறிக்கிறது.

"அம்மாாாா..."

ஐம்பது வயதுகளின் ஓரத்தில் இருந்த நிர்மலாவைப் பெற்ற பார்வதியம்மாள் பதறிப்போகிறாள். அவளது பஞ்சடைந்து போன முகத்தில் கலவரம் படர்கிறது.

'என்னாச்சு இவளுக்கு... டாக்டர்கூட சாதாரண பிரசவத்துக்கு இன்னும் ஒரு வாரகாலம் மட்டும் போகும் என்று சொன்னாரே....'

பார்வதியம்மாளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கையில் காசு இல்லாத நிலைமையில் என்னதான் செய்வது? சாப்பிட்டு இரண்டு நாளாச்சு. கையில் கிடைத்ததை உருட்டி... பிள்ளைத்தாச்சிப் பொண்ணுக்கு ஏதாவது ஆகாரம் செய்து போடுவதில் தன்னையே முழுதாக மறந்துபோய்விட்டிருக்கிறாள்.

பாவம்! அவளும் என்ன செயவாள்?

நிர்மலாவுக்கு திடீரென்று வலியெடுக்கும் என்று பார்வதியம்மாள் சத்தியமாய் எதிர்பாக்கவில்லைதான்... என்றாலும் இறைவன் நாட்டம் எப்படியோ?

நிர்மலாவுக்கு இது நிறைமாதம் ஆனபோதும்... இப்படி திடீரென்று ஆகுமென்று பார்வதியம்மாள் நினைக்கவில்லை. இல்லாவிட்டால் என்னமாவது செய்து நிர்மலாவை கவர்ண்மென்ட் ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பாள். முன்கூட்டியே...

பார்வதியம்மாளின் தேகம் சில்லிட்டுப் போகிறது.

நிர்மலா வேதனையின் விளிம்பில் பிதற்றிக்கொண்டிருந்தாள்.

"கடவுளே! உனக்குப் படையல் வைக்கிறேன். என் மகள் நிர்மலாவையும் வயிற்றுக் குழந்தையையும் காப்பாற்று. பிள்ளையாரப்பா..."

பார்வதியம்மாள் அத்தனை தெய்வங்களையும் அவசர அவசரமாக வேண்டிக் கொள்கிறாள். வேண்டுதலைத்தவிர அவளால் வேறு என்னதான் செய்ய முடியும்? இன்று பத்துப் பாத்திரம் தேய்க்கவும் போகமுடியாது. உடம்பு முடியாமல் நேற்றும் போகவில்லை. கையில் சல்லிக்காசு இல்லாமல் நிர்மலாவுக்கு சுகப்பிரசவம் பார்க்க முடியுமா?

பணத்துக்கு என்ன பண்ணுவது?

பக்கத்துக் குடிசைகளில் கேட்கலாமென்றால்... அவர்களும் அடுப்பெரிக்க நாதியில்லாமல் தவிக்கிறார்கள். விதி ஏழைகளைச் சுற்றியே விளையாடிக் கொண்டிருக்கிறதோ என்னமோ, பார்வதியம்மாளுக்கு உலகம் இருண்டு கொண்டிருந்தது.

பார்வதியம்மாளின் மருமகன்- நிர்மலாவின் கணவன் ராமசுப்புவும் வீட்டில் இல்லாத நிலையில்... நிர்மலாவுக்கு உதவிக்கென்று இருக்கும் ஒரே ஜீவன் பார்வதியம்மாள் மட்டும்தான். எவை எப்படியோ பெற்ற வயிற்றுக்கு பாசம் அதிகம்தானே...ஆம்!

ராமசுப்பு எங்கேயாவது சாராயக் கடையில் விழுந்து கிடக்கிறானோ.. இல்லை, ஊருக்கே முந்தானை விரிக்கும் தாசி சைலஜா வீட்டில் படுத்துக்கிடக்கிறானோ...

தாலிகட்டி, உடம்பு சுகத்துக்காக மட்டும் புருஷனாகிவிட முடியுமா?

ஆனால்-

ராமசுப்பு வெறும் உடம்புக்காகவே புருஷனாயிருந்தவன்.

ராமசுப்பு-நிர்மலா கல்யாணம் நடந்து ஒருவருட காலம்தான் ஆகிறது. பெயரளவில் ராமசுப்பு ஏதேதோ தொழில்கள் செய்து சம்பாதித்தாலும், தனது முழு உழைப்பையும் பணமாக சாராயக் கடைக்குத்தான் அபிஷேகம் செய்வான். புருஷனாயிருந்து அவன் நிர்மலாவுக்கு சோறு போட்டதைவிட, தாயாக நின்று பார்வதியம்மாளே நிர்மலாவைப் பராமரித்திருக்கிறாள். காலம் அதிகமாய்க் கண்ணீரிலேதான் கழிந்திருக்கிறது.

சாராயத்துக்குத் தொட்டுக்கொள்ள ஊறுகாய் தேவைப்படுவது போல், தினமும் ராத்திரியில் தொட்டுக்கொள்வதற்கு ராமசுப்புவுக்குப் பெண் வேண்டும்.

சாப்பாட்டுக்குப் பின்னர் நீர் மாதிரி....

மதுவுக்குப் பின் அவனுக்கு மாது வேண்டும்.

கல்யாணத்துக்கு முன்னமே ராமசுப்பு- ஸ்ரீராமசுப்புவாகத்தான் இருந்தான். என்றாலும், கல்யாணத்துக்குப் பிறகு நித்தமும் நிர்மலாவையே தொட்டுக் கொண்டான். விளைவு- நிர்மலா கர்ப்பமாகி வயிறு வரத் தொடங்கிய வுடன்... இரவுகளில் தனித்துப்படுக்க முடியாமல் மீண்டும் ஊர்மேய ஆரம் பித்து, இப்படியாக... இப்போது இரண்டு மாத காலமாக வீட்டையே மறந்து போய்... தாசி சைலஜா வீடே கதியென்று கிடக்கிறான்.

நிர்மலாவுக்கோ ராத்திரிகள் கண்ணீர் ராத்திரிகளாக-

ராமசுப்புவோ ராத்திரிகளை சைலஜாவோடு சிவராத்திரியாக மாற்றிக் கொண்டிருந்தான். நிர்மலாவுக்கு நிறை மாதம் ஆனபோதும் அவன் எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

-எல்லாமே பார்வதியம்மாள்தான்.

பச்சை மாங்காய், புளியம்பழம் என நிர்மலா ருசி பார்க்க ஆசைபட்ட போதுகூட, வாங்கிக் கொடுத்தவள் இந்தப் பார்வதியம்மாள்தான்.

பிரசவ காலத்தில்- அதுவும் தலைப் பிரசவ நேரத்தில் அருகே இருந்து அன்பாய், ஆதரவாய் பணிவிடை செய்ய வேண்டிய கணவன், அடுத்தவள் மடியே தஞ்சமென்று போமிருக்க... தன் உணர்வுகள், உவகைகள் மதிக்கப் படாமல்... எந்த மனைவிதான் தாங்கிக் கொள்வாள்?

ஆனாலும்?

நிர்மலா அத்தனையையும் தாங்கிக் கொண்டாள். அவளால் இந்தப் பிரசவ வேதனையைத்தான் இன்னமும் தாங்க முடியவில்லை.

"அம்மாாாா..."

நிர்மலா உச்சஸ் தாயியில் கத்துகிறாள்.

பார்வதியம்மாள் பாதம் தடுமாற, நெஞ்சு பதற வாசலுக்கு வருகிறாள்.

வெளியே...மண் பாதையில்-

சிவகாமி வீட்டுப் பத்து வயதுப் பையன் ராமு...பழைய சைக்கிள் டயரொன்றைக் 'காராக' நினைத்து புளுதி கிளப்பிக்கொண்டு ஓடிக்கொண்டு போக-

"ராமு.."

அந்த ராமு சடாரென்று பிரேக் போட்டு நின்றான்.

"என்ன பாட்டி?"

"சைலஜா அக்கா வீட்டுல ராமசுப்பு அண்ணன் இருப்பாரு.... கொஞ்சம் போய் வரச்சொல்லுடா என் ராசா..."

"ஐயோ பாட்டி.... அந்த அக்கா ரொம்ப மோசம்... எங்க அம்மா அவங்க வீட்டுப்பக்கமெல்லாம் போக வேணாம்னு சொல்லியிருக்காங்க பாட்டி...."

"நான் உங்க அம்மாகிட்ட சொல்ல மாட்டேன்டா... நிர்மலா அக்காவுக்கு ரொம்ப உடம்பு முடியாம இருக்குடா... என் ராசாயில்ல போய் வரச் சொல்லுடா..."

"நான் வேணும்னா மாத்திரை வாங்கியரட்டுமா பாட்டி..."

"இல்லடா... அக்காவை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போகணும். அக்காவுக்குப் பாப்பா கிடைக்கயிருக்கு. யாருமேயில்ல.. போய் வரச்சொல்லுடா..."

"சரி பாட்டி... அம்மாகிட்டே சொல்லாதே!"

ராமு சந்துபொந்தெல்லாம் தன் டயரோடு வேகமாய் நுழைந்து இரண்டே நிமிடங்களில் சைலஜா வீட்டு முன் நின்றான். வீடு பூட்டியிருந்தது.

ராமசுப்பு வெறும் சாரத்தோடு தெரிந்தான். அவனுக்குப் பின்னால் அந்தத் 'தரித்திரியம்' சைலஜா நின்று கொண்டிருந்தாள். அழகாயிருந்தாள். மகாலட்சுமி மாதிரியாய்...

"என்னடா..?"

ராமசுப்புவின் குரலில் கோபம் தெரிந்தது.

"நிர்மலா அக்காவுக்கு பாப்பா கிடைக்கப் போகுதாம்... ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போக யாருமேயில்லையாம்.... பாட்டியம்மா உங்களை கூட்டியாரச் சொல்லிச்சு..."

"வரமாட்டேன்னு போய்ச் சொல்லு... போ"

ராமு புரியாமல் பார்த்தான். கண் இமைக்க மறந்தான்.

"பாப்பாயில்ல பரதேசி கெடைச்சாலும் வரமாட்டேன் போ.."

சாராய நாற்றம்... ராமுவுக்குக் குமட்டியது.

"அப்போ நான் போகட்டா?"

"போய்த் தொலை!"

ராமு டயரோடு போகத் திரும்பிய போதுதான் அதைக் கவனித்தான். சைலஜாவின் கண்களில் கண்ணீர் பூத்துப் போனது மாதிரி... மீண்டும் திரும்பிப் பார்த்தான்.

சைலஜா சிலையாய் நின்றுகொண்டிருந்தாள்.

கண்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருக்க...

"சைலஜா அக்கா ஒரு மாதிரி... அவங்க வீட்டுப்பக்கமெல்லாம் போகாதே!"

"ஏம்மா?"

"அவள் தரித்திரியம் பிடிச்சவள்!"

"தரித்திரியம்னா என்னம்மா?"

"அதெல்லாம் உனக்குப் புரியாது. ஆனால் அந்தப் பக்கம் போகாதே!"

-அம்மா சொன்னது திடீரென்று ஞாபகத்துக்குவர,

'இங்கே வந்ததாக அம்மா கேள்விப் பட்டால் தோலையுரிச்சுப் போடுவாளோ?"

ராமு உடம்பில் இலேசாய் நடுங்கினான். வியர்த்தான். மனம் படபடத்தது.

"ராமசுப்பண்ணே...ராமசுப்பண்ணே..."

கதவின் முன் நின்று குரல் கொடுத்தான்.

கதவு சடாரென்று திறந்தது.

ராமுவுக்கு எதுவுமே புரியவில்லை.

அங்கேயிருந்து தன் டயரோடு வில்லாய்ப் புறப்பட்டான்.

•••

ஆயிற்று!

எல்லாம் நல்லபடியாக ஆயிற்று.

நிர்மலாவுக்கு சுகப்பிரசவம் நிகழ்ந்து... அழகானதொரு ஆண் குழந்தையைப் பிரசவிக்கச் செய்து.... தாயும் சிசுவும் சுகாதாரமாய்- ஆரோக்கியமாய் ஆஸ்பத்திரி 'டெட்டால்' வாசனை அறைக்குள் நித்திரையில் இருந்தார்கள்.

பார்வதியம்மாள் அருகேயிருந்த கதிரையில் அமர்ந்திருந்தாள்.

"அம்மா.."

பார்வதியம்மாள் தலையை அண்ணார்த்திப் பார்க்க-

சைலஜா முகத்தில் புன்னகை அரும்ப நின்றிருந்தாள்.

"நான் போயிட்டு வரட்டுமாம்மா,"

சைல்ஜா கேட்க... பார்வதியம்மாள் சடாரென எழுந்து நின்றாள். அப்படியே வாஞ்சையோடு சைலஜாவின் கரங்களைப் பற்றிக்கொண்டாள். கண்களில் கண்ணீர் திரண்டது.

"ஏம்மா அழுறீங்க?"

பார்வதியம்மாளுக்கு வார்த்தைகள் வரவில்லை.

"சைலஜா... நீ தெய்வமம்மா.. தெய்வம்..." பார்வதியம்மாள் குரலில் ரொம்பவும் உடைபட்டுப் போனாள். அப்படியே சைலஜாவைக் கட்டியணைத்துக் கொண்டாள்.

சைலஜா மெய்சிலிர்த்துப் போனாள்.

நிமிடங்கள் மெல்லமாய்க் கரைய.....

சைலஜா மெதுவாய்ச் சொன்னாள்.

"கப்போர்டில குளுகோஸ்...ஆரஞ்ச் எல்லாம் வாங்கி வெச்சிருக்கேன்மா. நிர்மலா வீட்டுக்குப் போகும்போது நான் டாக்ஸி எடுத்து வர்ரேன். சிலவுக்கு ஏதாவது பணம்..." சைலஜா தன் ஜாக்கெட்டுக்குள் இருந்து இரண்டு நூறு ரூபாய்கள் எடுத்துப் பார்வதியம்மாளின் கைகளில் திணித்தாள். "சிலவுக்கு வைச்சுக்குங்கம்மா...."

பார்வதியம்மாள் உடம்பு முழுக்க நன்றியுணர்ச்சியோடு பார்த்தாள். சொன்னாள!

"சைலஜா நீ மட்டும் தக்க நேரத்துல டாக்ஸியெடுத்துட்டு வந்து... நிர்மலாவை இங்கே கூட்டிக்கிட்டு வரலேன்னா நான் என்ன பாடுபட்டிருப்பேன்.... அந்த ஆண்டவன்தான் உன்னை இங்கே அனுப்பியிருக்கான்மா. உன் நல்ல மனசுக்கு...." வார்த்தைகள் கரகரத்தன.

"ஒரு சின்ன உதவிதான்மா..."

"உதவியில்லம்மா இது... அதையும் விட மேலான தெய்வச் செயல்மா... நிர்மலாவுடைய புருஷனே, தன் புள்ளைய பரதேசின்னு சொல்லி ஓரமாப் போனப்பகூட.. சொந்தம் பந்தமே இல்லாத நீ... உனக்கு நான் ஏழேழு ஜென்மங்களுக்கும் கடமைப்பட்டிருக்கேன்மா... பார்த்தியா... நிர்மலாவுடைய வாழ்க்கை எப்படிக் கறுப்படைஞ்சு போயிருக்குன்னு பார்த்தியா? சல்லிக்காசு கையில் இல்லாதப்போ நீ எவ்வளவு பணம் பணம்னு சிலவழிச்சே......"

பார்வதியம்மாளுக்கு அழுகை வெடித்தது.

"பணமாம்மா பெரிசு... அதுவும் நிர்மலாவுடைய புருஷன் எனக்கு- என்னுடம்புக்குக் கொடுக்கிற பணத்தைத் தானே நான் உங்க பொண்ணுக்கு சிலவழிச்சேன். நான் செய்து கொண்டிருக்கிற பாவமான தொழிலுக்கு இது தான்மா பிராயச்சித்தம்....

"உங்க நிர்மலாவின் வாழ்க்கை புருஷனேயில்லாம கறுப்படைஞ்சு போயிருக்குன்னு நீங்க கவலைப் படுறீங்கம்மா... கறுப்புக்கு வேணும்னா வெள்ளை பூசிடலாம். ஆனால் என் வாழ்க்கை...?

"என் வாழ்க்கை இருட்டும்மா... வெள்ளை பூச முடியாது."

சைலஜாவினதும் விழிகள் நனைந்தன. நெஞ்சு ஏற்றயிறக்கம் போட்டது.

மவுனம் சில வினாடிகள் அரசாண்டது.

"சைலஜா.."

"என்னம்மா.."

"கேக்குறேன்னு தப்பா நினைக்காதே... உன் நல்ல மனசுக்கு... நீ செய்யுற இந்தத் தொழில் பாவமாப் படலையாம்மா..?"

சைலஜா சோகமாய்ச் சிரித்தாள். சொன்னாள!

"நான் பசியோடு அனாதரவாக நின்னப்போ... எல்லோரும் என்னுடம்புக்காகத் தான் சோறு போட்டாங்கம்மா... மனசுக்காகயில்ல. ராமசுப்புகூட என் உடம்புக்காகத்தானே என்கிட்ட வர்றாரு. இல்லேன்னா நிர்மலா மாதிரியொரு பொண்டாட்டி.... உங்களை மாதிரியொரு மாமியார்..... அவருக்குக் கிடைப்பாங்களா.... சொல்லுங்கம்மா..."

பார்வதி பரிதாபமாய் பார்க்கிறாள். சொல்கிறாள!

"முடியும்னா ராமசுப்புவை நிர்மலாக் கிட்ட அனுப்பி வைம்மா?"

"ம்ஹூம்... இந்த சைலஜா இல்லேன்னா ராமசுப்பு வேறொரு ஜலஜாக்கிட்ட போய்டுவாரும்மா. அவராகவே மனம் திரும்பி வந்தால்தான் உண்டும்மா... நான் போயிட்டு வர்றேன். ஏதாவது அவசியம்னா சொல்லியனுப்புங்க..."

"நீ நல்லாயிருக்கணும்மா..."

"உங்க ஆசீர்வாதம்..."

சைலஜா படியிறங்கி வெளியேறி நடக்க...

பார்வதியம்மாள் கனமாகிப்போன மனதுடன்... விழிகள் கசிய அவள் போவதையே நெடுநேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'சைலஜா நீ தெய்வமம்மா...!"

அவள் மனம் முணு முணுத்தது.

•••

நிரம்பவும் இருட்டிப் போயிருந்தது.

சைலஜா மருத்துவ மனையில் இருந்து பஸ் பிடித்து கிராமத்துக்கு வந்து.... முன்றாம் தெருவில் நுழைந்து..... சிவகாமி வீட்டுக்குப் பக்கத்தால் போகும்போது...

சிவகாமி கையில் பிரம்பொன்று வைத்துக்கொண்டு ராமுவை அடித்துக் கொண்டிருக்க, ராமு பலமாய்க் கதறிக் கொண்டிருந்தான்.

"என்னை அடிக்காதீங்கம்மா... அடிக்காதீங்கம்மா.."

"இனி அந்த வீட்டுப்பக்கம் போவியா?"

"போகமாட்டேன்மா... அடிக்காதீங்கம்மா.."

"நான் இவ்வளவு சொல்லியும்.... நீ அந்தத் தரித்திரியம் புடிச்ச வீட்டுக்குப் போனியா... இந்த மாதிரி இனி அந்த வீட்டுப்பக்கம் போவியா?"

"இல்லம்மா...இனிப் போக மாட்டேன்மா..."

சிவகாமி ராமுவை விளாசித் தள்ளினாள்.

"இனிப் போகமாட்டேன்மா... போக மாட்டேன்மா..."

அந்த இருட்டுக்குள் நின்று சைலஜா பார்த்துக்கொண்டேயிருந்தாள்.

அப்படியே ஏதோ புரிந்தும் புரியாத நிலையில்.... விலகி மெல்லமாய் நடக்கத் துவங்கினாள். எதையோ கசப்பாயுணர்ந்தாள்.-

இதுவரை தெளிவாகிப் போயிருந்த மனம், மீண்டும் கனக்கத் தொடங்கியது.

சூழ்நிலைகள்- சுற்றுப்புறங்கள் இருட்ட ஆரம்பித்தன. பலமாய்.....

(யாவும் கற்பனை)

## இறக்குமதிச் சிரிப்பு

### அறிவிப்பு வாசகம்

புதிய பிரான்ஸ் எயார்லைன்ஸ் விமானம் அது.

அதில் எல்லாமே தானியங்கி இயந்திரங்கள். எங்கே பார்த்தாலும் அவற்றை எப்படி இயக்குவது என்ற அறிவிப்பு வாசகங்கள்.

இந்த பட்டனை அழுத்துங்கள். உங்கள் சீட்பெல்ட் தயாராகிவிடும். சீட்பெல்ட்டில் உள்ள பட்டனை அழுத்துங்கள். ஒரு தலையணைவந்து தலைக்குத் தோதாக அமையும்.

தலையணை பட்டனை அழுத்துங்கள். ஒரு பணிப்பெண் ஏவல் செய்ய வருவாள்.

பணிப்பெண் கவுனிலுள்ள பொத்தானை அழுத்துங்கள். உங்கள் பற்கள் முப்பத்திரண்டும் வெளியே வரும்.



### அதுதான்

டாக்ஸியில் ஏறிய இளைஞன் சாரதியைக் கவனித்தான்.

சாரதி ஒரு அழகான பெண். அவளிடம் வம்பு செய்யலாம் என்கிற நோக்கத்தில் இளைஞன் கேட்டான்.

"என்னை அருகில் இருக்கும் மலிவான விபச்சார விடுதிக்கு அழைத்துச் செல்ல முடியுமா?"

"மிஸ்டர் நீங்கள் ஏற்கனவே அந்த இடத்தில்தான் இருக்கிறீர்கள்."

இது அவளது புத்திசாலித்தனமான பதில்.

### ஆ......

நீண்ட நேரம் கழித்து இரவில் வீடு திரும்பும் கணவன் மனைவியிடம் சொன்னான்.

'குட்நைட், மூன்று குழந்தைகளின் அம்மாவே!"

அவள் பதிலுக்குச் சொன்னாள்.

"குட்நைட், ஒரே ஒரு குழந்தையின் அப்பாவே."

அதற்குப் பிறகு அவன் நேரத்தோடு வீடு திரும்ப ஆரம்பித்தான்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

நகர ரவுண்டர்

-ஒற்றன்-



# திரையரங்கில் கண்ட காட்சி! சூழ்நிலை மறந்த ஜோடிகள்!!

நண்பர் வீடொன்றுக்கு சென்றிருந்தேன். அவருக்கு இரண்டு பிள்ளைகள். இரண்டும் ஆண்பிள்ளைகள். கொழும்பில் பிரபல தமிழ் இந்து பாடசாலையில் படிக்கிறார்கள்.

நான் போகும் போது நண்பர் கோபத்தில் இருப்பது அவர் முகத்தில் தெரிந்தது.

"வாரும் ஒற்றரே! ஆசிரியர் சிலர் அரக்கராய் மாறும் செய்தி உமது காதில் விழுவது கிடையாதோ."

சூடு நிரம்பிய வார்த்தைகள்.

"என்ன பிரச்சனை? சொன்னால்தானே புரியும்."

சொல்லிக்கொண்டே உரிமையோடு கதிரையில் அமர்ந்தோம்.

"ஒரு ஆசிரியை வகுப்பில் மாணவர்களுக்கு வித்தியாசமான தண்டிப்பு காட்டுகிறாராம்."

கூறிக்கொண்டே மகனை அருகில் அழைத்தார்.

"காலைப் பாரும்."

பார்த்தோம் வீங்கியிருந்தது. தண்டிப்பது தேவைதான். அதற்காக பிள்ளைகளுக்கு ஆடு, மாடுகளுக்கு அடிப்பது போல அடித்தால் எல்லாப் பெற்றோரும் பொறுமையாக இருக்க மாட்டார்கள்.

அதுவும் ஒரு ரீச்சர். என்ன வேலை இது? நினைத்தபடி காலைப் பார்த்தோம்.

"வீட்டிலிருந்து எண்ணெய் கொண்டு வந்து தடியில் பூசி அடிக்கிறாவாம். கொழுப்புத்தான்."

நண்பர் கோபம் மாறாமல் பேசினார்.

"அதிபரிடம் புகார் கொடுப்பது தானே. அதிபர் கவனிக்கக்கூடிய ஆள் என்று கேள்வி."

"புகார் செய்யத்தான் நினைத்தேன். இன்னொரு முறை இப்படி நடந்தால் நடக்கிறதே வேறை. அப்போது அதிபரையும் பார்த்து நடவடிக்கையை நீங்களே எடுக்கிறீர்களா, அல்லது..."

நாம் இடை மறித்தோம். பொறுப்புள்ள ஆசிரியர்கள் மத்தியில் இப்படியும் சிலர் இருக்கத்தான் செய்வார்கள். வெள்ளைச் சேலையில் கறுப்புப்புள்ளி மாதிரி. கோபப் படாமல் மென்மையாக அணுகவேண்டும்."

நண்பரின் கோபத்தை தணித்துவிட்டு, அவரது பாரியார் தந்த நல்ல தேநீர் அருந்திவிட்டு விடைபெற்றோம்.

■

படம் பார்த்து பல மாதங்கள். அதனால் இன்றொரு படம் பார்க்கலாம் என்று தோன்றியது.

தியேட்டர் வாசலில் எம்.ஜி.ஆர். அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டிருந்தார். பலகோடி மக்களை கட்டிப் போட்ட மந்திரச் சிரிப்பு.

இரண்டு முதலமைச்சர்கள் நடித்த படம். ஜெயலலிதா இப்போது போல் இல்லாமல் மெல்லிய தோற்றத்தோடு பொங்கும் இளமையோடு கவர்ச்சியாக பார்த்துக் கொண்டிருந்தார்.

இப்போது வரும் நடிகைகளை எல்லாம் அப்போதே தூக்கிச் சாப்பிட்டுவிட்ட நடிகைகள் வரிசையில் ஜெயலலிதாவுக்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டும்.

எத்தனையோ நடிகைகள் எம்.ஜி.ஆ ரோடு இணைத்துப் பேசப்பட்டபோதும் ஜெயலலிதாவை மட்டுமே எம்.ஜி.ஆர். இரசிகர்கள் அண்ணி என்று அப்போதே அழைத்தனர். அப்படியொரு ஜோடிப் பொருத்தம்.

ரிக்கற் எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தோம். படம் ஆரம்பமாகி விட்டது. அதனால் உள்ளே இருட்டாக இருந்தது. இருட்டுக்கு கண்களைப் பழக்கப்படுத்திக் கொண்டு சீற் தேடி அமர்ந்தோம்.

அதென்னவோ தெரியாது நமக்கொரு ராசி. அல்லது மச்சம். எங்கு போனாலும் 'கலுக்' என்றொரு சிரிப்புச்சத்தம் வந்து காதில் விழும்.

இப்போது ஒரு கிறக்கமான 'கலுக்' மெல்லத் தலையைத் திருப்பி பக்கத்துச் சீற்றை நோட்டமிட்டோம்.

அந்தப் பெண் நெளிந்து கொண்டிருந்தது. அதன் அருகேயுள்ள சீற்றில் இருந்து கரம் ஒன்று நீண்டு கழுத்திலே விழுந்து அப்படியே நீண்டு.... பார்வையை விலக்கி திரையில் போட்டோம். அவர்கள் காதல் ஜோடிகள்.

தியேட்டர்களில் காதல் ஜோடிகளின் லீலைகள் அதிகமாகி விட்டதாக நண்பர் ஒருவர் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

நாம் இருந்த சீற்றின் முன்னாலும் ஒரு காதல் ஜோடி திரையில் படம் ஓடுவதை மறந்து வேறு ஏதோ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தது. காதலியின் கழுத்தில் முகத்தைப் பதித்து ஏதோ முணு, முணுத்துக்கொண்டு.......

தியேட்டரில் திரும்பும் பக்கமெல்லாம் தனித்தனிப் படங்கள் பார்க்கலாம் போல் இருந்தது.

பக்கத்து சீற்றில் இருந்த ஜோடி அதிகமாக முன்னேறியிருந்தது. படம் முடியுமுன்னர் எவ்வளவு முடிகிறதோ அது வரை என்ற தீவிரத்தில் நாம் அருகில் இருப்பதையே மறந்துவிட்டார்கள்.

தணிக்கை செய்யப்படவேண்டிய காட்சிகள்.

காதல் ஜோடிகள் தியேட்டர்களுக்குள் செய்யும் லீலைகளால் குடும்பத்தோடு படம் பார்க்க வரும் பலர் சங்கடப்படுகிறார்கள்.

பிள்ளைகளோடு வந்து படம் பார்க்கும் போது முன் சீற்றில் ஒரு காதல் ஜோடி இருந்துவிட்டால் அப்போது ஏற்படும் சங்கடத்தை சொல்லவே வேண்டாம்.

நமது இளம் தலைமுறையில் சிலருக்கு காதலிக்க மட்டும் தெரிந்தால் போதாது. நாகரிகமும் தெரியவேண்டும். காதல் இருவரது தனிப்பட்ட விவகாரம். அது அடுத்தவர் முன் இங்கிதம் இல்லாமல் அரங்கேறும் போது கண்டிக்கப்பட வேண்டிய விவகாரம் ஆகிவிடும்.


அதுமட்டுமல்ல வாடகைப் பெண்களும் தமது வாடிக்கையாளர்களை தியேட்டர்களுக்கு அழைத்து வருகிறார்கள்.

இதனால் தியேட்டர்களில் குடும்பத்தினர் படம் பார்க்கச் செல்லவே தயங்கும் நிலை ஏற்பட்டுவருகிறது.

ஏற்கனவே வீடியோ வரவால் பாதிக்கப்பட்டிருக்கும் தியேட்டர்காரர்களை இந்த லீலையாளர்களும் கவலைப்பட வைக்கிறார்கள்.

காதலிலும், காமத்திலும் ஒரு நாகரிகம் வேண்டும். சம்பந்தப்பட்ட இருவரை மட்டு மல்ல, சமூகத்தையும் அது சலிக்க வைப்பதாக இருக்கக்கூடாது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-23



### இடமிருந்து வலம்

1. வெளிநாடுகளில் நம்மவர்கள் பலருக்கு இது கிடைத்திருக்கிறது.
5. இதற்கு முடிச்சு மூன்று. (திரும்பியிருக்கிறது)
6. வாக்குறுதியால் வாழ்க்கையை இழந்த அரசன்.
9. குறுக்கே வருபவர்களையும் இப்படிச் சொல்வதுண்டு.
10. வீணான இழப்பு. (குழம்பியிருக்கிறது)
11. கண்ணாடியை வெட்டலாம்.
12. எய்தவன் இருக்க இதை நோகக்கூடாது.

### மேலிருந்து கீழ்

1. போதிமரம் இவருக்கு உதவியது.
2. தேவையற்ற செலவாளி.
3. பறவைகளுக்கும் இது இருக்கிறது.
4. உயிர்காக்க உதவும்.
7. கவர்ந்து கொள்ளும் பொருள்.
8. தேவலோக மங்கை தலை கீழாக இருக்கிறாள்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 13.11.93க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:**

குறுக்கெழுத்துப் போட்டி இல-23
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-21க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தீ | மி | தி | ப் | பு | ■ | 2 சி |
| பா | 3 த | 4 வி | சி | றி | ■ | க |
| வ | லை | ■ | ■ | 5 பு | 6 கா | ர |
| ளி | ய | 7 மு | 8 ந | ட | ன | ம் |
| ■ | ணை | 9 து | ய | வை | ல் | ■ |
| 10 சி | ■ | மை | ■ | ■ | நீ | 11 சா |
| 12 பி | றை | ■ | 13 உ | ண | ர் | வு |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.21இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. எஸ். வேலுச்சாமி ஹட்டன்.
2. வி. துரைராசா கொழும்பு-06.
3. எம்.பாலா கொழும்பு-07.
4. ஆ. கோணேஸ்வரன் குருநாகல்.
5. எஸ்.என். சாஜஹான் நீர்கொழும்பு.
6. கே. அல்பிரட் வவுனியா.
7. எஸ். நிவேதிதா கொழும்பு-15.
8. எம். அப்துல்கான் குருநாகல்.
9. அ. ஜோதி கண்டி.
10. பி. சொரூபா நுவரெலியா.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா50/= வழங்கப்படும்.

# கணவனின் கையை வெட்டிய மனைவி ‘என் புருசன் தான் எனக்கு மட்டும்தான்’!



அவளுக்கோ தன் கணவன் மீது அளவற்ற காதல்.

கல்லூரியில் படிக்கும் போதே ஏற்பட்ட காதல் அது.

என்றாலும் கல்லூரி நாட்களில் அவளது காதலுக்கு போட்டி இருந்தது.

அவளோடு ஒரே வகுப்பில் படித்த ஜென்னியும் லௌசி காதலித்த காள் என்ற மாணவனையே காதலித்தாள்.

ஜென்னிதான் காதலில் வென்றாள். காள் என்ற காளையை கல்யாணமும் செய்துகொண்டாள்.

லௌசி அதனால் ஜென்னிமீது தீராத கோபம் கொண்டாள். நட்பு அறுந்தது.

ஜென்னி தன் பெயரை தன் கணவன் கையில் பச்சை குத்திக்கொள்ள வேண்டும் என்று விரும்பினாள்.

மனதுக்கினியவளின் விருப்பத்தை மீற முடியுமா?

காள் அப்படியே செய்தான். ஒரு நாள் லண்டன் புறநகர் பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் ஜென்னி மாண்டு போனாள்.

சில காலம் செல்ல லௌசி தான் விரும்பிய காளை திருமணம் செய்து கொண்டாள்.

ஜென்னி மறைந்த போதும், ஜென்னியின் நினைவுகளை காள் மறக்கவில்லை.

பசுமரத்தாணிபோல பதிந்த நினைவுகளை மறக்க முடியுமா? முடியவில்லை.

தன் கையில் பச்சை குத்தியிருந்த ஜென்னியின் பெயரைப் பார்த்து காள் மனமுருகிப்போவான்.

அது கண்டு லௌசி மனம் பதைப்பாள். சினப்படுவாள்.

ஜென்னியின் புகைப்படங்கள், உடமைகள் என்பவற்றை தூக்கி வீசினாள். ஆனால் காளின் கையில் இருந்த பெயரை மட்டும் அழிக்க முடியவில்லை.

அப்போதுதான் காள்- லௌசி இருவருக்கும் திருமணம் நடந்த 5வது ஆண்டு விழாவும் வந்தது.

"நீ எதைக் கேட்டாலும் தருவேன்" என்று லௌசியிடம் காள் சொன்னான்.

உடனே இதுதான் சந்தர்ப்பம் என்று லௌசி கேட்டாள்:

"கையில் உள்ள ஜென்னியின் பெயரை அழித்து விடுங்கள்."

காள் மறுத்துவிட்டான்.

"அதைமட்டும் கேட்காதே லௌசி மறைந்துபோன என் முதல் மனைவியின் ஆசைக்காக குத்தப்பட்டது இது. வேறு எதையாவது கேள் தருகிறேன். என் உயிரைக் கூடத் தருகிறேன். இதை மட்டும் கேட்காதே."

காள் சொல்ல லௌசி கடும் சினமடைந்தாள்.

ஒரு நாள் சந்தர்ப்பம் வாய்த்தது. மரம் வெட்டும் பெரிய கத்தியும் கையில் கிடைத்தது.

பச்சை குத்தப்பட்டிருந்த கணவனின் கையில் ஒரே வெட்டு.

கை துண்டாகிவிட்டது.

நேராக பொலிசிடம் சென்ற லௌசி தன் கணவனின் கையை தானே வெட்டியதாக வாக்குமூலம் கொடுத்தாள்.

ஆனால் கணவனோ தன் மனைவிக்கு எதிராக சாட்சியம் சொல்ல மறுத்துவிட்டார்.

தன் மீது கொண்ட அளவற்ற விருப்பமே அவளை அப்படி செய்ய தூண்டியதாக கணவன் காள் நினைக்கிறார்.

விரைவில் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பப் போகிறார் காள்.

அதன் பின்னர்தான் அவர்களது எதிர்கால உறவு எப்படியிருக்கும் என்பது தீர்மானமாகும்.

## சிந்திய பதில்கள்

## இங்கே நோபல் பரிசு யாருக்கு?

பாகிஸ்தான் பிரதமராகப் பதவி ஏற்றுள்ள பெனாஸிர் பூட்டோ பற்றி......?

ரிபான் எம். பௌஸர்- ரம்புக்-எல.

தோல்விகளைக் கண்டு துவளாதவர். புது யுகத்தின் புதுமைப் பெண்.

•

வெளிநாடுகளில் வேலை தேடும் இளைஞர்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?

கே.செந்தில் ராஜ்-கந்தப்பளை.

இங்கே வேலை கிடைத்தால் அவர்கள் ஏன் நாடுவிட்டு நாடு போகிறார்கள். இங்குள்ள வேலை இல்லாத் திண்டாட்டத்தால் உலக வீதிகளில் வீசியெறியப்பட்டவர்கள்.

•

போரைத் தவிர வேறு வழிகளால் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாதா?

கே.கதிர்காமநாதன்-கல்முனை.

முடியும். முயற்சிகள்தான் இல்லை.

•

எங்கள் நாட்டின் பொருளாதார நிலைமை பற்றி உங்கள் கருத்து என்ன?

வே.ஜெசிந்தா மேரி-கொழும்பு-09.

கையேந்தும் நிலைமை. போதாக்குறைக்கு யுத்தம் வேறு ஏந்தும் கையைக் கூட முடமாக்கிக் கொண்டிருக்கிறது.

•

பெண்களுக்கு மொட்டைக் கடிதம் அனுப்பும் ஆண்களைப் பற்றி?

செல்வி.ஜெயா-தெரணியகலை.

கையாலாகாதவர்கள் தாங்கள் என்பதை மறைமுகமாய் ஒப்புக்கொள்கிறார்கள். முதுகில் குத்துகிறவர்களும் மொட்டைக் கடிதம் போடுகிறவர்களும் பேடிகள்.

•

ஒரு படத்தின் தோல்வியால் அதிகம் பாதிக்கப்படுவது நடிகரா? தயாரிப்பாளரா?

எஸ். கனகராஜா-உளுகலை எஸ்டேட்.

ஏற்கனவே சம்பளம் பெறப்படாவிட்டால் நடிகரும் பாதிக்கப்படுவார்.

•

கடவுளுக்கு பயந்தோரைக் காணவில்லையே இப்போது?

க.மதிசீலன்-களுவாஞ்சிக்குடி.

கடவுளே பயப்படும்படியான பூவுலக அசுரர்கள் தோன்றும் காலம் இது.

•

காதல் கசப்பாவது எப்போது?

இம்தியாஸ் -கொழும்பு-15.

காதல் என்றால் என்னவென்று புரிந்து கொள்ளாமல் நடந்து அதன் விளைவுகளை சந்திக்கும் போது.

•

இலங்கையில் நோபல் பரிசு பெற யாரை சிபாரிசு செய்யலாம்?

ஏ.பி.சதாசிவம்-கொழும்பு-02.

திருவாளர் பொதுஜனத்தை. ஏன் என்றால் அவர்தானே எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு அமைதி காத்துவருகிறார்.

•

புரிந்துணர்வு இல்லாத நட்பு எப்படியிருக்கும்?

கோகிலா குமாரவேல்-இரத்தினபுரி.

தாமரை இலைமேல் உள்ள தண்ணீர் போல இருக்கும்.

•

சினிமாவே தோன்றியிருக்காவிட்டால் தற்போது உலகு என்ன நிலையில் இருக்கும்?

எஸ்.எம்.ரபீக்-கண்டி.

சினிமா இல்லையென்றால் உலகம் முன்னேறியிருக்கும் என்றும் சொல்லமுடியாது. சினிமா இருப்பதால் உலகம் பின்தங்கியிருக்கிறது என்றும் சொல்லமுடியாது. இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன உலக மாற்றங்களில் சினிமா ஒரு பெரிய தாக்கத்தை செலுத்துவதில்லை.

•

உண்மையான அன்பு எதுவரைக்கும்?

ஜி.சசிகலா-பண்டாரவளை.

அதற்கு மட்டும் எல்லை என்பதே இல்லை.

•

இசைஞானிக்கு 'சிம்போனி' இசையால் கிடைத்த வெற்றியைப் பற்றி தங்கள் கருத்தென்ன?

டி.எஸ்.பிறேம்-இந்தல.

தமிழ் பேசுவோர் உலக அரங்கில் தலை உயர்த்திக்கொள்ள கிடைத்த வாய்ப்புக்களில் ஒன்று.

•

இன்றைய அரசியல் தரமுயர என்ன செய்ய வேண்டும்?

எ.ரவிராஜ்-திருகோணமலை.

அரசியல் என்றால் நேர்மை, வெளிப்படைத் தன்மை உதவாது என்று நினைப்பவர்களை ஓரத்தில் தள்ள வேண்டும்.

•


# ஆன்மீகம்

## தீய இருள் நீங்கத் தூய ஒளி காட்டும் தீபாவளித் திருநாள்

-சிவபிருந்தா-

மத போதனைகள் அனைத்தும் மானிடரின் ஈடேற்றத்துக்கே வழி காட்டுகின்றன. எல்லா மதங்களும் தீமையை அகற்றி நன்மையைக் கடைப்பிடிக்குமாறே பணிக்கின்றன. ஆகவே மதங்களனைத்தும் பொதுவாக மனிதனுக்கு வேண்டிய நல்ல கருத்துக்களையே கூறுகின்றன.

தத்துவம் நிறைந்த போதனைகள் சாதாரண பாமர மக்களுக்கு விளங்கப்போவதில்லை. இதனால் தான் எமது முன்னோர்கள் அரிய பெரிய



கருத்துக்களை உவமைக் கதைகள் மூலம் வெளியிட்டார்கள். அவற்றின் உட்பொருளை விளங்கிக்கொள்ள முடியாவிட்டாலும் அத்தகைய கருத்துக்களை பாமர மக்கள் பயபக்தியோடு ஏற்று ஒழுக வழி வகுத்தார்கள்.

இந்த அடிப்படையில்தான் பண்டிகைகள், சடங்குகள் போன்றவற்றுக்கு புனை கதைகளை உருவாக்கினார்கள். அந்தந்தக் காலகட்டங்களில் ஏற்படுத்தப்படும் கதைகள் நாளடைவில் பலப்பல மாற்றங்களையும் மாறுபட்ட வியாக்கியானங்களையும் பெறத் தொடங்கின.

புராண, இதிகாசங்களில் காணப்படும் காலத்துக்கு ஒவ்வாத கருத்துக்கள் இடம் பெற்றிருப்பதும் இதனால் தான் என்று கூறலாம். அவற்றில் ஆழமாக பொதிந்துள்ள கருத்துக்கள் வெளிப்படாமல் மேலோட்டமான புறச்சாயல்களே மனிதனை ஆட்கொண்டு விடுகின்றன. இவற்றை, பாலையும் தண்ணீரையும் பகுத்தெடுக்கும் தன்மை வாய்ந்த அன்னம் போல், பகுத்தறிந்து தெளிவு பெற வேண்டியது அறிவாளிகளின் கடமையாகும்.

நோன்மதி, அமாவாசை போன்ற நாட்கள் இலங்கையில் வாழும் சகல இன-மத மக்களுக்கும் ஏதோ ஒரு வகையில் சிறப்புள்ளவை. சைவர்கள் பௌர்ணமி மற்றும் அமாவாசை ஆகிய தினங்களை விரத நாட்களாகக் கொள்வது போல் பௌத்தர்கள் அதே நாட்களை நோன்பு நாட்களாகவே கருதுகின்றனர்.

இஸ்லாமியர் அமாவாசை கழிந்த முதல் மதி நாளை தங்கள் மாதப்பிறப்பாகக் கொள்ளுகின்றனர்.

உலகில் வாழும் சகல மக்களும் உலகின் சுழற்சியினாலும் ஓட்டத்தினாலும் ஏற்படும் சூரிய, சந்திர இயக்கத்தை அனுசரித்தே சகலவற்றையும் தீர்மானிக்கிறார்கள். இந்துக்கள் ஒருபடி மேலே சென்று ஏனைய கோள்கள் நட்சத்திரங்கள் ஆகியவற்றின் நடமாட்டத்தை அடிப்படையாக வைத்து தங்கள் பண்டிகைகள், தேவாலயத் திருவிழாக்களை வகுத்துக்கொள்ளுகின்றனர்.

தீபாவளி என்பது வட இந்தியாவில் மிகப் புராதனமான காலம் தொட்டுக் கொண்டாடப் பட்டு வரும் மிகப் பிரபலமான பண்டிகை, காரிருள் சூழ்ந்த அமாவாசையுடன் ஒட்டி வரும் இந்நாளை தீப- ஆவலி தீபவரிசை- ஒளித் திருநாளாகக் கொண்டாடுகின்றனர். சில வட இந்திய மக்களுக்கு புது வருடப் பிறப்பும் தீபாவளியுடன் இணைந்து வருகிறது. வர்த்தகப் பிரமுகர்கள் பழைய கணக்குகளை ஒதுக்கி புதுக்கணக்குகளை அன்றைய தினமே ஆரம்பிக்கின்றனர்.

இன்று அகில இந்தியாவிலும் தீபாவளித் திருநாள் ஒரு பொதுப் பண்டிகை என்ற நிலையினை அடைந்து விட்டது. தமிழ் நாட்டிலும் ஏனைய பண்டிகைகளுக்கு இல்லாத சிறப்பு தீபாவளிக்கு ஏற்பட்டுவிட்டது. தமிழ் நாட்டுடன் எமக்கும் உள்ள பூர்வீகத் தொடர்பின் பயனாக தீபாவளித் திருநாளை இலங்கை வாழ் சைவப் பெருமக்களும் தங்கள் விழாவாக- தலைமறை தலைமுறையாகக் கொண்டாடி வருகின்றனர்.

தீபாவளியுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் புராணக்கதை எவ்வாறாக இருந்த போதிலும் இந்தத் திருநாள் தீமையாகிய அரக்கனை அழித்து நன்மை எனும் ஒளி ஓங்க வழி வகுக்கும் நாளாகக் கொள்ளப்படவேண்டும் என்ற உண்மையினையே புலப்படுத்துகிறது.

இறைவியின் மகனாகப் பிறந்த ஒருவன் தவ வலிமையால் பெற்ற வரத்தால் தலைக்கனம் பிடித்தவனாகி- அசுரகுணம் கொண்டு அதர்ம வழியிலீடுபடுகிறான். தான் பெற்ற மகன் என்றும் பாராமல் அகந்தை கொண்ட அந்த அரக்கனைப் பெற்ற தாயே அழிக்கிறாள். இதுதான் தீபாவளிப் பண்டிகை பிறந்த கதையின் சாரம்.

நம்மிடைமே சகல குணங்களும் அடக்கம். நன்மைகள் பலவற்றைப் புரியும் நற்குணம் கொண்ட நாமே சில சந்தர்ப்பங்களில் நாசம் விளைவிக்கும் நீசர்களாகி விடுகிறோம். பொல்லாங்கு பலவற்றுக்கும் பொறுப்பாளியாகி விடுகிறோம்.

இத்தகைய மாறுபட்ட குணங்கள் எம்மிடமே உதயமாகின்றன. எம்முள்ளத்திலேயே நன்மையும் தீமையும் விளைகின்றன. இத்தகைய நன்மை தீமை குழந்தைகளை நமது மனமாகிய தாயே பிறக்க வைக்கின்றாள். தீய சக்திகளைத் தூண்டும் கருத்துக்கள் தலை தூக்கும் போது நமது உள்ளமெனும் தாயே அத்தீயவற்றைத் தாக்கி அளிக்கும் வல்லமையைப் பெறுவாள். ஆகவே அத்தீயவற்றை அழிக்கவல்ல சக்திபெற்ற தாயைத் தொழுது நல்லவை எனும் ஒளி பரவ வேண்டுதல் செய்ய வேண்டும்.

தீப ஒளியை வெளியே வரிசையாக ஏற்றும் நாம் தீமை எனும் இருளை அகற்றும் உள்ளொளியைப் பெருக்கிட ஏற்ற நந்நாளாக தீபாவளி நாளை நாம் ஏற்று கொண்டாடுவோம்.

## கிறிஸ்தவப் போதனைகள்

உலகத்தில் பலராலும் வாசிக்கப்படும் நூல் பரி. வேதாகமம். இதை வாசிப்பதன் மூலம் அதனுள் அடங்கியுள்ள சத்தியத்தை அறிந்து, அநேகமானவர்கள் தமது வாழ்க்கையின் குறிக்கோள்களைக் கண்டடைந்துள்ளனர்.

பரி.வேதாகமத்தின் மூலமாக நமக்கு அநேகமான வழிகாட்டல்கள் கிடைக்கின்றன.அவற்றில் புதிய ஏற்பாட்டில் லூக்கா எழுதிய சுவிசேஷத்தினூடாக எடுக்கப்பட்ட முக்கியமான சில பகுதிகள்:

பகைவரிலும் அன்பாயிருங்கள்:

"கேளுங்கள்! எனக்குச் செவிசாய்க்கும் எல்லோருக்கும் நான் சொல்கிறேன். பகைவரிடம் அன்பாயிருங்கள். உங்களை வெறுக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களின் மகிழ்ச்சிக்காக ஜெபியுங்கள். உங்களுக்கு தீங்கு செய்கிறவர்களுக்கு, இறைவனின் ஆசிர்வாதம் கிடைக்கும்படி மன்றாடுங்கள்......"

பிறருக்குத் தீர்ப்பளித்தல்:

பிறரில் குற்றங்களைக் காணவோ, குற்றத் தீர்ப்பு வழங்கவோ வேண்டாம். ஏனெனில் உங்களுக்கும் அதே போல் தீர்ப்பு வழங்கப்படும்.

மற்றவர்களைக் கண்டனம் செய்யாதீர்கள்; அப்பொழுது நீங்களும் கண்டனம் பெறமாட்டீர்கள். மன்னியுங்கள்; அப்பொழுது இறைவன் உங்களை மன்னிப்பார். கொடுங்கள்; அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். குலுக்கி அமுக்கி, மேலும் நிரப்பி, நிறைந்து வழிந்து; கொட்டுமளவிற்கு, உங்கள் கொடைகள், உங்களிடம் திரும்பி வரும். நீங்கள் கொடுக்கும் போது, அளக்கும் அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.

இறைவனுக்கே பயப்படுங்கள்:

"என் அன்பிற்குரிய நண்பரே! உங்களைக் கொலை செய்ய விரும்புகிறவர்களுக்குப் பயப்பட வேண்டாம். அவர்களால் உங்கள் உடலை மாத்திரமே கொல்ல முடியும். அவர்களுக்கு உங்கள் ஆத்மாவின் மேல் அதிகாரம் இல்லை. ஆனால் நீங்கள் யாருக்குப் பயப்பட வேண்டும் என்று உங்களுக்குக் கூறுகிறேன். உங்களைக் கொல்லவும், அதன்பின் நரகத்திலே தள்ளவும் அதிகாரமுள்ள இறைவனுக்கே பயப்படுங்கள்."

இயேசுவே உலகத்தின் ஒளி:

நானே உலகத்தின் ஒளி. எனவே என்னைப் பின்பற்றுகிறவன் ஒரு போதும் இருளில் நடக்கமாட்டான். அவன் மெய்வாழ்வாகிய ஒளியைப் பெற்றிருப்பதால் இருளில் இடறி விழமாட்டான்.

ஆம், இவற்றைச் சற்று சிந்தித்துப் பார்க்குமிடத்து எவ்வளவு பெரிதான சத்தியங்கள் அடங்கியிருக்கின்றன. எங்களுடைய நடைமுறை வாழ்க்கையிலும் இவற்றை மனதில் கொண்டு நடப்போமாக. அப்போது எங்களுடைய வாழ்க்கை எங்களுக்கும், அநேகருக்கும் பிரயோஜனமுள்ளதாய் அமையும். நாம் கடவுளுக்குப் பயந்து நடப்போம். அவருக்கே துதி கன மகிமையைச் செலுத்துவோம்.

தொகுத்தவர்:மேரி ஜேக்கப்

## கடுஞ் சோதனை

ஒரு சமயம் ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ தொடர்ச்சியாக ஏழு நாட்கள் நோன்பு வைத்து, நோன்பு திறக்காமலும், தூங்காமலும் இருந்தார். ஏழாம் நாள் பசியின் கொடுமை அதிகரித்துவிட்டது. அப்போது ஒருவர் வந்து சாப்பாடு கொடுத்து விட்டுச் சென்றார். அம்மையார் அந்த ஆகாரத்தை வாங்கி எடுத்து வைத்துவிட்டு விளக்கேற்றினார். அதற்குள் ஒரு பூனை வந்து சாப்பாட்டை கவிழ்த்து விட்டுச் சென்றது. எனவே, நோன்பு திறப்பதற்கு வேறு வஸ்து இல்லாமல், தண்ணீர்க் கூஜாவை எடுத்து வரலாமென்று எண்ணினார். தண்ணீரும் கொண்டு வந்தார். அதற்குள் விளக்கும் அணைந்து விட்டது! தண்ணீர் குடிக்க முயன்றார். ஆனால், கூஜா கீழே விழுந்து உடைந்து விட்டது! இந்நிலைமையில், அம்மையார், துயரமடைந்து, "ஆண்டவனே இதென்ன இரகசியம்" என்றார்.

உடனே, "ராபியாவே! உலகிலுள்ள பெரும்பேறுகள் அனைத்தையும் உனக்கு நான் கொடுத்துவிட வேண்டுமென்று விரும்புகிறாயா? அப்படியானால், உன் உள்ளத்தில் இருந்து என்னைப் பற்றிய துக்கத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வேன். ஏனென்றால், ஒரே உள்ளத்திலே உலகப் பேறுகளும் என்னுடைய துக்கமும் இருப்பது அசாத்தியம். ராபியாவே! உனக்கு ஓர் ஆசை இருக்கிறது. எனக்கும் ஓர் ஆசை இருக்கிறது. இரண்டு ஆசைகளும் ஒரே இடத்தில் இருக்க முடியாது" என்று அசரீரி வாக்கு உண்டாயிற்று.

இதைக் கேட்ட அம்மையார் உடனே, "ஆண்டவனே! உன்னை விட்டுப் பிறர் என்னை விலக்காதிருக்கும்படி உன் நினைவிலேயே என்னைச் செலுத்தி விடு" எனப் பிரார்த்தித்தார். மேலும், மக்களிடமிருந்து விலகி வசிக்க ஆரம்பித்தார். ஒவ்வொரு தொழுகை நேரத்திலும், "இது தான் என்னுடைய இறுதித் தொழுகை!" என்று நினைத்துக்கொள்வார்.

தொகுத்தது: செல்வி சித்தி மபாஹிரா ஷாபி அவிசாவளை.

# ஸ்போர்ட்ஸ்

## அகாஸி+வெண்டி = 4 குழந்தைகள்

### ஒரு விளையாட்டு வீரனின் காதல் கதை

டென்னிஸ் வீரர் அகாஸியைப் பற்றி விளையாட்டுலக ரசிகர்களுக்கு தெரியும்.


விம்பிள்டன் சாம்பியனாகவும் வெற்றிப் பவனி வந்தவர் அகாஸி.

அரங்கிலே தோன்றி ஆவேசமாக டென்னிஸ் ஆடும் அகாஸியின் மறுபக்கத்தினை அறிய வேண்டாமா?

அவரது மனைவி வெண்டி தமது காதல் கதையை சுவைபடக் கூறுகிறார்:

ஆன்ட்ரே அகாஸியின் அப்பா ஈரானைச் சேர்ந்த ஒலிம்பிக் பொக்ஸர். லாஸ் வேகாசில் எங்கள் குடும்பங்கள் பக்கம் பக்கமாக வசித்தன. எங்கள் பழக்கம் இருபது ஆண்டுகளாக அப்படி.

எங்கள் காதலுக்குப் பதினைந்து வயது. ஏழு வயதாக இருக்கும் போதே மணலில் இதய வடிவத்தில் ஒரு படம் வரைந்து என் பெயரையும் அதற்குள் அகாஸியின் பெயரையும் எழுதிய ஞாபகம் இன்றும் பசுமையாக என் மனத் திரையில் பதிந்திருக்கிறது.



அகாஸிக்கு சின்ன வயதிலேயே டென்னிஸ் பைத்தியம். வீட்டின் கொல்லைப்புறம் அவன் ரக்கெட்டை வைத்துக் கொண்டு விளையாடுவான். நான் ஒரு நாய்க் குட்டிபோல் அவன் பின்னாலேயே பந்துகளை எடுத்துப் போட்டுக் கொண்டு திரிவேன்.

என் காதலை நான் சங்கேதமான பாஷையில் ஒருநாள் அகாஸியிடம் தெரிவித்தேன். வெண்டி+ அகாஸி= நான்கு குழந்தைகள்.

13 வயதாகும் போது அகாஸி டென்னிஸ் பயிற்சிக் காக என்னைப் பிரிய நேரிட்டது. 16 வயதில் அவன் டென்னிஸ் ஏணியில் எத்தனையோ படிகள் ஏறிவிட்டான். அதே நேரம் அவனுக்குச் சரியான ஒரு சிநேகிதியும் கிடைத்தாள் என்பது எனக்குப் பொறாமை தருகிற விஷயமாக இருந்தது.

அமிமோஸ் என்பது அவளது பெயர். செந்நிறக் கூந்தலும், பேரழகும் படைத்த கவர்ச்சிக்கன்னி அவள், அவளைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. அகாஸி எந்தப் பெண்ணையும் வசீகரித்து விடுவான். கடவுள் அவனுக்கு அப்படி ஒரு தோற்றத்தையும், சுபாவத்தையும் கொடுத்திருக்கிறார்.

என்னுடைய நல்லகாலம் அமி- அகாஸி அற்பாயுசுக் காதல் (அதைக் காதல் என்று ஒப்புக்கொள்ள மாட்டேன். வெறும் crush தான் அது) அந்தக் காதல் இரண்டு ஆண்டுகளே நிலைத்தது. வெண்டி..... அகாஸி காதல்தான் உண்மையானது. நிரந்தரமானது.

அகாஸி எனக்காகப் பிறந்தவன். நாங்கள் made for each other. டென்னிஸ் ஆட்டத்தில் அவன் எத்தனையோ மேடுபள்ளங்களைப் பார்த்தான். உடல் வலிமையை, உளவுறுதியை அவன் அதிகரித்துக் கொள்ள அவன் பட்ட இன்னல்கள் சொல்லி முடியாது. எடை தூக்கும் அசுரத்தனமான பயிற்சிகளிலும் அவன் ஈடுபட்டதுண்டு.

அடுத்த ஆண்டு விம்பிள்டனில் எப்படியும் அவன் வெற்றி பெறுவான் என்று எனக்கு முன்பே தெரியும். அவன் கோர்ட்டிலிருந்தபடியே என்பக்கம் திரும்புவான். எங்கள் விழிகள் சந்திக்கும். உடனே அவன் ஆட்டத்தில் ஒரு புதிய வேகம்.... உத்வேகம் பிறக்கும். எங்கள் காதலுக்கு அத்தனை ஆற்றல். விம்பிள்டன் கிண்ணத்தைக் கையில் வாங்கிய போது, முதலில் அவன் கண்கள் என்னைத்தான் ஏறிட்டுப் பார்த்தன. அவை 'எல்லாம் உனக்காக' என்று பரிபாஷை பேசின.

விம்பிள்டன் வெற்றி குறித்து அளித்த பேட்டியில் அவன் சொன்னான், இனி நாளையே எனக்கு மரணம் நேர்ந்தாலும் எனக்குக் கவலையில்லை. "என் இலட்சியம் நிறைவேறிவிட்டது", இது உண்மையில்லை. நாங்கள் நூறாண்டு வாழப்பிறந்தவர்கள். எங்கள் காதலை... எங்களை இறைவனால் கூடப் பிரிக்க முடியாது.

அகாஸிக்கு கோல்ப் மீது பைத்தியம் உண்டு. வேகமாகக் கார் ஓட்டுவது அவனுக் குக் கைவந்த கலை. உலகின் மிகச் சிறந்த லம்பார்ஜினி, டெர்ராரி, டெஸ்டா ரொஸா, கெடிலாக்.... இப்படி 25 வகையான கார்கள் அவனிடம் இருக்கின்றன. ஒரு வகையில் பார்த்தால் கார்களையும் அவன் காதலிக்கிறான் என்று தோன்றும். ஆனாலும் என்னைத்தான் அதிகம் நேசிக்கிறான் என்று அடித்துச் சொல்கிறேன்.

ஒவ்வொரு ஆணின் வெற்றியின் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள் என்கிறார்களே, அது நூற்றுக்கு நூறு உண்மை. அவனுக்கு வரும் கடிதங்களுக்கு நான்தான் பதில் எழுதுகிறேன். ராக்கெட்டுக்களைச் சரி செய்கிறேன். அவற்றின் நரம்புகளைக் கட்டுவது எப்படி என்றும் கற்றுக் கொள்கிறேன். ஒரு காதலிக்கு இதை விட வேறு சந்தோசம் என்ன இருக்க முடியும்?

ஆன்ட்ரே அகாஸி என்னும் கலகலப்பான வீரனுக்கு இந்த உம்மணா மூஞ்சிக் காதலியா? என்று பலர் கிசுகிசுப்பது என் காதில் விழுகிறது. அவர்களுக்கு என்ன தெரியும். அகாஸி விம்பிள்டன் கோப்பையை ஏந்திய நேரம் என் கண்களில் வழிந்த ஆனந்தக் கண்ணீரைப் பார்த்திருந்தால், அவர்கள் இப்படிப் பேசத் துணிய மாட்டார்கள். ■

## "வந்து பார்க்கட்டும் பாராளுமன்றத்திற்கு" விழுந்தும் மீசையில் மண்படாத பேச்சு!

அரசியல்வாதிகள் தமது விளையாட்டுத் திறமையை விளையாட்டரங்குவரை கொண்டுபோக நினைப்பதும் உண்டு.

இஸ்ரேல் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஆசை விடவில்லை.

இஸ்ரேலிய சுகாதார அமைச்சர் முதல் அந்த நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் கோணன் செகேவ் வரை றக்பி விளையாட்டில் குதித்தனர்.

அதுவும் யாரோடு என்கிறீர்கள்?

மஜிக் ஜோன்சன் குழுவோடு.

றக்பி விளையாட்டில் மஜிக் ஜோன்சன் குழு உலகப் புகழ் பெற்றது.

விசயம் தெரியாமல் மோதிய இஸ்ரேலிய நாடாளுமன்றக்குழு 18-6 என்ற கணக்கில் வாங்கிக் கட்டிக்கொண்டது.

அதுவும் இடைவேளைக்கு முன்னரே வாங்கிக்கட்டிவிட்டது.

இனியும் தாங்காது என்று போட்டி இடைவேளையோடு நிறுத்தப்பட்டது.

இஸ்ரேலிய குழுவின் முகத்தில் ஈயாடவில்லை.

என்றாலும் வாய்த்துடுக்குக்காரரான இஸ்ரேல் நாடாளுமன்ற உறுப்பினர் செகோவ் விழுந்தும் மீசையில் மண்பட வில்லை என்பது போல இப்படிச் சொன்னார்:



மஜிக் ஜோன்சன் குழுவினர்

"மஜிக் ஜோன்சன் குழுவினர் வேண்டு மானால் எங்கள் நாடாளுமன்றத்துக்கு வந்து தாக்குப் பிடிக்கட்டும் பார்க்கலாம்!"



நாம் குறையாத தங்க-வைர நகைகள்.
எழிலூட்டும் எடுப்பான தயாரிப்புக்கள்.
குறித்த நேரத்தில் ஓடரை முடித்துத் தருவதே
எங்கள் தனிச்சிறப்பு.

அருள்
ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு—11.
தொ.பேசி: 436331

## தையல்மீது மையல் கொண்டான். மைபூசி மடிய நினைத்தான்.




தான் மையல் கொண்ட மங்கையவள் மணம்புரிய மறுத்து விட்டாள் என்றவுடன், தன் உடல் முழுவதும் மைபூசிக்கொண்டு மடிந்துவிட நினைத்தான் அந்தக் காளை.

நடந்த கதை இது. நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்.

கோல்ட்ஃபிங்கர் என்ற படத்தில் (தங்கவிரல்) தன் உடல் முழுவதும் தங்க வர்ணம் பூசிக்கொண்டு நடித்தவர் ஷேர்லி ஈட்டன் என்ற நடிகை.

படம் வெளியாக முன்னரே நடிகை மடிந்துவிட்டார்.

உடல் முழுவதும் தங்க வர்ணம் பூசிக் கொண்டு நடித்த காரணத்தால் அவர் கதை முடிந்து போனதாகப் பேசப்பட்டது.

அந்த நடிகையின் முடிவைக் கேள்விப்பட்ட ஜெர்மன்காரர் ஒருவர் தனது உடலில் நீல மையைப் பூசிக்கொண்டு தனது வாழ்வை முடித்துவிட முயற்சி செய்தார்.

அவரது காதலி ஏமாற்றிவிட்டதாக கவலை யடைந்து சாவைத் தழுவிக்கொள்ள திட்ட மிட்டாராம்.

எனினும் மருத்துவர்களால் அவர் காப்பாற்றப்பட்டார்.

அவர் உடலில் பூசிய மையில் நச்சுத்தன்மை இல்லாமையால் அவரைக் காப்பாற்ற முடிந்திருக்கிறது.

மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்ட அந்த நபர் இப்போதும் இடைக்கிடையே நீல மையைப் பூசிக்கொண்டு தெருவில் அலைகிறார்.




வாரமலர்
தினமுரசு

## ஓரே எறி





கூடைப்பந்தாட்டத்தில் அதிக தூரத்திலிருந்து கோல் போட்டு சாதனையினை நிலைநாட்டியவர் இவர்தான். இவர் ஒரு உலக நிலைப்பாளர் சாதனை.

27.49 மீட்டர் (90 அடி 2 அங்குலம்) தொலைவிலிருந்தே கோல் தூணில் பொருத்தப்பட்டிருந்த வலைக்குள் பந்தை வீசினார். 1985 பெப்ரவரி 25ம் திகதி எடி அந்த சாதனையை செய்து கின்னஸில் தன் பெயரைப் பொறித்துக் கொண்டார்.

அமெரிக்காவிலுள்ள மெம்பிஸ்சிலேவில மாநிலத்தில் எடி என்ற நகரில் இப்போட்டி இடம் பெற்றது.

## வீட்டுக்குள் வரும் விளம்பரங்கள்




இது விளம்பர யுகம். நீங்கள் விரும்புகிறீர்களோ இல்லையோ விளம்பரங்களைக் கண்டேயாகவேண்டும்.

தொலைக்காட்சியில் சுவையான நிகழ்ச்சி ஒன்றில் நீங்கள் உங்களை இழந்திருக்கும் போது திடீரென்று விளம்பரம் கண் எதிரே தோன்றும்.

சலிப்பூட்டிவிடக்கூடாது என்பதற்காக கனிபூட்டக் கூடியவகையில் விளம்பர உத்திகள் கையாளப்படுகின்றன. கவர்ச்சிக்கு முதலிடம் கொடுத்து கண்களை விரிய வைப்பது. பின்னர் தமது நிறுவனத்தின் தயாரிப்பை உங்கள் மனதில் பதிய வைப்பது அதுதான் நோக்கம்.

அதற்காக கட்டுமீறு வரையும் கவர்ச்சியை கொண்டுபோகவும் தயார்தான்.

சில விளம்பரங்கள் அர்த்தமற்றவையாக இருக்கும். அவை விளம்பரப்படுத்தும் பொருளுக்கும் காட்சிக்கும் சம்பந்தமே இருக்காது.

இந்த ஆடையை அணிந்தால் தேடிவே நின்று திருமணமாகும் என்று விளம்பரப்படுத்திப் பொய் சொல்வதும் உண்டு.

வெளிநாட்டுத் தொலைக்காட்சி சேவைகள் வான்வெளி தாண்டி இங்கும் வீடுகளுக்குள் வந்துவிட்டதால் பிரமாண்டமான பிரமிப்பூட்டும் விளம்பரங்கள் தொழில்நுட்ப சாகசங்களுடன் அடிக்கொருதடவை சின்னத் திரையில் எட்டிப் பார்க்கின்றன.

சில விளம்பரங்கள் அதிக கவர்ச்சி என்று நம் நாட்டில் வெட்டப்பட்டாலும் கூட தொடர்ந்தும் வெளிக்கொண்டுவருவது முடியாது என்பது சந்திக்கவேண்டியது.








கோட்சேக்கள் வாழும் பூமியிது. கருவிகள் பேசும் காலமிது. காந்திகளுக்கும் இங்கே காவல் வேண்டும்.

—அதில் ஹிட்லரின் பாசிச கருத்துக்களை மறைத்துக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் புத்தகத்திற்கு கண்டனக் குரல்கள் எழுந்ததால் இப்போது தடைசெய்யப்பட்டு விட்டது.



—நல்ல முயற்சிகள் தவறாகிவிடுவதும், தடையாகி விடுவதும்தானே பிரச்சனைகளுக்கே காரணம். அங்கு மட்டுமல்ல இங்குந்தான்.

## புதிய அணிகள் களத்தில்

உதைபந்தாட்டத்தில் அடுத்த உலக சாம்பியன் யார்?

அதனை தீர்மானிக்கும் இறுதிப் போட்டிகள் அடுத்த வருடம் ஜூன் மாதம் அமெரிக்காவில் நடைபெறவுள்ளன. இப்போது அரையிறுதிப் போட்டிகள் ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்றுவருகின்றன. இம்முறை புதிய அணிகள் களத்தில் புகுந்துள்ளன.

இத்தாலியில் நடைபெற்ற போட்டியில் ஃபிலோஷ்காவெனுள் குழுவினர் முன்னணிக்கு வந்தனர். யாரும் எதிர்பாராத திருப்பம் அது. ஸிம்பாவே குழுவினருடன் அவர்கள் மோதும் நிலையில் உள்ளனர்.

உதைபந்தாட்ட போட்டிகள் ஒரு புறம் இருக்க, அடுத்த ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஆயத்தங்களிலும் சர்வதேச விளையாட்டு வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

விளையாட்டுலகில் ஒரே விறுவிறுப்புத்தான். வெற்றியே குறி.

## ஹிட்லரைக் கிழிக்கும் சித்திரப் புத்தகம்

ஜெர்மன் மக்களே ஆளப்பிறந்தவர்கள் என்று இனவெறி பேசி தன் சுய நலம் வளர்த்தவன் ஹிட்லர்.

இப்போது ஜெர்மன் நாட்டு பள்ளிகளில் 8வது வகுப்பு மாணவர்களுக்கு என்று ஒரு சித்திரப் புத்தகம் வெளியிடப்பட்டது. 300 பக்கங்கள் —



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை சோமாதேவி பிளேஸ், 68/14ஆம் இலக்கத்தில் நிரந்தர பதிப்பகத்தாரால் 25, வெல்லவத்தை, தூவையில் உள்ள சமலை அச்சகத்தில் நவம்பர் மாதம் 7ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.